Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 31 புதன்கிழமை (15.08.2012) பக்கங்கள் 20 ஓசை – 318





ஏமாற்றப்படும் பெண்கள்



03

வகுப்பறை Monitor



05

இலை மலர்ந்தது ஈழம்?



10

நல்லூர் கற்பூரம்



13

அனைவருக்கும் கிடைக்கும்



17

# இந்தியா தலைமையில் மனித உரிமை மீளாய்வு

(ஜெனிவா)

உலக நாடுகள் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பாக மீளாய்வு செய்வதற்காக இந்தியா தலைமையிலான குழுவை ஐ.நா. மனித் உரிமைகள் பேரவை நியமித்துள்ளது.

ஐ.நா.வின் அங்கத்துவ நாடுகளில் மனித உரிமைகளைப் பேணிப்பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்பட்டிருக்கும் பொறிமுறைகள் குறித்தும் அதன் ஊடாக இதுவரை அடையப்பட்டிருக்கும் இலக்குகள் குறித்தும் இந்தியா தலைமையிலான மேற்படி மீளாய்வுக் குழு ஆராய்ந்து அறிக்கை தயாரிக்கவிருக்கிறது.

அதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள சர்வதேச மனித உரிமைகள் மீளாய்வுக் கூட்டத்தில், இலங்கையின் மனித உரிமைகள் நிலைமையும் மீளாய்வு செய்யப்படவுள்ளது.


இந்தியாவின் தலைமையில் ஸ்பெயின், பெனின் ஆகிய நாடுகள் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றன. 4 வருடங்களுக்கு ஒரு முறை இந்த மீளாய்வு மேற்கொள்ளப்படுவது வழக்கம். உலக நாடுகளின் மனித உரிமை நிலவரம் குறித்து ஆராயும் நோக்கில் இந்த மீளாய்வு நடத்தப்படுகிறது. இந்த மீளாய்வுக் கூட்டம் ஒக்டோபர் மாதம் 22 ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதில் இலங்கை தொடர்பான நிலவரங்கள் நவம்பர் முதலாம் திகதி கலந்துரையாடப்படவுள்ளது.

இதற்காக இலங்கை தரப்பில் தயாரிக்கப்

19 ஆம் பக்கம் பார்க்க

நேற்றைய மாம்பழத் திருவிழாவின் போது ஆண்டியான நல்லூர் முருகன்...



## டில்லி விஜயம் இரத்து மாறுகிறது வியூகம்

(கொழும்பு)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையிலான உயர்மட்டக் குழுவினரின் இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயம் இரத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

அடுத்த வாரம் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த மேற்படி விஜயமே இவ்வாறு இரத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நட்புறவை மேலும் வளர்த்துக்கொள்வதற்காகவும் நடப்பு விவகாரங்களை இராஜதந்திர ரீதியாக கையாளுவதற்கும் இந்த விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கான தீர்வு மற்றும் போரால் பாதித்த பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களை உள்ளடக்கிய அறிக்கை ஒன்று இந்தியாவிடம் கையளிப்பதற்காக அரசினால் ஏற்கனவே தயாரிக்கப்பட்டது. ஆனால், முன்னைய கலந்துரையாடல்களில்

19 ஆம் பக்கம் பார்க்க

## கணினி மயமாகிறது வெளிநோயாளர் பிரிவு



### அமைச்சர் டக்ளஸ் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவை கணினி மயப்படுத்த விரைவான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை விடுத்துள்ளார்.

போதனா வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற வைத்தியசாலை அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின்போதே துறைசார்ந்தவர்களிடம் அமைச்சர் இப்பணிப்புரையை வழங்கினார்.

இதன்போது நோயாளர்களுக்கான கட்டில்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக உடனடியாக 200

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணத்தில் இந்திய சுதந்திர தினம்


(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் சுதந்திரதின நிகழ்வுகள் இன்று காலை பலாலி வீதி, கந்தர்மடத்தில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் நடைபெறவுள்ளது.

இன்று 9.00 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்வில் இந்திய துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் இந்திய தேசியக் கொடியை ஏற்றிவைப்பதுடன் இந்திய குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியின் உரையையும் வாசிக்கவுள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## அரசின் அபிவிருத்தி விமோசனம் தரவில்லை



(கொழும்பு)

அபிவிருத்தி மக்களை அழித்துக்கொண்டுசெல்கின்றதே தவிர மக்களை உயர்த்துவதாக காணப்படவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

வடமாகாணத்தில் மாபெரும் விவசாயப் போராட்டம் ஒன்றை தோற்றுவிப்பதற்கு அரசாங்கம் வழிவகுப்பதாகவும் அவர் தெரிவித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

வடமாகாணத்தில் அபிவிருத்தி என்ற போர்வையில் விவசாய நிலங்களில் மண் அகழ்வுகளை மேற்கொண்டும் தண்ணீர்

19 ஆம் பக்கம் பார்க்க

## வர்த்தக ஒத்துழைப்பு இரு தரப்பு ஒப்பந்தம்

(கொழும்பு)

சுவாஸிலாந்துக்கும் இலங்கைக்கும் இடையில் பொருளாதார, வர்த்தக மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு தொடர்பான ஒப்பந்தம் ஒன்று நேற்று ஜனாதிபதி செயலகத்தில் கையெழுத்திடப்பட்டது.

இலங்கையின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் சுவாஸிலாந்து சார்பில் 'அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர்

19 ஆம் பக்கம் பார்க்க

## பணிப் பகிஷ்கரிப்பு முடங்கியது பல்கலைக்கழகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் தொழிற்சங்க கூட்டமைப்பு நேற்று நண்பகல் யாழ். பல்கலைக்கழகம் முன்பாக தமது சம்பள அதிகரிப்பு உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அடையாள பணிப் பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர்.

நேற்று நண்பகல் 12.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் பல்கலைக்கழகத்தில் ஒன்றுகூடி தமது கோரிக்கைகள் அடங்கிய சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு இந்த அடையாள பணிப் பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர்.

மேலும் இவர்கள் யாழ். பல்கலைக்கழக வாயிலிலிருந்து

19 ஆம் பக்கம் பார்க்க

## தெரிவுக்குழு யோசனை காலம் கடத்தும் தந்திரம்

### சித்தார்த்தன் சாடல்

(கொழும்பு)

யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இவ்வேளையில் தீர்வை வழங்குவது சாத்தியமில்லை. யுத்தம் நிறைவடைந்ததும் தீர்வை வழங்குவோம் என இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளுக்கு இந்த அரசாங்கம் கூறிவந்தது.

ஆனால் மூன்று வருடம் கடந்துவிட்ட நிலையிலும் அதுபற்றி எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. மாறாக நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின்மூலம் பிரச்சினைக்கு தீர்வு காணலாம் எனக்கூறி காலத்தை இழுத்தடித்து விடலாம் என அரசு நம்புகிறது என புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் அரசு மீது கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை, உவர்மலையில் கடந்த ஞாயிறன்று

19 ஆம் பக்கம் பார்க்க

# கத்திமுனையில் திருட்டு
# சரவணையில் சம்பவம்

(சரவணை)

தீவுப்பகுதி சரவணை முதலாம் வட்டாரம் பகுதியில் அமைந்திருந்த வீடு ஒன்றினுள் நள்ளிரவில் புகுந்த திருடர்கள் அங்கு உறக்கத்தில் இருந்த முதியவரை கத்தி முனையில் அச்சுறுத்தி நகை மற்றும பணத்தை அபகரித்துச் சென்றுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 1.00 மணிக்கு நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் வயோதிபரின் கழுத்தில் கத்திவைத்து மிரட்டிய திருடர்களில் ஒருவர், முதியவர் அணிந்திருந்த மோதிரத்தையும் அவரிடம் இருந்த ஒருதொகுதி பணத்தையும் அபகரித்து தப்பிச்சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து அப்பகுதி பொதுமக்களால் ஊர்காவற்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதை அடுத்துச் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது.


இந்த நபர் மேலும் பல சைக்கிள் திருட்டுச் சம்பவம், கோழித் திருட்டுடன் தொடர்புபட்டிருப்பது விசாரணைகளின் மூலம் தெரியவருகின்றது. (பா)

# நீதிமன்றங்களுக்கு இப்போது விடுமுறை

யாழ்ப்பாணம் நீதிமன்றங்களுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது. சிறுவர் நீதிமன்றம், நீதவான் நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்றம் ஆகியன நேற்று முன்தினம் முதல் விடுமுறை விடப்பட்டு எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை மீண்டும் தொடங்கவுள்ளது.

யாழ். மேல் நீதிமன்றம் எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகும. உயர் நீதிமன்றமும், மேல் முறையீட்டு நீதிமன்றமும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது. (137)

# இரங்கல் செய்தி



## அமரர் மாணிக்கம் சபாநாதன் (நாதன்)

### இல.36, திருநகர் வடக்கு, கிளிநொச்சி.

கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆரம்பகாலத்தில் வெளிக்களப் பணியாளராக இருந்து சங்கத்தின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு உழைத்த அமரர் மாணிக்கம் சபாநாதன் அவர்களின் கூட்டுறவுச் சேவையினை நாம் நினைவுகூருவதுடன் அன்னாரின் அயராத கூட்டுறவுச் சேவையினால் கிளிநொச்சி மாவட்டத்தில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் இணையத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று கூட்டுறவு அமைப்புக்களுக்கும் அதன் அங்கத்தவர்களுக்கும், பணியாளர்களுக்கும் அளப்பரிய சேவைகளாற்றிய அன்னார் எமை விட்டுப் பிரிந்தாலும் அவரது சேவைகளை கூட்டுறவாளர் நாம் என்றும் மறந்துவிட முடியாது. அன்னாரின் பிரிவுத் துயரால் கண்ணீர் சிந்தும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தலைவர், பணியாளர்கள், அங்கத்தவர்கள்,
பொதுமுகாமையாளர், பணியாளர்கள், கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கிளிநொச்சி.

(C/1712)

# தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இளைஞர் யுவதிகளுக்கான தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு இன்று மாலை 4.00 மணிக்கு மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. இதனை மாதகல் நலன்புரிச் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

சில்லாலை மாதகல், பண்டத்தரிப்பு பிரதேச இளைஞர், யுவதிகளைக் கலந்து கொண்டு பயன்பெறுமாறு சங்கச் செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# ஞானச்சுடர் வெளிவந்துள்ளது

(வடமராட்சி)

செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப்பண்பாட்டுப் பேரவையினால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடர் மலரின் 175 ஆவது ஆடிமாத மலர் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை ஆலய பூசைகள் நிறைவு பெற்றதும் ஆச்சிரம மண்டபத்தில் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் நூல் வெளியீட்டுரையை சைவப் புலவர் திருமதி சசிலேகா ஜெயராஜன் வழங்கினார். இந்நூல் பல ஆன்மீகத் தகவல்களைத் தாங்கி வெளிவந்துள்ளது.(116)

# மேம்படுத்தல் வாரம்

(ஆனைக்கோட்டை)

தபாலகத்தின் வியாபார மேம்படுத்தல் வாரத்தினை முன்னிட்டு விசேட செயற்பாடுகள் தபாலகங்களில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் மானிப்பாய் தபாலகத்தில் தபாலகக் கொடியேற்றப்பட்டு நிகழ்வுகள் இடம்பெற்றது. அத்துடன் தபாலகம் அலங்கரிக்கப்பட்டதுடன் வாடிக்கையாளர்களுக்குச் சிற்றுண்டிகள், குளிர்பானம் என்பனவும் வழங்கப்பட்டது. வியாபார மேம்படுத்தல் வாரம் 13 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ளது. (104)

# கலந்துரையாடல் ஒத்திவைப்பு

தேசிய பாடசாலை அதிபர்கள், கோட்டக்கல்வி அதிகாரிகள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரிகளுடன் மத்திய கல்வி அமைச்சின் செயலாளருடன் இன்று பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற இருந்த கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும என வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

# லைலதுல்கத்ர் விசேட வழிபாடு

ஆயிரம் மாதங்களை விட சிறந்த ஓர் இரவான புனித லைலதுல் கத்ர் இரவு இன்றாகும். இன்றிரவு யாழ்ப்பாண்த்திலுள்ள அனைத்துப் பள்ளிவாசல்களிலும் மாலையிலிருந்து அதிகாலை வரை சுன்னத்தான தொழுகைகளும், பயன்களும், திக்ர்களும் இடம்பெறுகின்றன.

இவ்விரவில் அனேகமானவர்கள் பள்ளியில் இ:.திகாப் இருப்பார்கள். தானதர்மம் செய்பவர்களாகவும், நல் அமல்கள் புரிபவர்களாகவும், அல்லாஹ்வின் அருட்கொடைகளையும், பாவ மன்னிப்பையும் கேட்பவர்களாகவும் காணப்படுவார்கள்.

இவ்விரவில் கேட்கப்படும் பிரார்த்தனை (துவா) அல்லாஹ்வால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. பாவங்கள் புரிந்தவர்கள் தமது விமோசனத்திற்காக இவ்விரவில் கண்ணீர் மல்க அழுது பிரார்த்தனை புரிந்து பாவமன்னிப்புக் கேட்கும் தினமாகும். (105)

# அறிவித்தல்

## அற்றோனி தத்துவம் இரத்து செய்தல்

லோட்டன் வீதி, மானிப்பாய் தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்தவர்களும் தற்போது 6/30 - 34, பிறின்ஸ் வீதி ஓட்லண்ட், நியூசவுத் வேல்ஸ் 2117, அவுஸ்ரேலியாவில் வசிப்பவர்களுமாகிய துரையப்பா கந்தசாமி அவர் மகன் கந்தசாமி சிவரஞ்சன் ஆகிய நாங்கள் பொதுமக்களுக்கு இத்தால் அறிவிப்பதாவது, எங்களது "கரம்பன் வளவு" லோட்டன் வீதி, மானிப்பாய் தெற்கு, மானிப்பாய் காணியை விற்கும் பொருட்டு எங்களால் உசன், மிருசுவிலைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவகரன் என்பவருக்கு வழங்கப்பட்ட விசேட அற்றோனி தத்துவம் இத்தால் இன்று முதல் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட காணி சம்பந்தமாக சின்னத்தம்பி சிவகரனால் எதுவும் செய்யப்படின் இன்று முதல் அவற்றிற்கு நாம் பொறுப்புடையவராக மாட்டோமென்பதையும் அறியத்தருகின்றோம்.

துரையப்பா கந்தசாமி - கந்தசாமி சிவரஞ்சன்

14.08.2012

(C/1692)

# தினமுரசின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்



7 ஆவது அகவையில்

HAPPY BIRTHDAY

பெயர்: யோ.டினோஸ்கான்
முகவரி: சாட்டி மாதாகோவிலடி, வேலணை கிழக்கு.



6 ஆவது அகவையில்

HAPPY BIRTHDAY

பெயர்: ம.லக்சிகன்
முகவரி: 4 ஆம் வட்டாரம், வேலணை.

# 30 வருடங்களாகத் திருத்தப்படாத தம்பாலை-அச்சுவேலி வீதி

(வடமாரட்சி)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்திற்கு செல்லும் தம்பாலை வீதி ஊடான தொண்டைமானாறு அச்சுவேலி பாதை பல வருடங்களாக திருத்தப்படாமல் உள்ளதால் இவ்வீதியூடாகப் பயணிக்கும் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

30 வருடங்களாக திருத்தப்படாத மேற்படி வீதி குண்டும் குழியுமாக கவனிப்பாரற்று காணப்படுவதால் இவ்வீதியூடாக பணயத்தை மேற்கொள்வோர் பயணம் செய்ய முடியாது சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு செல்லும் பிரதான வீதியாக காணப்படுவதால் போக்குவரத்துக்கு முக்கிய வீதியாக காணப்படுகிறது. செல்வச்சந்நிதி ஆலய திருவிழா ஆரம்பமாகவுள்ள நிலையில் பல்லாயிரம் பக்தர்கள் இவ்வாலய தரிசனத்திற்காக இவ்வீதி ஊடாக வருகை தரவுள்ளனர்.

அது மட்டுமன்றி தென்னிலங்கையிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளும் பெருமளவில் இவ்வாலயத்திற்கு வருகை தருவதால் வாகனப் போக்குவரத்துக்களும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதேவேளை ஆலயத்திற்கு வரும் பக்தர்களின் சிரமங்கள் தொடர்பில் ஆலய நிர்வாகத்தினரால் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் உரிய அதிகாரிகளுக்கு கடிதம் மூலம் சமர்ப்பித்தும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனத தெரிவிக்கப்படுகிறது.

ஆலயத் திருவிழா ஆரம்பிக்கப்பட்ட பின்னர் காவடிகள் என்பன அதிகளவில் இவ்வீதியாலேயே செல்வதால் இவ்வீதி புனரமைக்கப்படவேண்டும் என பலதரப்பினர் தெரிவிக்கின்றனர்.

புனரமைக்கப்படாத இவ்வீதியால் வாகனப் போக்குவரத்துக்கள் இடம்பெறும் போது விபத்துக்கள் ஏற்படும் அபாயமும் காணப்படுவதாக மக்கள் சுட் டிக்காட்டுகின்றனர். எனவே இவ்வீதியைப் புனரமைப்பதுடன் 2 கிலோமீற்றர் தூரத்திற்கு வீதி மின் விளக்குகளையும பொருத்த உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (116)

# போலிமுகவர்களால் ஏமாற்றப்படும் பெண்கள்

(மாங்குளம்)

கிளிநொச்சி மாங்குளம் போன்ற வன்னிப் பிரதேசங்களில் அரசாங்கத்தில் பதிவுசெய்யப்படாத அரசசார்பற்ற முகவர்கள் பெண்களின் வாழ்க்கையை சீரழிக்கின்றார்கள் என வன்னி மாவட்ட பெண்கள் அமைப்பு குற்றஞ் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக தெரியவருவதாவது வன்னியிலுள்ள விதவைகள் மற்றும் கல்வி கற்று வீட்டிலிருக்கும் பெண்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பு, கொழும்பில் வேலைவாய்ப்பு எனக் கூறி அவர்களின் வாழ்க்கையை சீரழிப்பதாக தெரிவிக்கின்றனர்.

எனவே உரியவர்கள் இதனைக் கவனத்தில் கொண்டு வன்னிப் பெண்களின் வாழ்க்கையை காப்பாற்றுமாறும், அறிமுகமில்லாத முகவர் தொடர்பு கொண்டால் உடனடியாக அருகிலுள்ள கிராம சேவகரிடமோ அல்லது பொலிஸ்நிலையத்திலோ முறைப்பாடு செய்யுமாறு வன்னி மாவட்ட பெண்கள் அமைப்பு தெரிவித்துள்ளது. (12)

## தபால் மா அதிபர் நெடுந்தீவுக்கு விஜயம்

(நயினாதீவு)

நெடுந்தீவு மற்றும் நயினாதீவு பிரதேசத்தின் தபால் சேவைகள் குறித்து ஆராயும் வகையில் தபால் மா அதிபர் எம்.கே.பி. திஸநாயக்கா அப்பிரதேசங்களிற்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை விஜயம் மேற்கொண்டார்.

அங்கு விஜயம் மேற்கொண்ட அவர் பிரதேசங்களின் தபால் சேவைகள் குறித்து தபால் அலுவலக அதிகாரிகளுடன் கலந்துரையாடலை மேற் கொண்டார். இக்கலந்துரையாடலில் தபால் திணைக்கள உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (125)



## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று...

(நல்லூர்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் ஆன்மிக சிந்தனையும் சமய சொற்பொழிவும் கலைநிகழ்வுகளில் சப்பரத் திருவிழாவான இன்று சைவ தத்துவம் என்னும் விடயம் பற்றி இரா. செல்வவடிவேல் சிறப்புச்சொற்பொழிவாற்றவுள்ளார்.

கலைநிகழ்வுகளில் சுழிபுரம் கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப்பாடசாலை, கோப்பாய் சித்திர வேலாயுதர் கோயில், அரியாலை சித்திவிநாயகர் ஆகிய அறநெறிப்பாடசாலைகளின் மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கில் இன்று மாலை 6.45 மணிக்கு பொன்.ஸ்ரீ வாமதேவனின் பாட்டுக் கச்சேரி இடம்பெறவுள்ளது.


இதில் அணிசேர் கலைஞர்களாக வயலின் கே.குகபரன், மிருதங்கம் எஸ்.துரைராசா முகர்சிங், எஸ்.செல்லத்தூரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நல்லூர் மகோற்சவ காலத்தை முன்னிட்டு சைவத்தமிழ் பண்பாட்டு கழகத்தினால் நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராசா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் நடத்தி வரும் "தெய்வீகப் பேருரைகளும் கலை நிகழ்வுகளும்" இன்று "பக்தியின் மொழிதமிழ்" என்ற தலைப்பில் திரு.சிவஉமாசுதன் சிறப்பு சொற்பொழிவாற்றவுள்ளார்.

நல்லூர் மகோற்சவ காலத்தை முன்னிட்டு சொண்ட் நிறுவன அனுசரனையுடன் சின்மயாமிஷன் நடத்தும் ஆன்மிக அருளுரை நல்லூர் வடக்கு வீதியில் உள்ள மகேஸ்வரி மணிமண்டபத்திலே நடைபெறவுள்ளது. ஆன்மீக அருளுரையினை சின்மயாமிஷன் வடமாகாண விதிவிட ஆச்சாரியார் பிரம்மசாரி ஜாக்ரதசைதன்யா வழங்கவுள்ளார்.

சைவ மகாசபை நடாத்தும் இசைப் பேருரைத் தொடரில் நல்லை ஆதீன குருமூர்த்தி ஆலய மணிமண்டபத்தில் பிரம்மஸ்ரீ நித்தியானந்த சர்மா வழங்கும் கந்தபுராண சொற்பொழிவு இடம் பெறவுள்ளது அதே போல் மனோண்மணி அம்மன் ஆலயத்திலும் கலைநிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (42)

# நல்லூர் முருகனுக்கு இன்று சப்பரத் திருவிழா



## நேசமுறுங்காட்சியது !

சப்பரத்தி லேறிவருஞ் சண்முகனை நல்லூரிற்
எப்பொழுதுங் கர்ண இயலாது - தப்பாது
பாசங் குறுகப் பரம்பொருளோ டான்மாவும்
நேசமுறுங் காட்சியது காண்.

-நல்லூர் கந்தன் பாமாலை-

## சப்பரத்தில் காட்சி தரும் கந்தனே!

தங்க வடி வேலவனுக்கு - நல்லூரனுக்கு
இன்று பெரிய சப்பரத் திருவிழா
பெருவீதியில் பெரிய சப்பரம் தரிசிப்போம்
இது சமய அடியார் வருந்தும் துயர்
தீர்க்க அருள் (மழை) பொழிந்திடுவாய்
உன்னை அடைய ஆசைப்படுகிறோம்
ஆசையை நீக்கி அருள்தாரும் ஐயா
உன் அருள் கண்டு தாழ்பணிவோம் நாம்!

-க.கனகராசா நல்லூர்-

## வேல்தவிர துணை ஏது!

சங்கடங்கள் தீர்த்தருள் புரிந்திட சரவணனே வாரீர்
சப்பரத்தில் எழுந்தருளி சகல வினைதீர்ப்பீர்
சத்தியத்தின் வித்தகனே சரணடைந்தோம் - உன்பாதம்
வேல்தவிர வேறுதுணை எமக்கேது உண்டையா

-எஸ்.வி.பிரசாத்-






# நாகர் கோவில் பாடசாலைக்கு தற்காலிக காவலாளி நியமனம்

கற்கோவளம் புனித நகர் பகுதியில் இயங்கி வரும் நாகர் கோவில் அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலையின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு இரவு வேளையில் பாடசாலையை கண்காணிப்பதற்கு ஒரு மாதகால தற்காலிக காவலாளி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாக பாடசாலையின் அதிபர் எஸ்.கண்ணண் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேற்படி பாசாலையில் கடந்த வாரம் டி.வி.டி.பிளேயர், கணினிக்குப் பொருத்தப்படும் கமரா, மற்றும் சம்பியன் கப் ஆகிய 20ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை இனந்தெரியாத நபர்கள் பாடசாலையின் அலுவலக கதவினை உடைத்து பின் அலுமாரியை உடைத்து களவாடியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து மேலும பாடசாலையின் சொத்துக்களை பாதுகாப்பதற்கான ஆலோசனை கூட்டத்தை தாம் கூட்டியதாகவும், அக்கூட்டத்தில் தற்போது பாடசாலை தவணை விடுமுறைக்கு மூடப்படுவதால் எமது பாடசாலையின் சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத் த முடியாத பாடசாலையாக இப் பாடசாலை உள்ளது.

எனவே இப்பாடசாலைக் கென அவசியமாகவும் அவசரமாக பாதுகாப்புக்'காக ஒருமாத காலத்திற்கு காவலாளியை நியமிக்க வேண்டும் என இக் கூட்டத்தில் முடிவு செய்யப் பட்டது. இதனை அடுத்தே காவலாளி நியமிக்கப் பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (116)

# வல்வெட்டித்துறைப் பகுதியில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கை



(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறைப் பகுதியில் முதன் முறையாக டெங்கு நோயாளி ஒருவர் இனங்காணப்பட்டடுள்ளார். இதனை அடுத்து, கொத்தியாலையும் அதனைச் சூழ்ந்துள்ள 500 மீற்றர் தூரம்வரையுள்ள வீடுகள், கவனிப் பாரற்று இருக்கும் நிலங்கள் மற்றும் பாழடைந்துள்ள கிணறுகளுக்கு நுளம்புகளையும், நுளம்புக் குடம்பிகளையும் அழிக்கக்கூடிய வகையில் சுகாதார மருத்துவ பணிமனையுடன இணைந்து புகையூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இடம் பெயர்ந்தவர்களின் வீடுகள் மற்றும் கவனிப்பாரற்ற பற்றைகள் நிறைந்த காணிகளையும், பாழடைந்து அழுக்கேறிப்போயுள்ள கிணறுகளையும் சுத்தமாக வைத்து தொற்று நோய் ஆபத்துக்களில் இருந்து குழந்தைகளைக் காத்துக் கொள்ள உதவுமாறு வல் வெட்டித்துறை நகர சபைத் தலைவர். பொது மக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

நீ எப்போது யாருமற்ற ஏழை, எளியவர்களுக்கு உதவுகிறாயோ, அப்போது ஆண்டவன் உன்னிடம் 'கடன்காரன்' ஆகிறான். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## ஒலிம்பிக்: சாமான்யர்களும் சாதிக்கலாம்!

லண்டன் ஒலிம்பிக் சிறப்பாக நடந்து முடிந்துவிட்டது. 2016 ஆம் ஆண்டு தனது நாட்டில் இப்போட்டிகளை நடத்துவதற்காக ஒலிம்பிக் ஜோதியைக் கையேற்றுச் சென்றிருக்கிறது பிரேசில். நான்காண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகள் ஒவ்வொரு முறை விடைபெறும்போதும் உலக மக்கள் மனதில் விளையாட்டு மீதான ஆர்வத்தை மேலும் வளர்த்து விட்டுச் செல்கின்றன.

204 நாடுகளைச் சேர்ந்த பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட வீரர்களும் வீராங்கனைகளும் கலந்து கொண்ட இந்த போட்டியில் நம்மில் பலரும் அறிந்திராத குட்டி நாடுகள் கூட விளையாட்டில் சாதனை நிகழ்த்தி நம்மை வியக்க வைத்தன. ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் போது தான் உலகத்தில் இத்தனை நாடுகளும் வெவ்வேறு மனிதர்களும் வாழ்ந்து வருகிறார்கள் என்பதை ஆச்சரியத்தோடு ஒரே இடத்தில் பார்க்கிறோம்.

ஒரு குட்டித் தீவைக் கொண்ட நாடுகள் கூட இந்த போட்டியில் கலந்துகொண்டன. வல்லரசுகளாக இருந்தாலும் திறமை இருந்தால்தான் பதக்கம் வெல்ல முடியும். வலிமை மிக்க நாடுகளின் வீரர்களோடு மோதி சிறிய சிறிய நாடுகளும்கூட, தங்களது திறமையை வெளிப்படுத்தி சாதனை படைத்துள்ளன. குறிப்பாக ஜமைக்காவை கூற வேண்டும். 200 மீற்றர் ஓட்டப் போட்டியில், தங்கம், வெள்ளி, வெண்கலம் என மூன்று பதக்கங்களையுமே ஜமைக்கா வீரர்கள் பெற்று ஓட்டத்தில் வல்லரசாய்த் திகழ்ந்த அமெரிக்காவுக்கு அதிர்ச்சி கொடுத்தார்கள்.

ஒலிம்பிக் போன்ற சர்வதேசப் போட்டிகளில் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி போன்ற வல்லரசுகள் வெற்றி பெறுவதோ அல்லது பதக்கங்களை குவிப்பதோ பெரிய விஷயம் அல்ல. ஏனென்றால் அந்த நாடுகள் அனைத்தும் விளையாட்டு உட்பட அனைத்து துறைகளிலும் வலுவான அடிப்படைக் கட்டமைப்புகளை கொண்டவை.

அமெரிக்காவின் மக்கள் தொகையில் 30ல் ஒரு பங்கை கொண்ட கியூபா, ஜமைக்கா, எத்தியோப்பியா, லித்துவேனியா, டிரினிடாட் டொபாகோ, போர்ட்டோ ரிகோ, பஹாமாஸ், குவாதமாலா போன்றவை பல விளையாட்டுகளில் வல்லரசுகளுக்குச் சவாலாக இருந்தன என்பதே பெரிய விஷயம்.

கியூபாவின் 18 வயதே நிரம்பிய குத்துச்சண்டை வீரர் சிபோ கோஸ் தான் கலந்து கொண்ட முதல் ஒலிம்பிக் போட்டியிலேயே தங்கப் பதக்கத்தை வென்றது, தாய் புற்றுநோயால் அவதிப்படுகிறார் என்ற வேதனையிலும் டைவிங் பிரிவில் சிறப்பாக செயற்பட்டு 2 தங்கப்பதக்கத்தை வென்று தாய் நாட்டிற்கு பெருமை தேடித் தந்த சீன வீராங்கனை மின்சியா ஹூ, நாள்தோறும் பாடசாலைக்கு பல கிலோ மீற்றர் நடந்து செல்வதே எங்களுக்கு மரத்தான் தான் என்று சொன்னதோடு, பதக்கத்தையும் வென்று காட்டிய ஆபிரிக்காவில் மிகவும் வறுமையான நாடுகளில் ஒன்றான எத்தியோப்பியாவைச் சேர்ந்த வீரர்கள் போன்ற உண்மையான சாதனையாளர்களை இந்த ஒலிம்பிக்கில் பார்த்தோம்.

சுசந்திகாவுக்குப் பிறகு இலங்கையில் அந்த உற்சாகத்தைக் காணோம். கிரிக்கெட்டில் உலகைத் திரும்பிப் பார்க்க வைத்து சாதிக்க முடியுமென்றால் ஒலிம்பிக் விளையாட்டுகளிலும் அது முடியும். மக்கள் தொகையோ வறுமையோ சிறிய நாடென்பதோ இதற்குத் தடையில்லை. 302 தங்கப் பதக்கங்களில் ஒன்றையேனும் பெற்றுக்கொள்ளும் விளையாட்டில் உயர்வது நம்மால் முடியாததல்ல. - ஆசிரியர்

# அடிப்படை வசதியற்ற நிலையில் மாந்தை எள்ளுப்பிட்டி மக்கள்

(மன்னார்)

மீள் குடியேற்றம் செய்யப்பட்டு இரண்டு வருடங்களைக் கடந்த நிலையிலும் மன்னார் மாந்தை எள்ளுப்பிட்டி கிராம மக்கள் எவ்வித அடிப்படை வசதிகளுமற்ற நிலையில் வாழ்ந்து வருவதாக அந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மன்னார் பிரதேச செயலர் பிரிவில் குறித்த மாந்தை எள்ளுப்பிட்டி கிராமம் உள்ளது. 1990ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தத்தின் போது குறித்த கிராமத்தில் இருந்த அனைத்துக் குடும்பங்களும் இடம் பெயர்ந்த நிலையில் வேறு இடங்களில் வாழ்ந்து வந்தனர்.

இந்த மக்கள் இடம் பெயர்ந்து செல்வதற்கு முன் குறித்த கிராமத்தில் சுமார் 70 நிரந்தர வீடுகள் காணப்பட்டது. இந்த மக்கள் இடம் பெயர்ந்து சென்ற நிலையில் மீண்டும் கடந்த 2010 ஆம் ஆண்டு தமது சொந்தக் கிராமத்தில் மீள் குடியேற்றம் செய்யப்பட்டனர்.

அந்த மக்கள் குடியேற்றம் செய்யப்பட்ட போது அக்கிராமத்தில் இருந்த அனைத்து வீடுகளும் உடைக்கப்பட்டு தரை மட்டமான நிலையில் காணப்பட்டது. அந்த நிலையிலேயே குறித்த கிராமத்தைச் சேர்ந்த 106 குடும்பங்கள் குடியேற்றம் செய்யப்பட்டன.

இதன் போது இந்த மக்களுக்கு தன்னார்வத் தொண்டு அமைப்புக்கள் தற்காலிக வீடுகள் அமைப்பதற்கான பொருட்கள் மற்றும் மலசல கூட வசதி போன்றவற்றை வழங்கின. தற்போது குறித்த கிராமத்தில் 40 குடும்பங்கள் மட்டுமே வாழ்ந்து வருகின்றன.

எவ்வித அடிப்படை வசதிகளுமற்ற நிலையில் அந்த மக்கள் குடியேற்றம் செய்யப்பட்டமையினால் தமது தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலையில் அந்த மக்கள் அவர்களுடைய உறவினர்களுடைய வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

அரச திணைக்களங்களின் அதிகாரிகளோ அல்லது அரசியல் வாதிகளோ குறித்த கிராமத்திற்கு வருவதில்லை என அந்த மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். தற்போது தொடர்ச்சியாக வசித்து வரும் 40 குடும்பங்களும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றன.

குறித்த கிராமத்தில் தற்போது நீருக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குடிப்பதற்கும் ஏனைய தேவைகளுக்கு பயன்படுத்துவதற்கும் நீர் இல்லாமையால் அந்த மக்கள் சுமார் 2 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள திருக்கேதிஸ்வரத்திற்குச் சென்று நீரைப்பெற்றுக்கொள்கின்றனர்.

ஆனால் வாழ்வாதாரம் உள்ளிட்ட எந்த வித உதவிகளும் தற்போது கிடைப்பதில்லை என அந்த மக்கள் தெரிவிக்கின்றனர். விவசாயம் செய்வதற்கான நிலம் இருந்து கூட விவசாயம் செய்ய முடியாத நிலையில் மக்கள் உள்ளனர்.

மன்னார் பிரதேச சபையிடம் தமது கிராமத்தில் உள்ள பிரச்சினைகள் தொடர்பில் பல முறை தெரியப்படுத்தியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என அவர்கள் தெரிவிக்கின்றனர். மீள் குடியேற்றம் செய்யப்பட்டு இரண்டு வருடங்களைக்கடக்கின்ற போதும் இது வரை நிரந்தரமான எவ்வித அபிவிருத்தித்திட்டங்களையும் எமது கிராமம் கண்டு கொள்ளவில்லை.

எனவே நிரந்தர வீட்டுத் திட்டம் மின்சாரம் குடிநீர் போன்றவற்றை எமது கிராமத்திற்கு வழங்க உரிய அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்குமாறு அத்த மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# கட்டுக்கரை குளத்தின் நீர் மட்டம் குறைவடைந்தது

(மன்னார்)

நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியின் காரணமாக மன்னார் கட்டுக்கரை குளத்தின் நீரும் தற்போது வற்றி வருகின்றது. இதனால் மன்னார் மாவட்டத்தில் குடிநீருக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினூடாக மன்னார் மாவட்டத்தின் பல பாகங்களுக்கு குடிநீர்த் திட்டம் வழங்கப்பட்டுள்ளது. கட்டுக்கரை குளத்தில் இருந்து குடிப்பதற்கும், அப்பிரதேசத்தில் விவசாய நடவடிக்கைகளுக்காகவும் நீர் விநியோகிக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் தற்போது கட்டுக்கரை குளத்தை அண்டிய பகுதிகளில் கட்டுக்கரை குளத்தை நம்பி மேற்கொள்ளப்பட்டு வந்த நெற்பயிற்செய்கையும் பாதிப்படைந்துள்ளது. தற்போது கட்டுக்கரை குளத்தின் நீர் மட்டம் மிகவும் குறைந்த நிலையில் காணப்படுகின்றது.

இதனால் நெற்பயிற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளதோடு மக்களுக்கு குடிப்பதற்காக விநியோகிப்பதற்கு தற்போது நீர் மட்டம் காணாத நிலையில் உள்ளது. அத்தோடு குறித்த கட்டுக்கரைக் குளத்தில் அப்பகுதியில் உள்ள பலர் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டு வந்தனர்.

தற்போது அவர்களுடைய தொழிலும் பாதிக்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தில் மழை பெய்யாத நிலை தொடர்ந்தும் காணப்பட்டால் குறித்த மாவட்டத்தில் குடிநீருக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்படும் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# பாடசாலை சேவை வாகனங்களை வவுனியாவில் பதியுமாறு அறிவிப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் பாடசாலை சேவையில் ஈடுபடும் அனைத்து வாகனங்களையும் எதிர்வரும் மாதத்திற்கு முன்னர் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையிடம் பதிவு செய்யுமாறு வவுனியா மாவட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகாரி த.செல்வகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையானது நாடளாவிய ரீதியில் பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்களைப் பதிவு செய்து அனுமதிப் பத்திரம் வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது.

சிறுவர்களுடைய பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கும், பாடசாலை சேவை வாகனங்களுடைய தரத்தினை உறுதிப்படுத்துவதற்கும் ஓட்டுநர் மற்றும் உதவியாளர்களின் விபரங்களை சேகரிக்கும் நோக்கமாகவே இத்திட்டமானது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

வடமாகாணத்தில் முதற்கட்டமாக வவுனியா மாவட்டத்தில் முச்சக்கரவண்டி தவிர்ந்த பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்களை பதிவு செய்து அனுமதிப்பத்திரம் வழங்கும் நடைமுறையானது அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைவாக கடந்த 8 ஆம் திகதி 7 பாடசாலை சேவை வாகனங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

செப்ரெம்பர் மாதத்திற்கு முன்னர் அனைத்து பாடசாலை சேவை வாகனங்களுக்குமான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

செப்ரெம்பர் மாதத்திற்கு பின்னர் அனுமதிப் பத்திரம் பெறாத வாகனங்கள் சேவையில் ஈடுபடுவது கட்டுப்படுத்தப்படும். அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பப் படிவத்தினை வவுனியா மாவட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவித்தார்.

- நவாஸ் சௌபி

# வகுப்பறை Monitor ஒரு மீள்வாசிப்பின் அவசியம்

கல்வி தொடர்பான சிந்தனைகள், கொள்கைகள், முறைமைகள் யாவும் காலத்திற்குக்காலம் மாற்றமடைந்து வருகின்ற வரிசையில்இன்று நவீன சிந்தனைகளும் கொள்கைகளும் முறைமைகளும் கல்விச் சூழலில்புதிய புதிய கட்டமைப்புக்களை உருவாக்கி வருகின்றன.

நவீன போக்குகள், கல்விச் சூழலில் கட்டமைக்கப்பட்டாலும் மரபுசார்ந்த சிந்தனைகள், தொடர்ச்சியாக ஒன்றையே பின்பற்றும் விழுமியப் பற்றுதல்கள், மாற்றுச் சிந்தனைகள் பற்றிய தெளிவின்மைகள் போன்ற காரணங்களால் வளர்ச்சியடையாத பிரதேசப் பாடசாலைகளில் கல்விச் சூழலின் நவீன மாற்றங்கள் இன்னும் முழுமை பெறாத ஒன்றாகவே அவதானிக்கப்படுகிறது.

ஒரு விடயம் ஆரம்பத்திலிருந்து எவ்வாறு இருக்கிறதோ அதனை அவ்வாறே வழிநடத்துவதும், ஒன்றை அதைப் போன்றே சிந்திப்பதும் என்று கல்விச் சூழலில் பல விடயங்கள் மாற்றுச் சிந்தனைகள் அற்றும் மாற்று நடைமுறைகள் அற்றும் காணப்படுவதனையும் அறியலாம்.

இவற்றுள், வகுப்பறைகளில் நியமிக்கப்படும் Monitor குறித்து ஒரு மாற்றுச் சிந்தனை அல்லது ஒரு மீள் வாசிப்பு செய்வதாக இக்கட்டுரையின் நோக்கம் அமைகிறது.

Monitor எனும் சொல் ஆங்கிலேயர் காலத்திலிருந்து வந்திருப்பதனை அறிய முடிகிறது. ஆரம்பகாலங்களில் திண்ணைப் பாடசாலைகளில் 'சட்டம்பி' எனும் பெயரில் வகுப்பறை Monitor அழைக்கப்பட்டிருக்கிறார். சட்டம்பி என்பது 'சட்டாம் பிள்ளை' என்பதன் சுருக்கமாக அல்லது அதிலிருந்து மருவியதாக இருக்கலாம். இப்போதுகூட சபைகளில் யாராவது தலைதூக்கிப் பேசினால் அவரைப் பார்த்து 'நீ என்ன பெரிய சட்டம்பியா?' என்று கேட்கும் வழக்கு உண்டு.

Monitor எனும் ஆங்கிலச் சொல்லின் அர்த்த வெளிப்பாடு மாணாக்கத் தலைவன், என்றிருந்தாலும் அதன் செயற்பாடுகளின் அர்த்தங்கள் வழி நடத்துதல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்தல், விருத்தி செய்தல், ஒழுங்குசெய்தல் என பலவற்றை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது. வகுப்பறை ஒன்றை Monitoring செய்வதாக இதன் கடமை உணர்த்தப்படும்.

பொதுவாக, அதிகமான பாடசாலைகளில் காணப்படுகின்ற Monitor எனும் மாணாக்கத் தலைவர்கள் தொடர்பாக இரண்டு விடயங் களைக் கருத்தில் கொள்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.



**1. மாணாக்கத் தலைவர்களைத் தெரிவு செய்வதில் காணப்படுகின்ற விடயங்கள்.**

பொதுவாக மாணவத் தலைவரைத் தெரிவு செய்கின்ற போது அம்மாண வன், Monitor ஆக இருப்பதனால் தனது கல்வி பாதிக்கப்படாத அளவிற்கு கெட்டித்தனம் நிறைந்த ஒருவராக, தலைமை தாங்கும் ஆற்றல் ஆளுமை உள்ள ஒருவராக, வழி நடத்தும் இயல்புகளும் பண்புகளும் காணப்படு கின்ற ஒருவராக, ஆசிரியர்கள் சமூகமளிக்காத பாடவேளை களில்கற்றலுக்கு மேலதிக உதவிகளை வழங்கக் கூடிய ஒருவராக இருக்கவேண்டும் என்ற அடிப்படைகள் நிச்சயம் நிறைவேற்றப்பட வேண்டும்.



ஒரு விடயம் ஆரம் பத்திலிருந்து எவ்வாறு இருக்கிறதோ அதனை அவ்வாறே வழிநடத்துவதும், ஒன்றை அதைப் போன்றே சிந் திப்பதும் என்று கல்விச் சூழலில் பல விடயங்கள் மாற்றுச் சிந்தனைகள் அற்றும் மாற்று நடைமுறைகள் அற்றும் காணப்படுவதனை அறியலாம்.

ஆனால், Monitor ஒருவரைத் தெரிவு செய்கின்ற போது அதற்கான நோக்கத்தினை நிறைவு செய்யும் அடிப்படையில் அத்தெரிவு இடம் பெறுகிறதா? என்பதனை பின்வரும் தெரிவு முறைகளினூடாக அவதானிக்கலாம்.

**தரம் 06 இல் ஒரு மாணவன் அல்லது மாணவி மாணாக்கத் தலைவராக செயற்பட்டால் குறிப்பிட்ட அம்மாணாக்கரேயே அடுத்துவரும் ஒவ்வொரு வகுப்புக் களிலும் Monitor ஆக நியமிக்கும்தொடர் வழக்கு ஒரு நடைமுறையாகக் காணப்படுகிறது.**

**பெற்றோர்கள் ஆசிரியர்களாக அல்லது உயர்பதவிகளில் இருப்பவர்களாயின், அவர்களது பிள்ளைகளை Monitor ஆகத் தெரிவு செய்வதும் இயல்பான ஒரு நடைமுறையாகக் காணப்படுகிறது.**

**தோற்றம், உயரம், அழகு போன்ற வெளிப்படைக் காரணங்களை வைத்துக் கொண்டு அவ்வாறான மாணவர்களை Monitor ஆகத் தெரிவு செய்யும் சாத்தியங்களும் நிகழ்கிறது.**

மேலும், Monitor களாகச் செயற்படும் மாணவர்களது தலைமைத்துவப் பண்புகள் அச்செயற்பாடுகள் மூலம் வளர்க்கப்படுவதானது மிகமுக்கியமான ஒரு அம்சம். ஆனால் ஒரு மாணவரேயே தொடர்ந்துவருகின்ற ஒவ்வொரு வகுப்புக்களிலும் மாணவத்தலைவராக நியமித்துவருவதனால் ஏனைய மாணவர்களுக்கான இத்தகைய வாய்ப்புக்கள் வழங்கப்படாமலேயே அவர்களது பாடசாலை வாழ்க்கை முடிந்துவிடும் இழப்பு நிகழ்கிறது.

ஒரு வகுப்பறையில் சராசரி 30 - 40 வரையான மாணவர்கள் காணப்படுகின்றார்கள் இவர்களுக்குள் ஒரு Monitor ஐ மாத்திரம் தெரிவு செய்கின்றனர். அவ்வாறில்லாது வகுப்பறை ஒன்றிற்கான பல்வேறு செயற்பாடுகளையும் தனித்தனி தலைப்புகளாக்கி (உதாரணம் :- வகுப்பறைச் சுத்தம், தமிழ்மொழித் தினம், ஆங்கில மொழித் தினம், விளையாட்டு, வகுப்பறை நூலகம், வகுப்பறைக் காட்சிப் படுத்தல்,) என ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு Monitor ஐ தெரிவு செய்வது குறிப்பிட்ட வகுப்பிலுள்ள அதிகமான மாணவர்களின் தலைமைத்துவ ஆற்றல்களை வெளிப்படுத்த வாய்ப்பாக அமையும்.

எனவே, Monitor ஒருவரை நியமிப்பது தொடர்பாக மாற்று நடைமுறைகளும் சிந்தனைகளும் அற்று, தொடர்ந்தும் ஒரேவழியைப் பின்பற்றுவது, ஒரு வகுப்பறையில் காணப்படுகின்ற பல்வகை மாணவர்களின் ஆற்றல் ஆளுமைகளை இருட்டடிப்புச் செய்கின்ற ஒரு விடயமாக அமைந்துவிடுகிறது.

**மாணாக்கத் தலைவர்களின் செயற்பாடுகள் குறித்த விடயங்கள்.**

பொதுவாக இன்று வளர்ச்சியடையாத பாடசாலைகளில் Monitor என்பவர்களின் செயற்பாடுகள் அனைத்தும் விவாதத்திற்குரிய ஒரு விடயமாக இருப்பதனை அவதானிக்க முடிகிறது. அத்தகைய செயற்பாடுகளாக பின்வரும் விடயங்களைக் குறிப்பிடலாம்.

**திறந்த வகுப்பறைகளாக இருப்பதனால், ஆசிரியர் மேசைச் சீலை, பூச்சாடி, Duster, தும்புத்தடி என்பனவற்றை அதிபர் காரியாலயக் கட்டட அறையினுள் பத்திரப் படுத்தி, பாடசாலை ஆரம்பிக் கும்போது அவற்றை எடுப்பதும், பாடசாலை முடியும் நேரத்திற்கு மீண்டும் அவற்றை வைப்பதும்.**

**வெண்கட்டி, மாணவர் வரவு இடாப்பு என்பனவற்றை அதிபர் காரியாலயத்திலிருந்து வகுப்பறைக்கு எடுத்துவருவதும், வைப்பதும்.**

**ஒவ்வொரு பாடவேளைக்கும் மணி ஒலித்தவுடன் குறிப்பிட்ட பாட ஆசிரியர் பாடசாலையின் எந்த மூலையிலிருந்தாலும் அவரைத் தேடிப்பிடித்து "Sir, பாடம்" என்று நினைவுபடுத்தி ஆசிரியரை அழைத்துவருவது.**

**காலையில் உரிய நேரத்திற்கு முன் வந்து வகுப்புச் சுத்தம் செய் கின்ற மாணவர்களை வைத்து வகுப்பறையைச் சுத்தம் செய்தல்.**

**ஒரு வகுப்பில் ஆசிரியர் கற்பிக்கின்ற போது, அருகிலுள்ள வகுப்பில் ஆசிரியர் வருகைதராமல் மாணவர்கள் சத்தமிட்டுக் கொண்டிருந்தால் அந்த வகுப்பில் "சத்தமிடு கின்றவர்களைப் பிடித்துக் கொடுப்பது" என்று ஒரு Monitor வகுப்பறையில் மேற்கொள்ளும் கடமைகள் நீள்கிறது.**

இவ்வாறு Monitor என்பவர் ஒரு எடுபிடியாக, நாளாந்த கூலி வேலையாள் போன்று வழி நடத்தப்படுவதும் அவ்வேலைகளுக்காகவே ஒரு Monitor நியமிக்கப் படுகிறார் என்ற அர்த்தத்தோடு செயற்படுத்தப்படுவதும் எந்தவகையில் நியாயமாகிறது? இவ்வேலைகளை வகுப்பறையிலுள்ள எந்த மாணவரும் செய்ய முடியுமே? இத்தகைய பணிகள் யாவும் Monitor என்பவரின் தலைமைத்துவ ஆற்றல்களை முழுமையாக வளர்க்கக் கூடியனவா?

ஒவ்வொரு பாடவேளைக்கும் ஆசிரியர்களை அழைத்துவரச் செல்லும் வழக்கம் இன்றும் அதிகமான பாடசாலைகளில் காணப் படுகின்றது. இது Monitor களின் கட்டாயக் கடமை போன்றும் ஆகிவிட்டது. ஆனால், தவிர்க்கமுடியாத பாடசாலைக் கடமைகளைத் தவிர மற்றும் நேரங்களில் ஆசிரியர்கள் சுயமாக பாடங்களுக்குச் செல்வது ஆசிரியர்களின் கடமை. இக்கடமையினை அதிகமான ஆசிரியர்கள் சரியாகச் செய்கின்ற போதும், சில ஆசிரியர்கள் Monitor கள் வந்து அழைக்கும்வரை இருப்பது ஒரு இயல்பாகிவிட்டது.

ஆசிரியர்கள் சமூகமளிக்காத பாடவேளைகளில் வகுப்பில் சத்தமிடுகின்ற மாணவர்களைப் பிடித்துக் கொடுக்கும்போது, Monitor என்பவர் காட்டிக் கொடுக்கின்ற ஒருவராக அடையாளம் காணப்படுகின்றார். அவருக்குள் பிறரைக் காட்டிக் கொடுக்கின்ற பண்பும் இதன்மூலம் வளர்க்கப்படுகிறது. அத்துடன் ஏனைய மாணவர்களின் எதிரியாகவும் Monitor பார்க்கப்படுகின்றார். பாடசாலை முடிந்து வீடு செல்லும் வழியில் "என்னை ஏன் காட்டிக் கொடுத்தாய்" என்று பாதிக்கப்பட்ட மாணவர்கள் சண்டைபோடும் எத்தனையோ பிரச்சினைகள் இதன் மூலம் உருவாகியிருக்கிறது. இது ஒரு பாடசாலையில் காணப்படும் சமூகமயமாக்கல் பண்பை சிதைக்கிறது

Monitor என்பது சிறிய ஒரு விடயம்தானே என்று இவற்றை சாதாரணமாகக் கவனத்தில் எடுக்காது இருப்பது ஆரோக்கியமான ஒரு வகுப்பறைச் சூழலின் எதிர் காலத்தையே பாதித்துவிடும். இத்தகைய வழக்கமான நடைமுறைகளை தவிர்த்து Monitor இன் கடமைகளில் புதிய ஒழுங்குகளையும் நடைமுறைகளையும் ஏற்படுத்தக் கூடிய சிந்தனைகள் பாடசாலைக் கட்டமைப்பினுள் தோற்றுவிக்கப்பட வேண்டும்.

குறிப்பாக Monitor என்பவர், குறிப்பிட்ட வகுப்பு மாணவர்களின் மேலதிக கற்றல் விருத்திக்கான உதவிகளையும், பயனுள்ள விடயங்களில் அம்மாணவர்கள் கவனம் செலுத் தக்கூடிய வழிகாட்டல்களையும் செய்கின்ற ஒருவராகத் தலைமைத்துவப் பயிற்சி பெறவேண்டும்.

**வகுப்பறையில் நூலகவசதி ஒன்றினை ஏற்படுத்தி மாணவர்களுக்கானவாசிப்புப் பழக்கத்தினைத் தூண்டுதல்.**

**வகுப்பறையில் மாணவர் - மாணவர் உறவை விருத்தி செய்தல்.**

**வகுப்பறை மாணவர்களின் மனவெழுச்சி வெளிப்பாடுகளுக்கு ஏற்ப அவர்களை வழிநடத்தல்.**

**ஆசிரியர் சமூகமளிக்காதபாடவேளைகளுக்கு பாடசாலை நூலகத்திற்கு மாணவர்களை அமைதியாக அழைத்துச் செல்லல்.**

**கவர்ச்சிகரமான கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளும் வசதிகளைக் கொண்டதாக வகுப்பறைச் சூழலை காட்சிப்படுத்தல்.**

**மாணவர்களுடன் கலந்துரையாடுவதன் மூலம் ஒவ்வொரு மாணவர்களின் தனிப்பட்ட திறமைகளையும் ஆற்றல்களையும் அவதானித்து அது தொடர்பான பயிற்சிகளையும் செயற்பாடுகளையும் வகுப்பறைகளில் செய்தல்.**

**கற்ற பாடங்களை மீட்டுவதற்கான வினாவிடை மற்றும் வகுப்பறைப் பயிற்சிகளைச் செய்தல்.**

இதுபோன்ற பல்வேறு நடைமுறைகளை Monitor கள் செயற்படுத்துவதற்கான சாத்தியங்களுடன் உருவாக்குவது, அதற்கு பயிற்சி அளிப்பது, உதவிகளும் ஆலோசனைகளும் வழங்குவது போன்ற விடயங்கள் ஆரோக்கியமான ஒரு வகுப்பறைச் சூழலை உருவாக்கும்.

# தமிழரின் பிரச்சினைகளுக்கு சிங்கள மக்களிடம் தீர்வு

## என்கிறார் சுமந்திரன்



(கொழும்பு)

போர் நிறைவடைந்துள்ள போதிலும் தேசிய இனப் பிரச்சினைக்கு இதுவரையில் அரசியல் தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

காலியில் நடைபெற்ற சுதந்திரத்தின் மேடை என்னும் நிகழ்வில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

போர் இடம்பெற்ற காலத்தில் ஆட்சி செய்த அரசாங்கங்கள் ஐந்து தீர்வுத் திட்டங்களை முன்வைத்துள்ளன.

தற்போது தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட வேண்டியதில்லை எனவும் தற்போதைய அரசாங்கம் தெரிவிக்கின்றது. இது மிகவும் ஓர் பயங்கரமான நிலைமை.

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வுத் திட்டம் எதனையும் வழங்காவிட்டாலும், தெற்கு மக்கள் தீர்வுத் திட்டங்களை முன்வைக்க ஆர்வம் காட்டி வருகின்றனர்.

சிங்கள மக்கள் தமிழரின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவார்கள் என்ற நம்பிக்கை இருக்கின்றது என சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

# பதவி விலகுமாறு அச்சுறுத்தல்



(கொழும்பு)

தம்மைப் பதவி விலகுமாறு சில முதலீட்டாளர்கள் அச்சுறுத்தி வருவதாக கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தின் நிறைவேற்று அதிகாரி திலக் கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

ரொய்டர்ஸ் இணையத்தளத்துக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமக்கு எதிராக பரவியுள்ள போலியான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, சிலர் தம்மை பதவி விலக வேண்டும் என அச்சுறுத்துவதாக தெரிவித்துள்ள அவர், யாரையும் குறிப்பாகச் சுட்டிக்காட்டவில்லை.

பங்குச்சந்தையில் இடம்பெறுகின்ற விலை பெருப்பிப்பு மோசடி மற்றும் ஊழல் வர்த்தகம் குறித்து விசாரணை நடத்த அண்மையில் திலக் கருணாரட்ன உத்தரவிட்டிருந்தார்

# உலகில் கடன்பட்டு அமைக்கப்படும் அம்பாந்தோட்டை விமானநிலையம்

(கொழும்பு)

முழு உலகிலும் கடன்பட்டு அம்பாந்தோட்டையில் விமான நிலையம் அமைக்கப்படுவதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஹப்புத்தளைப் பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இவ்வாறு தெரிவிததார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டுக்கு ஒன்றிரண்டு மணித்தியாலங்களுக்கு ஒரு தடவையே விமானங்கள் தரையிறங்குகின்றன. சில நாடுகளில் நிமிடங்களுக்கு ஒரு தடவை விமானங்கள் தரையிறங்குகின்றன.

லண்டனில் இவ்வாறான ஓர் நிலைமையை நான் நேரில் பார்வையிட்டேன். இவ்வாறான ஓர் நிலைமையில் அரசாங்கம் முழு உலகத்திலும் கடன்பட்டு அம்பாந்தோட்டையில் விமான நிலையம் அமைக்கின்றது.

இந்தக் கடனைச் செலுத்த ஏழு தலைமுறைகளினாலும் முடியாது. 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் நியாயமான எனது வெற்றி தட்டிப்பறிக்கப் பட்டது.

மாற்றுக்கருத்துக்களை வெளியிடும் தரப்பினரின் குரல்கள் நசுக்கப்பட்டன. ஆசியாவின் ஆச்சரியத்தை ஏற்படுத்துவதாக நான் உங்களிடம் வாக்குறுதி அளிக்கப் போவதில்லை. பொய்யான வாக்குறுதிகளை அளிப்பதில் பயனில்லை.

நாட்டில் ஜனநாயகத்தை நிலை நாட்டுவதாக நான் உங்களிடம் வாக்குறுதி அளிக்கின்றேன்.

18ஆவது திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதன் பின்னர் பொலிஸ், நீதித்துறை போன்றன அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளன என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

# இரண்டு புதிய இரயில்கள் அடுத்தமாதம் இலங்கைக்கு

(கொழும்பு)

இலங்கைக்கு அடுத்த மாதத்துக்குள் இரண்டு இரயில்களை சென்னை ஐ.சி.எவ். தயாரித்து வழங்க உள்ளதாக ஐ.சி.எவ். தொழிற்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கைக்கு அனுப்பப்படவுள்ள இந்த இரண்டு இரயில்களிலும் தலா 6 பெட்டிகள் இருக்கும். மொத்தமாக 12 பெட்டிகள் கொண்ட இந்த இரண்டு இரயில்களின் இறுதிக்கட்ட கட்டுமானப் பணிகள் சென்னை வில்லிவாக்கம் ஐ.சி.எவ். தொழிற்சாலையில் நடைபெற்று வருகின்றன.

இலங்கைக்கு ரூ.120 கோடி மதிப்பீட்டில் தலா 6 இர்யில் பெட்டிகள கொண்ட 20 இரயில்களை செய்து தருவது தொடர்பாக இலங்கை அரசுக்கும், சென்னையில் உள்ள இரயில் பெட்டி இணைப்பு (ஐ.சி. எவ்) தயாரிப்பு தொழிற்சாலைக்கும் இடையே 2009ஆம் ஆண்டில் ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதுவரை 108 பெட்டிகள் கொண்ட 18 இரயில்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டுவிட்டன. இந்த நிலையில் 19ஆவது மற்றும் 20ஆவது இரயில் தயாரிக்கும் பணி தற்போது வேகமாக நடைபெற்று வருகிறது.


இந்த இரயில் பெட்டிகளின் மீது சிவப்பு, நீலம், வெள்ளை நிறங்களில் வண்ணம் தீட்டப்பட்டுள்ளது. இந்த ரயில்களின் பணி முழுவதுமாக முடிவடைந்த பின்பு, சென்னை துறைமுகத்தில் இருந்து கப்பல் மூலம் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்படும்.

கண்கவரும் வண்ணங்களில் தயாரிக்கப்படும் இந்த இரயிலின் ஒவ்வொரு பயணிகள் பெட்டியும் 30 முதல் 35 தொன் எடை கொண்டவை. எஞ்சின் 75 தொன் எடை கொண்டவையாகும்.

சாதாரண பெட்டிகள், குளிர் வசதி செய்யப்பட்ட பெட்டிகள் என இரண்டு வகையையும் கொண்டவை இந்த இரயில்கள்.

சென்னை ஐ.சி.எவ். தொழிற்சாலையில் இருந்து முதன் முதலாக 6 பெட்டிகள் கொண்ட முதல் இரயில் ஜனவரி 31ஆம் திகதி, 2011ஆம் ஆண்டு இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டது

# சுவாஸிலாந்து மன்னர் இலங்கைக்கு விஜயம்



ஆபிரிக்க நாடான சுவாஸிலாந்தின் மூன்றாவது ஸ்வாதி மன்னர் மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று முன்தினம் பிற்பகல் இலங்கையை வந்தடைந்தார்.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் கட்டுநாயக்க விமான நிலையத்தில் மன்னரை வரவேற்றார். இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்தும் வகையில் சுவாஸிலாந்து மன்னரின் விஜயம் இடம்பெறுவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுவாஸிலாந்து மன்னருடன் 40 பேரைக்கொண்ட உயர்மட்ட வர்த்தகக் குழுவினரும் இலங்கை வந்துள்ளனர். இவர்கள் ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத்தின் முக்கியஸ்தர்ளைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தவுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது

# தரமற்ற டீசல் பாவனை குறித்து இடைக்கால அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

தரமற்ற டீசல் பாவனை காரணமாக வாகனங்கள் தொழிநுட்ப பிரச்சினைகளை எதிர்நோக்கியமை தொடர்பாக ஆராய்ந்த மூவர் கொண்ட குழு தனது இடைக்கால அறிக்கையை நேற்று முன்தினம் கையளித்துள்ளது.

கனியவளத்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.எச்.எஸ். சமரசிங்கவிடம் அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

டீசல் பாவனை தொடர்பாக கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட போது வடிகட்டல் முறையில் ஏற்பட்ட பலவீனம் காரணமாகவே இந்த நெருக்கடி நிலை ஏற்பட்டதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த நிலைமைக்குக் காரணம் என்னவென்று ஏற்றுக்கொள்ளப்பட்ட தகுதி பரிசோதனைக்கான இரசாயன பகுப்பாய்வு முறையின் ஊடாக அறிந்துகொள்ள முடியாது எனவும் அந்த அறிக்கையின் ஊடாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பாதிக்கப்பட்டு அகற்றப்பட்ட வடிகளை பயன்படுத்தி இது தொடர்பாக விசேட இரசாயன பகுப்பாய்வினை மேற்கொள்ளவும், தரம் மற்றும் இரசாயனகூட பகுப்பாய்வு முறைமைகளை கையாள நிபுணர் குழுவொன்றை ஸ்தாபிக்கவும் இடைக்கால அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதுவரை தரமற்ற டீசல் காரணமாக ஏற்பட்ட தொழிநுட்ப பிரச்சினையால் பாதிக்கப்பட்ட வாகனங்கள் மற்றும் இயந்திராதிகள் தொடர்பாக 256 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# குளிர்பானக்கடைகளை சோதனையிடத் திட்டம்

பழரசங்களை விற்பனை செய்யும் (கூல் ஸ்பொட்) குளிர்பானக் கடைகளை சோதனை செய்யும் திட்டமொன்றை சுகாதார அமைச்சு விரைவில் ஆரம்பிக்கவுள்ளது.

இக்கடைகள் தொடர்பாகப் பொது மக்கள் வழங்கியுள்ள புகார்களின் அடிப்படையில் சுகாதார அமைச்சு இந்த முடிவை எடுத்திருப்பதாக அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

பழரசக் கடைகளில் பழுதடைந்த மற்றும் நசிந்த பழங்கள் பழரசங்களை தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படுவதாக புகார்கள் கிடைத்துள்ளதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

பழுதடைந்த மற்றும் நசிந்த பழங்களை உண்ண வேண்டாமென சுகாதார அமைச்சு பொது மக்களுக்கு அறிவூட்டுகின்றது. பழமொன்று நசிவடையுமாயின்-நசிவடைந்த இடத்தில் பக்டீரியா தொற்று ஏற்படும்.

அத்தொற்று முழு பழத்திற்கும் பரவ முடியும். என்றாலும் நசிவடைந்த பழங்களில் நசிவடைந்த பகுதியை அப்புறப்படுத்தி விட்டு பயன்படுத்தும் பழக்கம் காணப்படுகின்றது. இது உடலாரோக்கியத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்த முடியும்.

அத்தகைய பழங்களை உட்கொள்வதைத் தவிர்த்துக் கொள்வது அவசியம் எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# ஊழியர் சேமலாபநிதி முதலீடு சட்ட நடவடிக்கைக்கு முடிவு

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதியைப் பயன்படுத்தி செய்யப்பட்ட முதலீடுகளை ஆராய்வதற்காக சுயாதீன நாடாளுமன்றக் குழுவொன்றை நியமிக்க கோரி சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தனியார் துறை தொழிற் சங்கங்கள் தெரிவித்தன.


இந்த நாடாளுமன்றக்குழுவில் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளும் இருக்க வேண்டும் எனவும் சுதந்திர வர்த்தக வலய மற்றும் பொதுச் சேவைகள் ஊழியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் அன்ரன் மாக்கோஸ் கூறினார்.

ஊழியர் சேமலாப நிதியம் குறித்து விழிப்புணர்வூட்டி போராட்டத்திற்கு ஆதரவு தேடுவதற்காக கொழும்பின் பல இடங்களில் ஆகஸ்ட் 17ஆம் திகதி பிரசார கூட்டங்களை நடத்தப் போவதாக அவர் குறிப்பிட்டார்.

அதிகாரம் வாய்ந்தவர்கள் ஊழியர் சேமலாப நிதியை நொடித்து போன கம்பனிகளில் முதலீடு செய்ததனால் தினமும் மில்லியன் கணக்கில் நட்டம் ஏற்பட்டு வருகின்றது என எதிர்க்கட்சிகள் கூறியுள்ளன.

இளைப்பாறும் தனியார் துறை ஊழியர்களின் நலனுக்காக அமைக்கப்பட்ட இந்த நிதியம் 1,000 மில்லியன் ரூபா கொண்டதான பெரிய பொது நிதியமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்பாண்டக் கைத்தொழிலை விருத்தி செய்ய நடவடிக்கை



யாழ்.மாவட்டத்தில் மட்பாண்டக் கைத்தொழிலை விருத்தி செய்ய எதிர் காலத்தில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற மனைப் பொருளாதார வாழ்வெழுச்சித் திட்டத்தை விரிவுபடுத்தும் நிகழ்வில் கலந்து கொண்டு அமைச்சர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் யுத்த சூழல்களினால் பாதிப்புக்குள்ளாகியுள்ள இந்தமட்பாண்டத்தொழிலாளர்களுக்குநவீனமுறையில் அந்தத் தொழிலை முன்னெடுப்பதற்கான ஆலோசனையை வழங்குவது உள்ளூர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு தயார்ப்படுத்தல், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற மூன்று படிகளாக தொழில் அபிவிருத்தி மேற்கொள்ள ஆலோசிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் உற்பத்திப் பொருட்களின் தரத்தினை உயர்த்துவதுடன் தேவையான ஆலோசனை நிதியுதவியும் செய்து கொடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

தற்சமயம் யாழ்.மாவட்டத்தில் 24 இடங்களில் இந்த மட்பாண்டக் கைத்தொழில் நடைபெற்று வருகிறது.

குறிப்பாக கல்வியன்காடு, உடுப்பிட்டி, உடுவில், கோப்பாய், கொடிகாமம், நல்லூர், மட்டுவில், சங்கானை போன்ற இடங்கள் இவற்றில் அடங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தத் தொழில் துறையில் நிபுணத்துவம் பெற்ற ஒருவர் உட்பட ஒரு குழுவினர் யாழ். மாவட்டத்தில் இத்தகைய தொழிலைச் செய்யும் குடும்பங்களைச் சந்தித்து நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்கவுள்ளதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

# அல்லைப்பிட்டியில் மரணித்த பொதுமக்களுக்கு அஞ்சலி

கடந்த 2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி யுத்த அனர்த்ததங்களின் போது அல்லைப்பிட்டி கிராமத்தில் உள்ள புனித பிலிப் நேரியார் ஆலயத்தில் தஞ்சம் அடைந்திருந்த (அடைக்கலம்) 20 பேர்கள் எறிகணை வீச்சின் போது புனித பிலிப் நேரியார் ஆலயத்தின் மீது விழுந்து வெடித்ததில் கொல்லப்பட்டிருந்தார்கள்.

அவ்வாறு கொல்லப்பட்டிருந்த மக்களினது ஆத்ம சாந்திக்கான அஞ்சலி நிகழ்வானது நேற்று முன்தினம் அல்லைப்பிட்டி புனித பிலிப் நேரியார் ஆலயத்தில் இடம்பெற்றிருந்தது.

அமலத்தியாகிகள் சபையைச் சேர்ந்த எஸ்.இரத்தினராஜ் அடிகளளார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இறந்தவர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு இறந்தவர்களின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்தனைகளில் ஈடுபட்டிருந்தனர். (05)

# முரசின் இன்றைய பலன்

(15.08.2012 – புதன்கிழமை)

நந்தன வருஷம் ஆடி மாதம் 31 ஆம் திகதி. திரியோதசி முன்னிரவு 9.56 வரை. நட்சத்திரம் புனர்பூசம் முன்னிரவு 7.14 வரை. சித்தயோகம். பிரதோஷவிரதம். இராகுகாலம் 12.05 - 1.35 வரை. சுபநேரம் 4.35 - 6.05 வரை. எமகண்டம் 7.35 -9.05 வரை. குளிகன் காலம் 10.35 - 12.05 வரை.
நல்லூர் சப்பரத்திருவிழா

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | சகோதரர் உதவி, கடின உழைப்பு, புதிய தொழில் வாய்ப்பு, தொழிலாளருடன் நல்லுறவு. |
| ரிஷபம் | நற்கீர்த்தி, இருப்பிட சிறப்பு, பகைவரால் தொல்லை, வழக்குகளில் சாதகம். |
| மிதுனம் | சகோதர சுகம், வாகன யோகம் உண்டு, வெளிநாட்டு பிரயாண முயற்சி, கழுத நன்மை. |
| கடகம் | அலைச்சல், தடைகள் அகலும், நண்பர்களுடன் அனுசரணை, தானதர்ம சிந்தனை. |
| சிம்மம் | பணவரவு, ஆசிரியருடன் மனக்கசப்பு, கேளிக்கைகள்வேண்டாம், பரீட்சையில் வெற்றி. |
| கன்னி | ஸ்திரிகளால்நன்மை, மனஸ்தாபம், சகோதரர் வழியில் செலவு, மேலதிகாரிகள் அனுசரணை. |
| துலாம் | பணவரவு, காரிய சித்தியில் விரயம், பணியில் கவனம், செலவுகள் அதிகரிப்பு. |
| விருச்சிகம் | அதிகாரம் செலுத்தல், குடும்பத்தில் ஒற்றுமை, உடல் உபாதை, புனித ஸ்தல யாத்திரை. |
| தனுசு | சேர்வு நிலை, கொடுக்கல் வாங்கலில் சிக்கல், ஆடை ஆபரணச் சேர்க்கை, சண்டை. |
| மகரம் | கடன் தொல்லை, மனஸ்தாபம் ஏற்படும், பிணை போக வேண்டாம், சுபச்செலவுகள். |
| கும்பம் | சுபச் செலவு, எதிர்பாராத நற்செய்தி, உறவினரை அனுசரிக்கவும், குடும்பத்தில் மகிழ்ச்சி. |
| மீனம் | உறவில் திருப்தி, பணம் கையாள்வோர் கவனம், குடும்பத்தில் வாக்குவாதம், சுப காரியம். |


வாழ்க்கை இனியது! அதை மேலும் இனிதாக்கும் அம்சங்களை அள்ளிவருகிறது தினமுரசு வாரமலர்.

வாரமலர்
தினமுரசு

நாளைய தினமுரசு வாரமலரில்... 16.08.2012

- விருந்தாளிகளிடம் ஒப்பாரி வைக்கும் கூட்டமைப்பின் வெறுமை அரசியல்
- வியட்நாமின் தந்தை ஹோ சி மின்
- டெசோ எதிர்பார்ப்பும் ஏமாற்றமும்!
- கே.பி.க்கு தாய்லாந்தில் நடந்தது என்ன? (விறுவிறுப்புத் தொடர்)







ஓடிய ஓட்டம் என்ன? பக்கம் 24

கரீபியன் தீவுகளுக்குள் முடங்கிக் கிடக்கும் கறுப்புத் தேசம் மீண்டும் ஒருமுறை தலையை உயர்த்திக் காட்டியிருக்கிறது.

உங்கள் முகவர்களிடம் கேட்டு வாங்கிப் படியுங்கள்!

சூடு - சுவை - சுவாரசியம் இதுதான் தினமுரசு

## ஊக்க மருந்து சோதனை பறிபோனது தங்கம்



(லண்டன்)

லண்டன் ஒலிம்பிக் தடகளப் போட்டியில் பெண்களுக்கான குண்டு எறிதலில் பெலாரஸ் வீராங்கனை நாடெஸ்டாஆஸ்டாசுக் 21.36 மீற்றர் தூரம் வீசி தங்கப் பதக்கம் வென்றார். போட்டிக்கு முன்பு அவரிடம் நடத்தப்பட்ட சிறுநீர் பரிசோதனையில் ஊக்கமருந்து பயன்படுத்தியது தெரியவந்தது. இதைத்தொடர்ந்து பெலாரஸ் வீராங்கனை நாடெஸ்டாவின் தங்கப்பதக்கத்தை லண்டன் ஒலிம்பிக் கமிட்டி பறித்துள்ளது.

வெள்ளிப்பதக்கம் வென்ற நியூசிலாந்து வீராங்கனை வாலெரி அடம்சுக்கு தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது வெண்கலப் பதக்கம் வென்ற ரஷ்'ப வீராங்கனை யெவ்ஜெனியா கோலோட்கோவுக்கு வெள்ளிப் பதக்கமும், 4ஆவது இடம் பிடித்த சீன வீராங்கனை லிஜியா காங்குக்கு வெண்கலப் பதக்கமும் வழங்கப் பட்டன.

## பிரேசிலைச் சென்றடைந்த ஒலிம்பிக் கொடி

(றியோ டி ஜெனைரோ)

ஒலிம்பிக் போட்டிகளுக்கான கொடி பிரேசிலை சென்றடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்பிரகாரம் அடுத்த ஒலிம்பிக் விழா நடைபெறவுள்ள றியோ டி ஜெனைரோ நகருக்கு இந்தக் கொடி கொண்டு செல்லப்பட்டுள்ளது.

2012 லண்டன் ஒலிம்பிக் விழா நிறைவில் றியோ டி ஜெனைரோ மேயர் ஒலிம்பிக் போட்டிகளுக்கான கொடியை பொறுப்பேற்றிருந்தார்.

இதன்மூலம் 2016 றியோ டி ஜெனைரோ ஒலிம்பிக் விழாவிற்கான தயார்படுத்தல்கள் ஆரம்பமாகியுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


லண்டன் ஒலிம்பிக் விழாவில் 22 ஆம் இடத்தைப் பெற்ற பிரேசில் 17 மொத்தப் பதக்கங்களை வெற்றிகொண்டிருந்தது.

ஒலிம்பிக் விழாவை நடத்தும் முதலாவது தென் அமெரிக்க நகர் என்ற சிறப்பையும் றியோ டி ஜெனைரோ நகரம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும் போட்டிகளுக்கு முன்னரான நிர்மாணப் பணிகள் குறித்த கவலைகள் நீடிப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



## கிரிக்கெட்டிலும் ஆக்ரோஷமாக களமிறங்குவதற்குத் தயார்



(மெல்போர்ன்)

ஆக்ரோஷமான துடுப்பாட்ட வீரராகச் செயற்பட வேண்டும் என்று நினைக்கிறேன். எனக்கு வாய்ப்புக்கிடைத்தால் கிரிக்கெட்டில்விளையாட முயல்வேன் என உலகின் வேகமான மனிதன் என வர்ணிக்கப்படும் உசைன் போல்ட் தெரிவித்தார்.

பிக்போஸ் 20 ஓவர் போட்டியில் விளையாடுவது தொடர்பாக என்னிடம் ஷேன் வோர்ன் பேசினார். எனக்கும் 20 ஓவர் கிரிக்கெட்டில் விளையாட ஆர்வமாக உள்ளது. இருக்கிறது. இது குறித்து சிந்தித்து முடிவு செய்வேன். எனக்கு ஓய்வு கிடைக்கும் தருணத்தில் கிரிக்கெட் விளையாட முயற்சி செய்வேன். 20 ஓவர் போட்டியை நான் மிகவும் விரும்புகிறேன். கிரிக்கெட் விளையாடுவது எனக்கு பிடித்தமானது. ஆனால் முழுமையாக கிரிக்கெட்டில் கவனம் செலுத்துவது கடினமான காரியமாகும். ஆக்ரோஷமான துடுப்பாட்ட வீரராகச் செயற்பட வேண்டும் என்று நினைக்கிறேன். எனக்கு வாய்ப்புக் கிடைத்தால் கிரிக்கெட் விளையாட முயல்வேன். அது மிகவும் ஜாலியான விடயமாகும். என்னால் எந்த அளவு நன்றாக விளையாட முடியும் என்பது தெரியவில்லை. நிறையப் பயிற்சி செய்ய வேண்டியது அவசியமானதாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, பள்ளிப் பருவத்தில் கிரிக்கெட் மற்றும் கால்பந்து ஆடிய உசைன்போல்டின் வேகத்தைப் பார்த்து பயிற்சியாளர் தான் அவரை தடகளப் போட்டிக்கு மாற்றினார். உசைன்போல்டின் சொந்த நாடான ஜமேக்காவில் கிரிக்கெட் பிரபலம். இதனால் அவரை கிரிக்கெட் பக்கம் இழுக்க அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் முயற்சி எடுத்து வருகிறார். அவுஸ்ரேலியாவில் ஆண்டுதோறும் நடைபெறும் பிக்போஸ் 20 ஓவர் போட்டியில் மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணியில் விளையாட வைக்க அந்த அணியின் கப்டன் வோர்ன் பேச்சுவார்த்தை நடத்தி இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஆஸி. ஒரு நாள் தொடர் உமர் குல், யுனிஸ்கான் நீக்கம்

(லாகூர்)

அவுஸ்ரேலிய அணிக்கெதிராக ஐக்கிய அரபு இராச்சியத்தில் இடம்பெறவுள்ள ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடர் மற்றும் ருவென்ரி -20 போட்டித் தொடர் ஆகியவற்றிற்கான பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான பாகிஸ்தான் அணியிலிருந்து உமர் குல்,யுனிஸ்கான் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

எனினும் ருவென்ரி -20 சர்வதேசப் போட்டிகளுக்கான தொடரில் உமர் குல் சேர்க்கப்பட்டுள்ளார்.

அறிவிக்கப்பட்டுள்ள அணியில்பாகிஸ்தான் அணியின் விக்கெட் காப்பாளர்கம்ரன் அக்மல் மீள் அழைக்கப்பட்டுள்ளதோடு, அண்மையில் இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த பாகிஸ்தான் அணியில் இடம்பெற்றிருந்த மொஹமட் சமி நீக்கப்பட்டுள்ளார்.

அறிவிக்கப்பட்டுள்ள ஒருநாள் அணி:

மிஸ்பா உல் ஹக், நஷீர் ஜம்ஷத், மொஹமட்ஹபீஸ், அஷார்அலி, ஆசாத் சபீக், உமர் அக்மல், கம்ரன் அக்மல், ஷகிட் அப்ரிடி, சொஹைல் தன்வீர், அய்ஸஸ் சீமா, சயீட் அஜ்மல், இம்ரான் பர்ஹத், சொய்ப் மலிக், அப்துர் ரெக்மான், ஜுனைட் கான், அன்வர் அலி

அறிவிக்கப்பட்டுள்ள ருவென்ரி -20 அணி:

மொஹமட் ஹபீஸ், ஆசாத் சபீக், கம்ரன் அக்மல், நஷீர் ஜம்ஷத், சயீட் அஜ்மல், சொய்ப் மலிக், உமர் அக்மல், யசீர் அரபாத், அப்துல் ரஷாக், இம்ரான் நஷீர், மொஹமட் சமி, ராஷா ஹஸன், ஷகிட் அப்ரிடி, சொஹைல் தன்வீர், உமர் குல்.

## தென்னாபிரிக்கா மறுப்பு

(டர்பன்)

தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர்களுக்கு கெவின் பீற்றர்சன் அனுப்பியதாக தெரிவிக்கப்படும் குறுஞ்செய்திகளில் யாரையும் கேவலப்படுத்தும் விதமான எதுவும் காணப்படவில்லை என தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை மீண்டும் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை இதை தெரிவித்திருந்த போதிலும், மீண்டும் தங்கள் நிலையை உறுதிப்படுத்த விரும்புவதாக தெரிவித் துள்ளது.


கெவின் பீற்றர்சன் தென்னாபிரிக்க வீரர்களுக்கு அனுப்பிய குறுஞ்செய்திகள் வெறுமனே மென்மையான கிண்டல்களாகவே காணப்பட்டதாகத் தெரிவித்துள்ள தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் முகாமையாளர் மொஹமட் மூசஜி, அவதூறான குறுஞ்செய்திகளை கெவின் பீற்றர்சன் அனுப்பினார் என்பதை முழுமையாக மறுப்பதாகத் தெரிவித்துள்ளார்.

## இரண்டாவது முறையாக ஜோகோவிச் சம்பியன்

ரொரோன்டோ மாஸ்டர்ஸ் ரென்னிஸ் போட்டி கனடாவில் நடந்தது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவுஇறுதிப்போட்டியில் உலகின் 2ஆம் நிலை வீரர் நோவாக் ஜோகோவிச் (சேர்பியா), பிரான்ஸ் வீரர் ரிச்சர்ட் காஸ்குயட்டை சந்தித்தார். 61 நிமிடம் நடந்த இந்த ஆட்டத்தில்ஜோகோவிச் 6-3, 6-2 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று தொடர்ந்து 2ஆவது முறையாக சம்பியன் பட்டத்தை தனதாக்கினார்.



## மீண்டும் அணியில் இடம் மகிழ்ச்சி என்கிறார் ஹர்பஜன்



இந்திய அணியில் மீண்டும் வாய்ப்பு கிடைத்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இதன்மூலம் சிறப்பாகச் செயற்பட எனக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. நீண்ட காலமாக நான் இந்திய அணிக்காக ஆடியவை, இனி கணக்கில் கொள்ள முடியாது. இனி நான் புதிதாக எனது ஆட்டத்தை தொடங்க வேண்டியுள்ளது என சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங் தெரிவித்தார்.

ராகுல் ராவிட் கூறியது போல, முதல் முறையாக அணியில் வாய்ப்பு பெறுவது எளிது. ஆனால் அணியில் இருந்து ஒரு முறை வெளியேறிவிட்டால், மீண்டும் வாய்ப்பு கிடைப்பது அரிதானது. அதிலும் என்னை போல 12 ஆண்டுகள் அணியில் ஆடிவிட்டு வெளியேறினால், மிகவும் கஷ்டம். அணியில் இருந்து வெளியேற எந்த வீரரும் விரும்புவதில்லை.

எனது கடந்த கால ஆட்டத்தை விட, எதிர்கால ஆட்டம் சிறப்பாக இருக்க வேண்டும். இதற்கு கடந்த கால எனது ஆட்டத்துடன், நானே பேட்டியிட வேண்டும். இந்திய அணிக்கு திரும்ப நான் கடினமாக உழைத்தேன். இதனால் காயமடைந்தது தான் மிச்சம், எந்தப் பயனும் ஏற்படவில்லை. சில நேரங்களில் வெற்றி, தோல்விகள் கூட நமக்கு எட்டாத நிலை ஏற்படுவதாக உணர்ந்தேன். அந்த நேரங்களில் நான் முன்னேறத் தடையாக இருக்கும் சில காரியங்களை நான் தியாகம் செய்தேன். அடுத்தடுத்து பல முறை எனக்கு காயம் ஏற்பட்டது ஏன் என்பதை நினைத்தால், ஆச்சரியமாக உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

## ருவென்ரி -20 உலக கிண்ணத்தில் ஹோலிக்கு எதிராக வியூகம்

(கொழும்பு)

ருவென்ரி - 20 கிரிக்கெட் உலகக் கோப்பையின் போது விராட் ஹோலிக்கு எதிராக சிறப்பு வியூகம் வகுக்க வேண்டுமென இலங்கை அணியின் தொடக்க வீரர் டில்சான் தெரிவித்தார்.

இந்திய அணியின் சமீபத்திய இலங்கை சுற்றுப் பயணத்தின் போது ஹோலி சிறப்பாக விளையாடி வெற்றிக்கு முக்கியக் காரணமாக இருந்தார். இலங்கை பந்து வீச்சாளர்களால் அவரது ஓட்டக் குவிப்பையும் கட்டுப்படுத்த முடியவில்லை. எளிதில் ஆட்டமிழக்கச் செய்யவும் முடியவில்லை.

இந்நிலையில் ருவென்ரி 20 உலகக் கோப்பை கிரிக்கெட் இலங்கையில் செப்ரெம்பர் 18இல் தொடங்குகிறது. இப்போட்டி தொடர்பாக இலங்கை அணியின் தொடக்க வீரர் டில்சான் கூறியிருப்பதாவது:

ருவென்ரி -20 உலகக் கோப்பை கிரிக்கெட்டின் முதல் சுற்றில் இந்தியாவை இலங்கை எதிர்கொள்ளவில்லை.

எனினும் சூப்பர் 8 மற்றும் அரையிறுதியில் இந்தியாவை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இந்திய அணியில் இளம் வீரர் ஹோலி தொடர்ந்து சிறப்பாக விளையாடி வருகிறார். சமீபகாலமாக மட்டுமல்லாது, 2011 உலகக் கோப்பையில் இருந்தே அவர் எதிரணிக்கு பெரும் சவாலாக விளங்குகிறார்.

அவரை ஆட்டமிழக்கச் செய்வது கடினமானது. எனவே அவருக்கு எதிராக விளையாட சிறப்பு வியூகம் அமைப்பது அவசியம் என்றார்.

90 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள ஹோலி 3,886 ஓட்டங்கள் குவித்துள்ளார். அவரது சராசரி 51.81. இதுவரை 8 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்றுள்ள ஹோலி 491 ஓட்டங்கள் எடுத்துள்ளார். சராசரி 32.73.





யாழ். மத்திய கல்லூரியில்அமைக்கப்பட்ட நீச்சல்தடாக' நிலைமைகள் மற்றும் பராமரிப்பு தொடர்பான விடயங்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில் சென்று ஆராய்ந்தார். நேற்று முன்தினம் மாலை யாழ். மத்தியகல்லூரிக்குச் சென்ற அமைச்சரவர்கள் கல்லூரியின் விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர் கல்லூரியின் பழைய மாணவர் சங்க பிரதிநிதிகள் மற்றும் பாடசாலை அபிவிருத்திசங்க உறுப்பினர்கள் உள்ளிட்டோருடன் விரிவாககலந்துரையாடி உரிய ஆலோசனைகளை வழங்கியதுடன் பராமரிப்பு பணிகள் தொடர்பாக கேட்டறிந்து உரிய பணிப்புரைகளை யும் வழங்கினார். குறிப்பாக நீச்சல் பயிற்சி, போட்டிகளில் ஈடுபடுவோரின் உடமைகளை பாதுகாப்பதற்கென உரிய பெட்டகங்கள் மற்றும் உடை மாற்றுவதற்குரிய உரிய வசதிகளை ஏற்படுத்துதல் நீச்சல் தடாகத்திற்குரிய குறியீடுகளை பார்வைப்படுத்துதல் போன்ற விடயங்களை குறித்துத் தெரியப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# கே.சி.சி.சி. அபார வெற்றி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ரீதியாக இலங்கை கிரிக்கெட் சங்கத்தின் பிரிவு மூன்றிக்கான ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் கொக்குவில் கே.சி.சி.சி. அணி 88 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது. கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது.இதில் சென்றலைட்ஸ் அணியும், கொக்குவில் கே.சி.சி.சி. அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கே.சி.சி.சி. அணி 47.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜனுதாஸ் 59, உத்தமன் 43, கோபி 21, உமாகாந்த் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சாள்ஸ், விகாசர், எரித் துசாந், பிரசாத் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 201 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். சென்றலைட்ஸ் அணி 39.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் மதுஷன் 26, சௌமதரன் 14, எடின் 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கிருபவன் நான்கு, சிலோசன் மூன்று, உமாகாந்த் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (எஸ்.பி.)

# ஹொக்கி காலிறுதிப் போட்டியில் போராடித் தோற்றது யாழ். பல்கலை

விளையாட்டுச் செய்திகள்



(கொழும்பு)

அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான தேசிய மட்ட ஹொக்கிப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணி காலிறுதியில் போராடித் தோற்று வெளியேறியுள்ளது.

அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான தேசிய மட்ட ஹொக்கிப் போட்டி கொழும்பு மகிந்த ராஜபக்ஷ விளையாட்டு மைதானத்தில் கடந்த 10,11,12ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இதில் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்தி வந்த யாழ். பல்கலைக்கழக அணி காலிறுதியில் பேராதனைப் பல்கலைக்கழக அணியை எதிர்கொண்டது.

இதில் முற்பாதி ஆட்டத்தில் பேராதனைப் பல்கலைக்கழக அணி 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. முற்பாதி ஆட்டத்தில் பல கோல் போடும் சந்தர்ப்பங்கள் இருந்தும் யாழ். பல்கலைக்கழக அணி அதனை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளத் தவறியது.

தொடர்ந்து பிற்பாதி ஆட்டத்தில் தமது ஆட்ட வியூகத்தை மாற்றியமைத்த யாழ். பல்கலைக்கழக அணி சிறப்பானதொரு கோலைப் போட்டு போட்டியைச் சமப்படுத்தியது. இறுதியில் ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை 1-1 என்ற கணக்கில் சமநிலை பெற்றிருந்தது. இதன் காரணமாக தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் முதல் ஐந்தில் இரு அணிகளும் தலா மூன்று கோல்களைப் போட்டு சமநிலையிலிருந்தன. தொடர்ந்து இரு அணிகளும் மாறிமாறி மீண்டும் நான்கு கோல்களைப் போட்டனர். இதில் ஐந்தாவது கோலை அடிக்க யாழ். பல்கலைக்கழக அணி தவற, அதனை சிறப்பான முறையில் பயன்படுத்திக் கொண்ட பேராதனைப் பல்கலைக்கழக அணி கோலாக்கி வெற்றிபெற்றது. இறுதியில் 8-7 என்ற கணக்கில் பேராதனைப் பல்கலைக்கழகம் வெற்றி பெற்றது.இப்போட்டியில் யாழ். பல்கலைக்கழக வீரர்களின் ஆட்டம் இரசிகர்களிடையே பெரும் பாராட்டைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இக்ஹொக்கிப் போட்டியில் முதலாமிடத்தை ஸ்ரீ ஜெயவர்த்தன புர பல்கலைக்கழகமும், இரண்டாமிடத்தை பேராதனைப் பல்கலைக்கழகமும், மூன்றாமிடத்தை கொழும்பு பல்கலைக்கழகமும் பிடித்துக்கொண்டன. (12)

## கிரிக்கெட் வாழ்க்கை நிறைவுக்கு வரவில்லை

(லண்டன்)

தென்னாபிரிக்க அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டிக்கான அணியில் தெரிவுசெய்யப்படாத போதிலும் இங்கிலாந்து சார்பான எனது கிரிக்கெட் வாழ்க்கை நிறைவுக்கு வரவில்லை என இங்கிலாந்து அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சன் தெரிவித்துள்ளார்.

ஒழுக்கவியல் தவறுகள் காரணமாக இங்கிலாந்து அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ள அவர், சர்வதேசப் போட்டிகள் அனைத்திலிருந்தும் ஓய்வுபெறும் எண்ணம் கிடையாது என மீண்டும் வலியுறுத்தினார்.

மூன்றாவது டெஸ்ட் போட்டிக்கான அணியில் தன்னைச் சேர்க்காமல்விட இங்கிலாந்துக் கிரிக்கெட் சபை முடிவுசெய்தமை குறித்து மிகுந்த ஏமாற்றமடைந்துள்ளதாகத் தெரிவித்த அவர், மிகவும் மனமுடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக தன்னைச் சுற்றிவரும் சர்ச்சைகள் தனக்கு வருத்தமளிப்பதாகத் தெரிவித்த அவர், தனது குடும்பத்தினரும் மிகுந்த பாதிப்படைந்துள்ளதாகவும் கூறினார்.

எனினும் இச்சம்பவங்கள் எவையும் தனது கிரிக்கெட் வாழ்வு இங்கிலாந்தில் முடிந்து போவதை உறுதி செய்யாது எனத் தெரிவித்த அவர், இங்கிலாந்து சார்பாக மீண்டும் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றுவேன் என நம்பிக்கை தெரிவித்தார்.

இன்றும் கொஞ்சக் காலம் கிரிக்கெட் விளையாட வேண்டும் என்பதே எனது விருப்பம். இந்தக் காலம் வரும் வரை நான் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெற மாட்டேன் எனவும் அவர் தெரிவித்தார்.

# மின்னொளியின் ஆண்டு நிறைவுக் கிண்ணம் ஆவரங்கால் இந்து, மட்டுவில் ஐங்கரன் வசம்



(கைதடி)

கைதடி மின்னொளி விளையாட்டுக் கழகம் நடத்திய ஆண்டு நிறைவு கரப்பந்தாட்டப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

கைதடி மின்னொளி சனசமூக நிலையத்தின் 57ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமாகாண ரீதியாகவும், தென்மராட்சி ரீதியாகவும் கரப்பந்தாட்டப் போட்டித் தொடர் நடத்தப்பட்டது.

இதன் இறுதிப் போட்டிகள் கடந்த புதன்கிழமை இரவு இடம்பெற்றது. இதில் வடமாகாண ரீதியாக இடம்பெற்ற இறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும், புத்தூர் கலைமதி அணியும் மோதின.

ஐந்து செட்களைக் கொண்ட இறுதிப் போட்டியில் இரு அணிகளும் தமது திறமைகளை வெளிப்படுத்தி ஆடியிருந்தன. முதல் செட்டை 25-23 என்ற கணக்கில் கைப்பற்றி ஆவரங்கால் இந்து இளைஞர் முன்னிலை வகித்தது.

நாங்களும் சளைத்தவர்கள் இல்லை என்பதை வெளிப்படுத்தும் வகையில் இரண்டாவது செட்டை 25-23 என்ற கணக்கில் புத்தூர் கலைமதி அணிகைப் பற்றி சமப்படுத்தியது. தொடர்ந்துமூன்றாவது செட்டை 25-21 என்ற கணக்கில் ஆவரங்கால் இந்து இளைஞரும், நான்காவதுசெட்டை புத்தூர் கலைமதி 26-24 என்ற கணக்கில் கைப்பற்றி சமப்படுத்தியிருந்தது.

இதனைத் தொடர்ந்து வெற்றியைத் தீர்மானிக்கும் இறுதி செட்டில் இரு அணிகளும் தமது முழுத் திறனையும் வெளிப்படுத்தினர். இறுதியில் 15-11 என்ற கணக்கில் வெற்றிபெற்ற ஆவரங்கால் இந்து இளைஞர் 3-2 என்ற செட் கணக்கில் வென்று கிண்ணத்தைச் சுவீகரித்தது. இப்போட்டி கரப்பந்தாட்ட இரசிகர்களுக்குப் பெரு விருந்தாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து நடைபெற்ற தென்மராட்சி ரீதியான இறுதிப் போட்டியில் மட்டுவில் ஐங்கரன் அணியும், மட்டுவில் மோகனதாஸ் அணியும் மோதின. ஐந்து செட்களைக் கொண்ட இந்த இறுதிப்போட்டியில் மட்டுவில் ஐங்கரன் அணி 3-1என்ற செட்கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. (93, 118)

## 3 விக்கெட்டுக்களால் சென்- பற்றிக்ஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

சென். ஜோன்ஸ் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி 'பி' அணி மூன்று விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டி ஒன்று அண்மையில் நடைபெற்றது.

அதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற முதலில் ஆடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 41.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 114 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சோமஸ்கரன் 18, டிலக்ஷன் 17 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 115 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 38 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் நிலக்ஷன் 10, கிருசாந்த் ஆட்டமிழக்காது 30 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் புகழினியன் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.(எஸ்.பி.)



# இலை மலர்ந்தது! ஈழம் மலர்ந்ததா?

- பச்சைத்தமிழன் கட்டுரையிலிருந்து.

2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் யுத்தத்திற்குப் பிறகு 2010 ஆம் ஆண்டு தொடங்கிய ஓர் அரசியல் கட்சிதான் "நாம் தமிழர்". தென் அமெரிக்க நாடொன்றில் வைத்து புலிகளின் முக்கிய நபர் ஒருவருக்கும் சீமானுக்கும் இடையில் எட்டப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், புலிகளின் நலனுக்காகவென தொடங்கப்பட்டது தான் நாம் தமிழர் கட்சி. அதற்காகப் புலிகளிடமிருந்து மிகப் பெரியதொரு தொகைப் பணம் சீமானுக்கு வழங்கப்பட்டது. இன்றுவரை மாதாமாதம் புலிகளிடமிருந்து சீமானுக்கு பணம் வந்து கொண்டே இருக்கிறது. இந்திய மத்திய மாநில அரசுகள் இதுபற்றி உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சமீபத்தில் சீமான் அவர்களின் தொலைக்காட்சி செவ்வி ஒன்றைப் பார்த்தேன்.. அதில் அவர் இவ்வளவு காலமும் தமிழ்நாட்டை வேற்று மொழி பேசுபவர்கள் தான் ஆட்சி செய்து வந்தார்கள். இனிமேல் தமிழ்நாட்டைத் தமிழன் ஒருவன் தான் ஆள வேண்டும் என்று மிகவும் வலியுறுத்திக் கூறுகிறார்.

அப்படியென்றால் கலைஞர் கருணாநிதியை தமிழன் இல்லை என்று கூறுகிறாரா? இதற்கு தி.மு.க.வினர் என்ன சொல்கிறார்கள். தற்போதைய தமிழக முதல்வர் ஜெயலலிதா தமிழிச்சி இல்லையா? இதற்கு அ.தி.மு.க.வினர் என்ன செய்யப்போகிறார்கள்? மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் ஒரு மலையாளி. அவரை முதல்வராக்கியது தவறு என்று சொல்லும் சீமான், ஒரு மலையாளியான பிரபாகரனைத் தனது தலைவராக ஏற்றுக் கொள்ள முடிந்தது எப்படி?

சீமான் எடுத்த திரைப்படங்களில் ஆஸ்தான நடிகையாக வலம்வந்தது பூஜா என்னும் சிங்கள நடிகைதான். அப்போதெல்லாம் சீமானின் தமிழ்ப்பற்று எங்கே போயிருந்தது? பிரபாகரன் திருமணம் செய்த திகதியில்தான் தனது திருமணமும் நடக்கும் என சீமான் அவர்கள் அறிவித்திருக்கிறார். பிரபாகரனின் திருமணம் ஏதோ புரட்சித் திருமணம் என்பது போல பீலா விட முனைகிறார் அண்ணர் சீமான்.

திரைப்படங்களில் ஒரே




பாடலில் வில்லனுக்கு எதிராக மக்களைத் திரட்டும் கதாநாயகன் போல செந்தமிழன் சீமான் அவர்கள் தமிழக அரசியலில் புரட்சி செய்யக் கிளம்பியிருக்கிறார். தமிழீழத்தை மீட்பதற்காக என்று சொல்லி விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்கள் தற்போது முடிவுற்ற சூழலில், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கொடியையும் (பிற்பாடுதான் கொடியில் சிறிது மாற்றம் செய்தனர்) தமிழ்த் தலைவர் சி.பா. ஆதித்தனார் ஆரம்பித்த "நாம் தமிழர்" இயக்கப் பெயரையும் "எடுத்து"க்கொண்டு தமிழக் அரசியலில் புரட்சி செய்யக் கிளம்பி இருக்கிறார் சினிமாக்கார சீமான் அவர்கள் (சொந்த புத்தி எதுவுமில்லை என்கிற விவாதத்திற்கெல்லாம் போக வேண்டாம்).

முள்ளிவாய்க்கால் யுத்தத்தின்போது தமிழகத்தில் முதல்வராக இருந்த கலைஞர் கருணாநிதியை எதிர்த்து அதிமுகவுக்கு வாக்கு கேட்டு மேடைதோறும் முழங்கினார் சீமான். கே.ஏ.செங்கோட்டையன், ஓ.பன்னீர்செல்வம் போன்றவர்களைவிட வார்த்தைக்கு வார்த்தை "அம்மா" என்று உச்சரித்தார். "இலை மலர்ந்தால் ஈழம் மலரும்" என்றார். "ஈழத்தாய்" என்று ஜெயலலிதாவை வாயாரப் புகழ்ந்தார். "அம்மா"வைப் புகழ்வது அண்ணன் சீமானின் உரிமை அதற்குள் நாம் போகவில்லை. ஆனால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு "அம்மா" அரியணை ஏறிய பின் தமிழீழப் பிரச்சனையில் "ஈழத் தாய்" போல் செயல்பட்டாரா? இலை மலர்ந்தது! ஈழம் மலர்ந்ததா?

# புத்தி வந்தது!



ஒரு குரங்குக் குட்டி பச்சை மரமுந்திரிகைக் கொட்டை ஒன்றைப் பறித்துக் கடித்தது. அந்தச் சுவை அதற்குப் பிடிக்கவில்லை.

"முந்திரிக் கொட்டை நல்ல சுவையுடையது என்றுதானே அம்மா கூறினார்! என்ன சுவை இது? பெரியவர்களே இப்படித்தான். சிறுவர்களை ஏமாற்றுவதே அவர்களுடைய வேலையாகப் போய்விட்டது." என்று சொல்லிக்கொண்டே அந்தக் கொட்டையைத் தூக்கித் தூர எறிந்தது.


அது விழுந்த இடத்தில் மற்றொரு குரங்கு இருந்தது. அந்தக் குரங்கு அந்தக் கொட்டையை எடுத்தது. ஒரு கல்லின் மேல் அதை வைத்து வேறொரு கல்லைக் கொண்டு அதை உடைத்தது. உள்ளே இருந்த பருப்பை எடுத்துச் சுவைத்துத் தின்றது.

குட்டிக் குரங்கு, "அது சுவையாகவா இருந்தது? எங்க அம்மா என்னை ஏமாற்றிவிட்டாள்? அதனால்தான் அதைத் தூக்கி எறிந்தேன்" என்றது.

அதற்கு அந்தக் குரங்கு, "உன் அம்மா சொன்னது சரிதான். முந்திரிக்கொட்டை நல்ல சுவையுடையதுதான். ஆனால் அதை உடைத்து உள்ளே இருக்கும் பருப்பை எடுத்துத் தின்ன வேண்டும். சிறிதும் உழைக்காமல் இன்பத்தை அனுபவிக்க முடியாது!"

குரங்குக் குட்டிக்கு அப்போதுதான் புத்தி வந்தது!

# அப்படியா?




**மூட்டு வலியா?:** மழையும் குளிரும் சேர்ந்துவிட்டால் போதும். பலருக்கு மூட்டுவலி வந்துவிடும். இந்த மூட்டுவலிக்கு சிறிது வினிகரை மூட்டுகளின் மீது தேய்த்து வந்தால், வலி மறைந்துவிடும்.

**மூக்கடைப்பா?:** மூக்கடைப்புக்கு மட்டுமல்ல, மூக்கு சம்பந்தப்பட்ட பல தொல்லைகளுக்கு மருந்தாக, கொத்துமல்லி கீரையைத் துவையலாகச் செய்து சோற்றுடன் பிசைந்து சாப்பிட்டு வர தொல்லைகள் சீர்படும்.

**வாந்தியா?:** வாந்தியும் குமட்டலும் உண்டாகிறதா? வெங்காயத்தைத் தோல் உரித்து சிறிது நேரம் முகர வேண்டும். அதையே வாயில் போட்டு நன்றாக மென்று விழுங்கினால் வாந்தி வருவது "கப்" என்று நின்றுவிடும்.

# கடலில் தோன்றிய மிதக்கும் 'தீவு'




கடலில் உள்ள தீவுகள் மிதந்து செல்வதில்லை. ஆனால் சில நாட்களுக்கு முன்னர் பசிபிக் கடலில் கோடானு கோடி கற்கள் அடை போல மிக நெருக்கமாக மிதந்து செல்லக் காணப்பட்டன. வானிலிருந்து பார்த்தால் இவை மிதக்கும் தீவுகள் போன்று காட்சி அளித்தன.

தென்பசிபிக் கடலில் நியூலாந்துக்குக் கிழக்கே சுமார் 1000 கிலோ மீற்றர் தொலைவில் இந்த மிதக்கும் கற்கள் காணப்பட்டன. இவற்றின் பரப்பு 26 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் அளவுக்கு இருந்தது. இது பெல்ஜியம் நாட்டின் நிலப்பரப்புக்குச் சமம்.

கடலில் மிதக்கும் கற்களைக் கண்டதும் நியூசிலாந்து கடற்படைக் கப்பல் வேறு பாதையில் திருப்பி விடப்பட்டது. எனினும் இக்கற்களால் கப்பல்களுக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்பில்லை என்று கூறப்படுகிறது.

நீரில் ஒரு கல்லைப் போட்டால் குபுக் என்று நீருக்குள் மூழ்கி விடும். ஆனால் மிதக்கும் கற்கள் உண்டு. இவை Pumice Stonces என்று அழைக்கப்படுகின்றன. இவற்றை நுரைக் கற்கள் என்று கூறலாம். இவை எரிமலையினால் தோற்றுவிக்கப்படுபவை. காற்றுக் குமிழ்கள் நிறைய அடங்கிய நெருப்புக் குழம்பு உருண்டைகள் வடிவில் மிக வேகமாக உயரே தூக்கி எறியப்பட்டு நீரில் வந்து விழும் போது



இந்த நுரைக் கற்கள் உண்டாகின்றன.

நுரைக் கல் ஒன்றை உற்றுக் கவனித்தால் அதில் எண்ணற்ற சிறிய துளைகள் காணப்படும். நெருப்புக் குழம்பு உருண்டையாக இருந்த கட்டத்தில் இதனுள் காற்றுக் குமிழ்கள் இருந்தன என்பதை இவை காட்டுகின்றன அடர்த்தி குறைவு என்பதால் இவை நீரில் மிதக்கும்.

தென் பசிபிக் கடலுக்கு அடியே இருக்கக்கூடிய எரிமலையின் சீற்றத்தின் விளைவாக இவை தோன்றியிருக்கலாம் என்று கருதப்படுகிறது. மிதக்கும் நுரைக் கற்கள் கடலில் மிதந்தபடி எங்காவது கரையில் ஒதுங்கும். 129 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தோனேசிய எரிமலை ஒன்றினால் உண்டான நுரைக் கற்கள் ஆபிரிக்காவின் கிழக்குக் கரையில் போய் ஒதுங்கின. தீவு போல மிதக்கும் நுரைக் கற்கள் மூலம் ஒரு தீவிலிருந்து வேறு தீவுக்கு தாவரங்களும் விலங்குகளும் பரவியிருக்கலாம் என்று சில நிபுணர்கள் கருதுகின்றனர்.

நுரைக் கற்களுக்குப் பல உபயோகங்கள் உள்ளன. பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் ரோமானியர் இவற்றைப் பயன்படுத்தி கட்டடங்களைக் கட்டினர். இவற்றைப் பொடி செய்தும் பயன்படுத்துவது உண்டு. சிறு கட்டிகளாக உருக்கொடுத்து கடைகளில் விற்கின்றனர். குளிக்கும் போது குதிகால், உள்ளங்கால் ஆகியவற்றில் படிந்திருக்கும் அழுக்கை அகற்ற நுரைக் கற்கள் பயன்படுத்தப்படுகின்றன.

# மயக்க மருந்துகள் பற்றி...

அறுவைச் சிகிச்சையின் போது மயக்கம் உண்டாகச் செய்வதற்கு, வாயுவாக அல்லது ஊசி மருந்தாக மயக்க மருந்து கொடுக்கப்படுகிறது.



பலவிதங்களில் மயக்க மருந்தைக் கையாளலாம். நீண்ட நேரம் அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டி இருந்தால், உடல் முழுவதும் உணர்ச்சி இழக்கச் செய்து மயக்கம் உண்டாகும்படி மருந்து கொடுக்க வேண்டும்.

இடுப்பில், தண்டுவடத்தில் ஊசி மூலம் மயக்க மருந்து செலுத்தினால், இடுப்பிற்குக் கீழே உள்ள பகுதி உணர்ச்சியற்றுப் போகும்.

இது தவிர கைவிரல், கால் விரல் போன்ற உறுப்புகளில் மட்டும் அறுவைச் சிகிச்சை செய்வதானால், உணர்ச்சி நீக்கும் மயக்க மருந்தை அப்பகுதிகளில் மட்டும் செலுத்தலாம்.

சிரிப்பூட்டும் வாயு எனப்படும், நைட்ரஸ் ஒக்சைட், ஈதர், குளோ-ரோபோம், கோக்கயின் முதலியன முக்கியமான மயக்க மருந்துகள்.

மயக்க மருந்தாக நைட்ரஸ் ஒக்சைடை பயன்படுத்தலாம் என்று, 1842ல், தெரிவித்தார் சேர் ஹம்ப்ரி டேவி. முதன் முதலாக அமெரிக்க நாட்டினர் இதைப் பயன்படுத்தினர்.

பிறகு, ஜேம்ஸ் சிம்சன் என்ற ஆங்கிலேயர் குளோரோபோமை கண்டுபிடித்தார் ஆனால், அதை பயன்படுத்த பலத்த எதிர்ப்பு ஏற்பட்டது.

இம்மயக்க மருந்து, 1853ல், விக்டோரியா ராணிக்கு கொடுக்கப்பட்டது. அதன் பிறகே, பலரும் இம்மருந்தைப் பயன்படுத்த இசைந்தனர். மயக்க மருந்து கண்டுபிடிப்பு, ம[illegible]துவத் துறையில் சிறப்பான சாதனைதான்...

# மலேசியாவிலும் மன்னராட்சி!



இங்கிலாந்து, சவுதி அரேபியா போல மலேசியாவிலும் இன்னமும் மன்னராட்சி முறை இருக்கிறது. ஆனால், மலேசியாவில் நடப்பது முழுமையான மன்னராட்சி முறை அல்ல. மலேசியா ஒரு கூட்டாட்சி நாடு. மன்னர் தலைமையில் இங்கு ஆட்சி நடைபெறுகிறது. ஆனால், இம்மன்னரும் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படுபவரே!

முன்பு தனித்தனியாக ஆட்சி செலுத்திய அரசர்கள், இன்று ஒன்பது மாநிலங்களில் அதிபதிகளாக உள்ளனர். இவர்களுள் ஒருவர் மன்னராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இவர், அமைச்சரவையும், நாடாளு மன்றமும் கூறும் ஆலோசனையின்படி ஆட்சி செலுத்துகிறார்.

மலேசிய தீபகற்பத்தில் பண்டைக் காலத்தில் இந்திய அரசர்களின் ஆட்சி நடந்து வந்தது. இந்நாட்டில் கிடைத்துள்ள சமஸ்கிருதக் கல்வெட்டுகளில் இருந்து இதை தெரிந்து கொள்ளமுடிகிறது.

மலாய் மொழியில் சமஸ்கிருத சொற்களும், தென்னக மொழிச் சொற்களும் பல உள்ளன. பின், இந்நாட்டில் இஸ்லாம் மதம் பரவியது.

போத்துக்கீசர், டச்சுக்காரர் ஆகியோர் பல பகுதிகளை கைப்பற்றி ஆட்சி செலுத்தினர். இறுதியாக இந்நாடும் ஆங்கிலேயர் வசமாயிற்று.

இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஜப்பானியர் கைப்பற்றிக் கொண்டனர். யுத்தத்திற்குப் பின் மீண்டும் இது ஆங்கிலேயர் வசமானது.

கடந்த, 1957ல், விடுதலை பெற்ற பின், மலேயா, சராவாக், சபா ஆகிய மூன்று பகுதிகளும் இணைந்து ஒரே மலேசிய நாடாக உருவானது...

# முத்துராமன்

**- R.P.ராஜநாயஹம்**

முத்துராமன் நாடக நடிகர். சிறு கதாபாத்திரங்களில் தான் சினிமாவில் ஆரம்பத்தில் நடித்தவர். 1956இல் ரங்கூன் ராதா படத்தில் ஒரு வக்கீல் பாத்திரத்தில் வருவார். சகஸ்ரநாமத்தின் சேவாஸ்டேஜ் நாடகங்களில் நடித்திருக்கிறார். ஜூபிடர் சோமுவின் அஸ்தமன படம் அரசிளங்குமரி (1961)யில் எம்ஜிஆரின் ஸ்டண்ட் நடிகர் கே.பி.ராமகிருஷ்ணனுக்கு ஒரு ரோல் கிடைத்த போது அந்த ரோலை அவர் நாடக நடிகர் முத்துராமனுக்கு பெருந்தன்மையுடன் வி[illegible]க்கொடுத்தார். எம்.ஜி.ஆருடன் ஏற்றம் இறைத்துக்கொண்டே "தந்தனத்தானே ஏலேலோ தந்தனத்தானே ஏலேலோ பாட்டில் சீர்காழியின் "வேலை



செஞ்சால் உயர்வோம் என்ற விவரம் மண்டையில் ஏறணும்" வரிக்கு முத்துராமனின் performance எம்ஜிஆரின் தேஜஸான அழகுக்கும் அவருடைய நடிப்புப் பாணிக்கும் சற்றும் பொருந்தாமல் under acting என்ற அளவில் இருப்பதை இன்றும் காணமுடியும். எம்.ஜி.ஆருடன் ஒரு பாடல் காட்சியில் நடித்த பெருமை மட்டும் தான் அன்று.

ஸ்ரீதர் நெஞ்சில் ஓர் ஆலயம் (1962) படத்தில் வாழ்வு கொடுத்தார். போலீஸ்காரன் மகள் படத்தில் "இந்த மன்றத்தில் ஓடி வரும் இளம் தென்றலைக் கேட்கின்றேன்" பிபிஎஸ் ஜானகி மாஸ்டர்பீஸ் பாடலில் கூட "பரவசம்" உணர்வை கண்ணை செயற்கையாக உருட்டி பூரிப்பை விசித்திரமாக வெளிப்படுத்துவார். "சுமைதாங்கி" படத்தில் ஜெமினி கணேசனுக்கு அண்ணனாக நடித்தார், ஜெமினியின் flair இவரை காணாமல் அடித்தது. எஸ்.எஸ்.ஆரின் "வானம்பாடி" படத்தில் "நில், கவனி, புறப்படு" பாடலில் அந்த முதல் மூன்று வரிக்கும் இவருடைய Expression இன்று பார்த்தாலும் சிரிப்பை வரவழைக்கக்கூடியது. சினிமாவில் நாடக நடிப்பின் செயற்கைத்தன்மையை இவரால் ஆரம்பகாலத்தில் உதறவே முடியவில்லை.

ஒரு நாடக நடிகையைத்தான் முத்துராமன் காதல் திருமணம் செய்து கொண்டார். இயக்குனர் (தேவராஜ்) மோகனின் சகோதரி.

காதலிக்க நேரமில்லை(1964) படத்தில், இவர் கிழவர் வேடம் போட்டு வருகிற நேரங்களில் பாலையா, நாகேஷ் இருவருக்கும் பிரமாதமாக ஈடுகொடுத்தார். அதே போல் "எதையும் தாங்கும் இதயம்" படத்தில் எம்.ஆர்.ராதாவை படாத பாடு படுத்துவார். ஒரு நாயை ட்ரீட் பண்ணுவது போல "ச்சீ..ச்சீ..போய்யா" என்பார் முத்துராமன். எம்.ஆர்.ராதாவுக்கு கேட்கவேண்டுமா? கல்லையெடுக்கும் ஆளைப் பார்த்த நாய் ஈனமாக முனகல் குரல் கொடுத்து தவிக்குமே, அதே போல முத்துராமனிடம் பம்முவார்.

சிவாஜியுடன் அன்னை இல்லம், பார் மகளே பார், திருவிளையாடல், கர்ணன், பழனி என்று ஆரம்பித்து பின் பெரும்பாலான படங்கள்.. ஊட்டி வரை உறவு, சிவந்தமண், அருணோதயம், இருதுருவம், சொர்க்கம், எங்கிருந்தோ வந்தாள், மூன்று தெய்வங்கள், ராஜராஜசோழன், வைரநெஞ்சம், அவன்தான் மனிதன்... இன்னும்... இன்னும்...

எம்.ஜி.ஆருடன் கண்ணன் என் காதலன், என் அண்ணன், ஒரு தாய்மக்கள்..

ஜெமினியுடன் பூஜைக்கு வந்த மலர், வாழ்க்கைப் படகு, அவளுக்கென்று ஓர் மனம், புன்னகை, சுடரும் சூறாவளியும் போன்ற படங்கள்.

பின்னால் தான் இவருக்கு தனிக்கதாநாயகனாக மதிப்பு வந்தது. மயங்குகிறாள் ஒரு மாது, தீர்க்க சுமங்கலி, உறவு சொல்ல ஒருவன், திக்குத் தெரியாத காட்டில், சூரிய காந்தி.

நடிகர் சிவகுமாரின் மனைவியும் சூரியா, கார்த்தி இருவரின் தாயாருமான லட்சுமி அம்மணிக்கு அந்த காலகட்டத்தில் முத்துராமனின் நடிப்பு மிகவும் பிடிக்கும். சிவகுமார் "என் மனைவி முத்துராமனின் ரசிகை" என அப்போது குறிப்பிடுவார்.

Wig வைத்து நடிக்க ஆரம்பித்த பின் தான் முத்துராமனுக்கு இலட்சணமே வந்தது. அதுவரை பார்க்க ஏதோ உரித்த கோழி போலத்தான் இருந்தார். முத்துராமனுக்கு தலையில் Wig பிரமாதமாக பொருந்தும். பின்னால் சத்யராஜுக்கு Wig பொருந்தியதைப் போல. குரல் கூட சத்யராஜின் குரல் சில சமயங்களில் முத்துராமன் குரல் போல இருக்கும்.


கே.ஆர்.விஜயாவுடன் அதிகப் படங்களில் ஜோடியாக நடித்தவர் நடிகர் முத்துராமன் தான்.

கே.ஆர் விஜயாவின் நூறாவது படம் நத்தையில் முத்து (1973) படத்திலும் ஜெயலலிதாவின் நூறாவது படம் திருமாங்கல்யம் (1974) இரண்டு படங்களின் கதாநாயகன் முத்துராமன் தான்.

எம்.ஜி.ஆர், சிவாஜி, ஜெமினி சாதனை முத்துராமனால் எட்டமுடியாத விஷயம். ஆனால் அவர் ஜெய்சங்கர், AVMராஜன், ரவிச்சந்திரன், சிவகுமார் ஆகியோரை விட நல்ல நடிகர்.

மகன் கார்த்திக் (அப்போது கார்த்திக் பெயர் முரளி) பாரதிராஜா படத்தில் கதாநாயகனாக ஒப்பந்தமானார். அந்த சமயத்தில் இவர் வில்லனாக ரஜினி படம் "போக்கிரிராஜா" வில் நடிக்க ஆரம்பித்தார். சரி இவரும் ஒரு ரவுண்ட் வரப்போகிறார் என்றே எல்லோரும் எண்ணியிருந்தார்கள்.

கார்த்திக் நடித்து "அலைகள் ஓய்வதில்லை" சக்கைப்போடு போட்டது. முத்துராமன் ஊட்டிக்கு ஒரு பட சூட்டிங் போனவர் அதிகாலை ஜாக்கிங் போகும்போது உயிர் விட்டார். கமல்ஹாசன் தான் கீழே விழுந்து கிடந்த முத்துராமனைப் பார்க்க நேர்ந்தது. அவர் உடல் தூக்கியபோது அவ்வளவு திடகாத்திரமாக இருந்ததை கமலால் உணரமுடிந்தது. சட்டென்று எழுந்து தன் வெடிச்சிரிப்புடன் முத்துராமன்



"நல்லா ஏமாந்தீங்களா" என சொல்லமாட்டாரா என்று தான் அப்போது அவருக்குத் தோன்றியதாம்.

பாவம் முத்துராமன் தொழில்ரீதியாக மட்டுமல்லாமலும் கூட துர்பாக்கியசாலி, தமிழில் மற்ற கதாநாயகர்களை விடவும்.

எஸ்.எஸ்.ஆர் இன்று 90 வயதில் வாழ்ந்துகொண்டிருக்கிறார். AVM ராஜனுக்கு இன்று 79 வயது. அல்லேலூயா! ஏசுவின் அடிமை! எம்ஜிஆருக்கு சாகும்போது official age 70! சிவாஜி மரணமடைந்த போது 74 வயது. ஜெமினி கணேஷ் 85 வயதில் இறந்தார். ஜெய்சங்கருக்கு சாகும்போது 62 வயது. ரவிச்சந்திரன் மரணம் 71 வயதில்.

52 வயதில் வாழ்க்கையை முடிக்க முத்துராமன் நோயாளியுமல்ல. அலைகள் ஓய்வதில்லை தவிர்த்து மகன் கார்த்திக் நடித்த படங்களை பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை. கார்த்திக் சிவாஜி மகன் பிரபுவை விடவும் சிறந்த நடிகன். சிவகுமார் தன் மகன்களின் சிறப்பைக் கண்டு களிக்கும் பேறு பெற்றிருப்பது போல முத்துராமனுக்கு வாய்க்கவில்லை.

அப்போது முதலமைச்சர் எம்.ஜி.ஆர் இரங்கலில் : "அரசியல், சமுதாயத்தொண்டு என்றெல்லாம் முத்துராமனைப் பற்றி பேச ஒன்றும் இல்லையென்றாலும் கூட "நட்பு, பழகும் தன்மை" இவற்றைப் பொறுத்தவரை ஒரு சகாப்தம் மறைந்து விட்டது என்றே சொல்லவேண்டும்" என்றார்.

# அனலைதீவு பயணம்...

- உபாலி சமரசிங்க

நாங்கள் குறிகட்டுவான் தரிப்பிடத்திலிருந்து அனலை தீவுக்கு பயணத்தைத் தொடர்ந்தோம். கடலை இரண்டாகப் பிளந்து கொண்டு மோட்டார் ஜெட் படகு சென்றது. அந்த பயணத்துக்கு 20 நிமிடங்களே எடுத்திருக்கும். அனலைதீவில் ஏனைய தீவுகளை போல பெரிய ஒரு தரிப்பிடம் இல்லை.

தீவு வாசிகள் யாழ்ப்பாணத்துக்கு சென்று வரும் போது அவர்களை வீட்டுக்குக் கொண்டு செல்லும் லான்ட் மாஸ்டர் எனப்படும் கை டிரக்டர் பின்னால் இருந்தது. அதில் நெருக்கிக் கொண்டு பயணம் செய்த அந்த மக்கள் தனியார் பஸ்களைப் போல் தேங்காய்களை அடுக்கினாற் போல பயணம் செய்கின்றனர்.

நாம் கடற்படை காவல் துறைக்கு வந்து அதி-காரிகளுடன் பேசினோம். அனலை தீவானது 5.5 சதுர கிலோமீற்றர் விசாலமானது. இத்தீவுக்கு இருப்பது 2 முச்சக்கர வண்டிகளாகும். ஒன்று தனிப்பட்ட ஒருவருக்குரியது. மற்றையது மருத்துவமனையின் நோயாளிகளைக் கொண்டு செல்லும்'அம்பியூலன்ஸ் திறிவீலர்' ஆகும். அந்த அதிகாரி தனிப்பட்ட திரிவீலர் சொந்தக்காரருக்கு அவசர தொலைபேசி அழைப்பொன்றைக் கொடுத்தார்.

'இப்போது அவர் வருவார்' அந்த அதிகாரி கூறினார்.

ஏன் இந்தத் தீவுக்கு 'அனலை தீவு' என்று பெயர் என நான் அந்த அதிகாரியின் உதவியோடு அங்கிருந்த இளைஞர்களிடம் கேட்டேன். கடலால் சூழப்பட்ட இந்த சிறிய தீவில் பிறந்து இங்கு மிகக் கஷ்டத்துக்கு மத்தியில் படித்த அந்த இளைஞன் தமிழ் பேராசிரியர் ஒருவரைப் போல் பேசினார்.

'அனலை' என்பதற்கு தமிழ் மொழியில் பல அர்த்தங்களுண்டு, அதிலொன்று தான் கலப்பம் என்று சொல்வது, அது சரியாக கலப்படம் போன்ற தொன்றாகும். அடுத்தது வெக்கைஎன்பது. அதிக உஷ்ணத்துடன் கூடிய சூடான அல்லது வெப்பத்துடன் கூடியது என்பதாகும்.

எமது மூதாதையர் கூறும் கதைகளின்படி இந்த யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள தீவுகளில் அதிக வெப்பத்தைக் கொண்ட தீவு அனலை தீவாகும். சிலர் இதற்கு அனல் தீவு என்றும் கூறுகின்றனர்... அது சரியென்று தான் எமக்கும் தோன்றுகின்றது.

இதற்கிடையில் எமது திறிவீலர் அவ்விடத்துக்கு வந்தது. நாம் கடற்படை அதிகாரி குமார உடன் திரீவீலரில் ஏறிக் கொண்டோம். அவர் எங்களை குறுகிய பாதைகளினூடாகக் கூட்டிச் சென்றார். இங்கு கதிகால் என்ற கம்பியாலான வேலி எமது கவனத்தை ஈர்த்தது. நீண்ட முட்களைக் கொண்ட இந்த கம்புகள் பலம் வாய்ந்தவை. அனலை தீவு வாசிகள் வேலிகளின் எல்லைகளை அமைத்துக் கொண்டது இந்த கதிகால் வேலியினாலாகும்.

இந்த கதிகால் வேலியால் எல்லைப் படுத்தப் படும் ஒரு தோட்டத்துக்கு ஆடு, மாடு அல்லது ஒரு கோழிக்குக் கூட உள் நுழைய முடியாது.

**யாழ்ப்பாணத்திலிருந்து வந்த 50-60 குடும்பங்களால் தான் இத்தீவில் முதல் குடியேற்றங்கள் உருவாகின. எழுபதுக-`ளில் இங்கு ஐந்தாயிரம் மக்கள் இருந்தனர். இன்று இங்கு சுமார் 1090 பேர் இருக்கின்றனர். வளமான மண்ணைக் கொண்ட வயல்கள் எமது தந்தையருக்கு இருந்தன. ஆனால் மக்கள் யுத்த தாக்குதல்களினால் பல வருடங்கள் பின்தள்ளப்பட்டார்கள். வயல்கள் பாழடைந்தன. ஒரு மீனைப் பிடித்து அந்த நாள் சாப்பிட்டு வேலையை பூர்த்தி செய்து கொள்ளும் அளவுக்கு அவர்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். மீனவத் தொழிலால் சீவிக்கவும் முடியாது. என்றாலும்... வேறெங்கு எவ்வளவு சுகமான சொகுசு வசதிகள் இருந்தாலும் நாம் பிறந்த இந்தப் பூமி எமக்கு பெறுமதி மிக்கது.**

இடைக்கிடை தென்னை, பனைத் தோப்புகளுக் கிடையில் நீளமான புதர்களுக்கிடையில் பாய்ந்து நாங்கள் விசாலமான பழைய வீடொன்றை வந்தடைந்தோம்.

'ஐயா வாங்க. இது தான் தீவின் ஆகப் பழைய மனிதர் இருக்கும் வீடு. ஆரம்பத்தில் இந்தஅனலை தீவின் பாடசாலையின் அதிபராக இருந்து பிற்காலத்தில் யுத்தத்தோடு நாட்டிலிருந்து வெளியேறி சில காலம் கழித்து வந்திருக்கிறார்.' கடற்படை அதிகாரி அவரைப் பற்றி கூறினார்.

நான் சிவப்பிரகாசம் காராளபிள்ளை என்ற அந்த மனிதரிடம் பல கேள்விகளைக் கேட்டேன். எழுபத்தைந்து வயதுடைய அவர் தமது இளம் பராயத்துக்குத் திரும்பி நல்ல ஞாபகத்தோடு எனக்குப் பதிலளித்தார்.

'அனலைதீவில் இன்று ஓரளவு மக்கள் குறைந்துள்ளனர். ஆனால் அப்போது இவ்வாறிருக்கவில்லை யாழ்ப்பாணத்திலிருந்து வந்த 50-60 குடும்பங்களால் தான் முதலில் இத்தீவில் முதல் குடியேற்றங்கள் உருவா-கின. எழுபதுகளில் இங்கு ஐந்தாயிரம் மக்கள் இருந்தனர். 1031 குடும்பங்கள் இருந்தன.

யுத்தத்தினாலேற்பட்ட துன்பங்களினால் பெரும்பாலானோர் தீவை விட்டு கனடா, இங்கிலாந்து, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளில் வேலைகளைத் தேடிக் கொண்டார்கள். இன்று இங்கு சுமார் 1090 பேர் இருக்கின்றனர்.

வளமான மண்ணைக் கொண்ட வயல்கள் எமது தந்தையருக்கு இருந்தன.







அன்று தீவிலிருந்த மக்களினதும் இன்றிருக்கும் மக்களினதும் ஜீவனோபாயத்தைப் பற்றி, ஏதாவது சொல்ல முடியுமா? நான் அவரிடம் கேட்டேன்.

'இன்று அவர்கள் சகலவற்றிலும் முழுமையானவர்களல்ல. மீனவத் தொழிலால் சீவிக்கவும் முடியாது. முன்னர் புகையிலை, மரக்கறி, நெல் என்பவற்றை பயிரிட்டார்கள், மிளகாய் பயிரிடலையும் நன்றாகவே செய்தார்கள் இன்றும் சிற்சில இடங்களில் பயிரிடுகிறார்கள். ஆனால் மக்கள் யுத்த தாக்குதல்களினால் பல வருடங்கள் பின்தள்ளப்பட்டார்கள். அவர்களின் வயல்கள் பாழடைந்தன. ஒரு மீனைப் பிடித்து அந்த நாள் சாப்பிட்டு வேலையை பூர்த்தி செய்து கொள்ளும் அளவுக்கு அவர்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

வேறெங்கு எவ்வளவு சுகமான சொகுசு வசதிகள் இருந்தாலும்நாம் பிறந்த இந்தப் பூமி எமக்கு பெறுமதி மிக்கது.'

சிவப்பிரகாசத்தின் கருத்துக்கள்தெளிவாகவும் உணர்ச்சி பூர்வமானவையாகவும் இருந்தன.

இத்தீவின் கரையானது ஒரு காலத்தில் தரைப்பகுதியில் ஒரு மண் வரிசையால் மாத்திரம் பிரிக்கப்பட்டிருக்கும் ' புளியந் தீவு' பற்றியும் கேட்டோம். அது 750 சதுர அடி பரப்பளவைக் கொண்ட சிறியதோர் தீவாகும்.

'இந்த புளியந்தீவு எங்களது சிறு வயதில் எமக்கு தடை செய்யப்பட்ட ஒரு தீ-வாகும். அதில் பயங்கர பாம்புகள், மலைப் பாம்புகள், இருக்கின்றன. கடலில் தண்ணீர் அதிகரிக்கும் போது தீ-வானது எம்மிலிருந்து பிரிக்கப்படும்.நீர் குறைந்ததும் இந்த மண் வரிசையினால் இத்தீவிலிருந்து அடுத்த தீவுக்குப் போகலாம். சின்னஞ் சிறு வயதில் நாம் பெடியன்களோடு சென்று அதை சிறிது எட்டிப் பார்த்து வருவோம். அதிக தூரம் செல்வதில்லை. அந்தக் காலத்தில் பாருங்கள் மாடுகளைப் போல் பெரிய கொம்புகளையுடைய ஆடுகளும் அங்கு இருந்திருக்கின்றன.'

அப்பக்கம் போகும்படி திறிவீலர் சாரதிக்கு கூறினேன்.

இயற்கை அமைப்பின் புதினமான ஒரு காட்சியை நான் கண்டேன். புற்களால் நிறைந்த தீவானது மிக அருமையானது. அந்த நாட்களில்பெய்த பெரும் மழையினால் மண் குவியல்களும் அசுத்தமான வகையில் தீவை ஒன்றிணைக்கும் இடத்தில் பிற்பக்கமாக இருந்தாலும், மண் வரிசையினூடாக புளியந் தீவிற்குள் சென்றோம்.

நாங்கள் அத்தீவின் ஒரு கிலோ மீற்றர் அளவில் உள்ளே சென்றோம். அங்கு ஒரு பெரிய சிவன் கோயில் இருந்தது. தீவு இவ்வாறு கடலிலிருந்து பிரிக்கப்படாத காலத்தில் ஞாயிறு பகலில் வந்து சிவனுக்கு பூசைகளைச் செய்வது அனலை தீவு வாசிகளின் பழக்கமாகும். கோயிலின் முற்றம் ஆயிரம் பேர் வந்து இருக்கக்கூடிய ஒரு மைதான-மாகவும் இருந்தது.

நாம் மீண்டும் அனலை தீவுக்கு வந்தோம். அனலை தீவின் மருத்துவமனை சாதாரண கிராமிய மருத்துவமனையாகும். அது 1952இல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. பிள்ளைப் பேற்றுக்கு ஏனைய தீவுகளைப் போல யாழ்ப்பாணத்துக்குச் செல்ல நேர்ந்தாலும் சாதாரண நோய்களுக்கு இங்கு மருந்துகள் கொடுக்கப்படும். பெரிய ஒரு சுகயீனத்துக்கு திறிவீலர் அம்புலன்ஸினால் அனலைதீவு தரிப்பிடத்துக்கு வந்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்வது கடற்படை படகொன்றினாலாகும்.

சைக்கிள் இம்மக்களின் பெரிய ஒரு பொக்கிஷமாகும். தமது பிள்ளைகளை முதுகில் ஏந்திக் கொண்டு பயணம் செய்வது இந்த சிறிய வாகனத்திலாகும்.

இத்தீவு இரவு நேரங்களில் வெளிச்சமாவது ஒரு ஜெனரேட்டரினால் மாத்திரமே. அதுவும் சலாகை முறையில் மின்சாரம் கிடைப்பதினாலாகும். அதுவும் உடைந்து போனால் இவர்கள் நட்சத்திர ஒளியின-ால் இரவை கடத்த வேண்டிய நிலையிலுள்ளனர்.

இத்தீவின் விசாலமான கோயில் ஐய்யனார் கோயிலாகும். ஐய்யனார் சிவபெருமானின் ஒரு மகன். பார்வைக்கு விநாயகர் சிலைக்கு ஒப்பாக இருப்பினும், ஐய்யனார் என்பவர் விநாயகர் அல்ல என்கின்றனர். 1931 ல் ஆரம்பிக்கப்பட்ட இக்கோயிலின் 125 ம் ஆண்டு விழா நாம் அங்கு செல்ல சில தினங்களுக்கு முன் நடைபெற்றதாக பூசாரி கூறினார்.

இலங்கையில் மிகப் பெரிய தேர் இருப்பது இக்கோயிலில் தான். தேர்திருவிழா காலத்துக்கு இங்கு வந்தீர்களானால் உங்களுக்கு நிறைய விடயங்கள் தெரிந்து கொள்ள முடியும். பிள்ளைகளில்லாதவர்களுக்கு பிள்ளை கருத்தரிக்கும். திருமணமாகாதவர்களுக்கு திருமணம் நடக்கும், இந்த அப்பாவி மக்களின் விவசாய நடவடிக்கைகள், மீன்பிடித் தொழில் யாவற்றுக்கும் கை கொடுப்பது ஐய்யனார் தெய்வம் தான். காலை மாலை கடலில் பயணம் செய்யும் அவர்களைப் பாதுகாப்பதும் இந்த அய்யனார் தான்.

பூசாரி இவ்வாறு சொல்லிக் கொண்டுவிளக்குகள் பலவற்றை எரித்து சுற்றிலும் பெரியதார் விளக்கினால் அந்த ஐய்யனார் சிலையைச் சுற்றி தீபம் காட்டியவண்ணம் எங்களையும் ஆசிர்வதித்தார். □

# பஸ்சேவை ஆரம்பிக்கவேண்டும் வலுவடைகிறது கோரிக்கை

மல்லாகம் டிப்போவில் இருந்து இரவுத்தங்கல் பஸ் சேவையினை ஆரம்பிக்குமாறு வலிவடக்கு, தெற்கு மக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

பல ஆண்டுகாலமாக நடைபெற்றுவந்த காலை நேர பஸ்சேவைகள் தற்போது மல்லாகம், தெல்லிப்பளைப் பகுதிகளில் இருந்து நடைபெறுவதில்லை

இதனால் காலை 4.30 மணியிலிருந்து 5.30 மணிவரை பயணிகள்பஸ்ஸிற்காக வீதியில் காத்திருக்கின்றனர்.

இச்சிரமத்தைத் தவிர்க்க மல்லாகம் பஸ் டிப்போவில் இரவுத்தங்கல் பஸ் சேவையினை நடாத்துவதன் மூலமே இதனைத் தவிர்க்க முடியும் என பயணிகள் தெரிவிக்கின்றனர்.

முன்னர் மல்லாகம் டிப்போவில் இருந்து காலை 4.45 மணிக்கு முல்லைத்தீவுக்கான பஸ் சேவையில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (148)

# பூநகரியில் குளங்கள் புனரமைப்பு அதிகாரிகளுடன் கலந்துரையாடல்


(பூநகரி)

பூநகரியில் உள்ள பத்து குளங்களை புனரமைப்பது தொடர்பான கலந்துரையாடல் வட மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் கடந்த 10 ஆம் திகதியன்று யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது. வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியின் பணிப்பின் பேரில் ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினார்.

இக்கலந்துரையாடலில் பூநகரியில் பத்து குளங்கள் புனரமைப்பது தொடர்பான ஆயத்தங்களை மேற்கொள்ளுதல் பற்றி கலந்துரையாடப்பட்டது.

இதன்போது கிளிநொச்சி நீர்ப்பாசன பிரதிப் பணிப்பாளர் என்.சுதாகரன், கிளிநொச்சி பிராந்திய ஆணையாளர், இராணுவ பொறியியல் பிரிவு உத்தியோகத்தர்கள் மற்றும் ஆளுநரின் யாழ்ப்பாண ஒருங்கிணைப்பு செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.





அரியாலை ஜே/90 பூம்புகார் உலக உணவு நிறுவனத்தால் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களுக்கு வழங்கப்படும் நிவாரண விநியோகம் தொடர்பாக கிராம அலுவலர் எஸ். விஜிதன், நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித்தலைவரும் ஈ.பி.டி.பி நல்லூர் பிரதேச அமைப்பாளருமான அ.இரவீந்திரதாஸன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு பொதுமக்களுடன் கலந்துரையாடுவதைக் காணலாம்.

# கர்ப்பூரம் விற்றுக் குடும்பத்தைக் காப்பாற்றும் பெண்

(சிகரம்)

நல்லூர் ஆலய முன்வீதியில் கடும் வெய்யிலையும் பொருட்படுத்தாது காலை முதல் மாலை வரை சுடுமணலில் இருந்து கர்ப்பூர விற்பனையில் ஈடுபட்டு வருகின்றார் 57 வயதுடைய சிவராசா சாந்தினி என்ற பெண் ஆனைக்கோட்டை கூழாவடிப் பகுதியில் வசித்து வரும் இவர்

நாட்டில் நடைபெற்ற யுத்தத்தின்போது 1995 ஆம் ஆண்டு தனது கணவன் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி இறந்ததாகவும், அதன்பின்னர் அன்று தொடக்கம் இன்றுவரை தனது ஆறு பிள்ளைகளையும்(5 பெண்பிள்ளைகள், 1 ஆண் பிள்ளை) கர்ப்பூரம் விற்றே வளர்த்து வருவதாகவும் குறிப்பிடுகிறார் அவர் தொடர்ந்து கூறுகையில்,

எனது ஒரேயொரு மகனும் தான் விரும்பிய வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுத்து தனியாகச் சென்று வாழ்ந்து வருகிறார் தற்போது மகனிடமிருந்து எந்தவித உதவிகளும் கிடைப்பதில்லை மிகவும் பொருளாதாரப் பிரச் சினையின் மத்தியில் வாழ்க்கை நடாத்தி வருகி றேன்.

எந்தக் கோயிலில் திருவிழா என்றாலும் நான் போயிடுவேன், எவ்வளவு தூரம் என்றாலும் போயிடுவேன், எனக்கு எனது கஷ்டத்தை விட பிள்ளைகளை வளர்க்கவேணும் என்ற கவலை தான், அதுகாகத்தான் நான், இந்த வயசிலேயும் ஓடி உழைக்கிறன் தற்போது நடைபெற்றுவரும் நல்லூர் திருவிழா காலத்தில் நாளொன்றுக்கு 250 தொடக்கம் 500 ரூபா வரை இலாபம் கிடைப்பதாகவும், மாம்பழத் திருவிழா, தேர் போன்ற விசேட தினங்களில் 1000 ரூபாவிற்குமேல் இலாபம் கிடைக்கும்.



இந்தப் பகுதியில் கர்ப்பூர விற்பனையில் ஈடுபட்டு வரும் சிறுவர் கள், இளைஞர்கள் ஓடித்திரிந்து விற்பனை செய்கின்றனர் ஆனால் என்னால் அவ்வாறு ஓடித் திரிந்து விற்பனை செய்யமுடியாது. நானிருக்கும் இடத்திற்கு வருபவர்களுக்கு மட்டுமே விற்பனை செய்து வருகிறேன்.

சிவராசா சாந்தினியின் பிள்ளைகளில் இரண்டு பேர் பாடசாலையில் கல்வி கற்று வருவதுடன், இரண்டு பெண் பிள்ளைகள் வீட்டில் இருந்தவாறே பீடி சுற்றி கடைகளுக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

இதனால் குடும்பச் செலவுக்கும் பிள்ளைகளின் கல்விச் செலவுக்கும் ஓரளவு போதுமான வருமானம் கிடைப்பதாகஅவர் தெரிவித்தார்.

இதேவேளை, இவ்வாறு கர்ப்பூரம் விற்று, பீடி சுற்றிச்சேர்த்த பணத்தைக் கொண்டே இவர் தனது மூத்த மகளுக்கு 200,000 ரூபா சீதனம் கொடுத்து திருமணம் செய்துவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பதிவிறக்கப் பெட்டகம்

ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுக்கேயான திறமையும் மன–அமைப்பும் உள்ளது. அது அவனது வாழ்க்கைப் போக்கை அணுகுமுறையை தீர்மானிக்கிறது. நவீன கவிஞரான கலாப் பிரியா தீவிர எம்.ஜி.ஆர் ரசிகரென்றால் அது "சீரழிவா?". அவர் எம்.ஜி.ஆர் ரசிகராக இல்லாமல் தினமும் பிரம்மராஜனின் உலக இலக்கிய கவிஞர்களின் மொழிபெயர்ப்பு தொகுப்பை வரிக்கு வரி வாசித்திருந்தால், லக்கான், தெரிதா, நீட்சே எல்லாம் கரைத்துக் குடித்து விட்டு விட்டத்தை பார்த்து அமர்ந்திருந்தால் இன்னும் மேலான கவிஞராக இருந்திருப்பாரா? விக்கிரமாதித்யன் சொல்வது போல் மனுஷ்யபுத்திரன் சின்ன கவிதைகள் மட்டுமே எழுதியிருந்தால் மேம்பட்டு போயிருப்பாரா? யார் வாழ்க்கையை இங்கு யார் தீர்மானிப்பது? உண்மையில் நமக்குக் கொடுக்கப்பட்ட கோப்பை நீரை முழுந்தளவுக்கு குழத்து விட்டுத் தான் உலகில் இருந்து விடை பெறுகிறோம். எந்தளவுக்கு குடித்தோம் என்பது நம் உரிமை மற்றும் சுதந்திரம். மனித வாழ்வின் அழகே இந்த "சீரழிவதற்கான" சுதந்திரம் தான்.

– **அபிலாஷ் சந்திரன்**

எதை நான் எனது தகுதிகளாகக் கருதுகிறேனோ அதைத தான் மற்றவர்கள் என் மீதான வசைகளாகப் பயன்படுத்துகிறார்கள். நான் ஒரு குடிகாரன் என்று அழைக்கப்பட்டால், நான் வாழ்வைக் கொண்டாடுகிறேன் என்று பொருள். நான் ஒரு ஸ்திரலோலன் என்று அழைக்கப்பட்டால், பெண்களை நேசிப்பவன் என்று பொருள். நான் ஒரு பிச்சைக்காரன் என்று அழைக்கப்பட்டால், பிழைப்புக்காக ஒவ்வொரு இடமாக தன்னைத்தானே விற்றுக் கொண்டு நக்கிப் பிழைப்பவன் அல்ல என்று பொருள். நான் ஒரு கோமாளி என்று அழைக்கப்பட்டால், பிறருக்கு மகிழச்சியைத் தருவதைத் தவிர வேறு எந்த வக்கிரமும் வன்முறையும் இல்லாதவன் என்று பொருள்.

– **சாரு நிவேதிதா**

தீண்டாமையின் வேர் சாதிய அமைப்பில் உள்ளது. சாதிய அமைப்பின் வேர் வர்ணாசிரம நெறியுடன் இணைக்கப்பட்ட சமயத்தில் உள்ளது. வர்ணாசிரம சமய நெறியின் வேர் பார்ப்பனிய சமயத்தில் உள்ளது. பார்ப்பனிய சமயத்தின் வேர் எதேசசாதிகாரத்தில் அல்லது அரசியல் அதிகாரத்தில் உள்ளது.

– **அம்பேத்கர்**

ஒருவரை பிறப்பின் அடிப்படையில் மட்டும் மதிப்பிடுவதுதானே பார்ப்பனீயம். அதை செய்கிறவர்கள் எந்த ஜாதியில் பிறந்திருந்தாலும் அவர்கள் எல்லாரும் பார்ப்பனர்கள்தான். – **ஞாநி**

"மனிதன் உயர்ந்த மதிப்பீட்டைக் கொண்ட ஒரு நோக்கத்திற்காக வாழ்க்கையை விட மரணத்தையே விரும்புகிறான்" என்றார் ஹெகல். "மனிதன் அந்த உயர்ந்த மதிப்பீட்டிற்காக பிறரைக் கொல்பவனாகவும் இருக்கிறான் என்பதையும் சேர்த்துக கொள்ள வேண்டும்" என்றார் ஆபிரிக்க சமூக விஞ்ஞான ஆய்வாளரான மஹ்மூத் மம்தானி.

தற்கொலைக்கான காரணங்கள் முக்கியமல்ல. அதே காரணங்களுடன் ஏராளமான மனிதர்கள் வாழ்துகொண்டிருக்கிறார்கள். மனிதனிடம் தாங்கும் சகதிக்கான ஒரு ரகசிய அச்சு இருக்கிறது. ஏதோ ஒரு தருணத்தில் அந்த அச்சு முறிந்து விழுகிறது. ஒரு மனிதன் பிரச்சினைகளால் இறப்பதில்லை. அந்த பிரச்சினைகளை சந்திக்கும் அவனது தர்க்கத்தின் பலமும் ஆன்மீக பலமும் பலவீனமடையும் ஒரு தருணததில்தான் அவன் அந்த முடிவை நோக்கிச் செல்கிறான். அப்போது எல்லாமே முடிவற்றதாக தோன்றுகிறது. முடிவற்ற ஒன்றின்மீது எழுதும் ஒரு முடிவாக அது மாறுகிறது. இந்த உலகத்தை பழிவாங்குவதற்காக தங்களைத் தாங்களே அழித்துக்கொண்டவர்கள் இந்த உலகத்தின் குற்ற உணர்வு ஏதுமற்ற மறதியை அறிவதில்லை. வாழ்வில் நெருக்கடிகள் எவ்வாறு தானாக கடந்து போய்விடுகின்றன என்பதை அவர்கள் புரிந்து கொள்ளும்போது திரும்ப வரமுடியாத ஒரு இடத்திற்குச் சென்று விடுகிறார்கள். தற்கொலை செய்துகொள்ள விரும்பும் ஒவ்வொரு மனிதனிடமும் சொல்வதற்கு ஒன்று இருக்கிறது அவன் இறந்துபோனதற்கு அடுத்த நாள் வரும் சூரியோதயம் பற்றியது அது.

– **மனுஷ்யபுத்திரன்**

நாம் இழந்த உயிர்கள் மட்டுமல்ல, நம்மால் எடுக்கப்பட்ட உயிர்களும் அதே அளவுக்கு மதிப்பு வாய்ந்தவைதான்.

– **அசோகமித்திரன்**

நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக் கொன்றாகும் ஆக்கம் கடை.

– **திருவள்ளுவர்**

# கண்ணிவெடி அகற்றும் பணிகள் முல்லை - ஆனந்தபுரத்தில் நிறைவு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஆனந்தபுரத்தில் கண்ணிவெடி அகற்றும் பணிகளில் பெரும்பாலானவை நிறைவடைந்துள்ளதாகவும், மீள்குடியேற்ற அமைச்சின் அனுமதி கிடைத்ததும் இங்கு மக்கள் மீள்குடியேற்றப்படுவார்களெனவும் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மோகன்ராஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மேற்கில் வேணாவில் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் 300 குடும்பங்களைச் சேர்ந்த 974 பேர் இன்றைய தினம் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

மெனிக்பாம் நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த இப்பகுதி மக்கள் அங்கிருந்து அழைத்துவரப்பட்டு கைவேலி கணேசா வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம் மல்லிகைத்தீவு பகுதி வாசிகளான 174 குடும்பங்களைச் சேர்ந்த 569 பேர் நேற்று முன்தினம் அப்பகுதியிலேயே மீளக்குடியமர்த்தப்பட்டனர்

அடுத்த கட்டமாக மந்துவில் அம்பலவன் பொக்கணை - கேப்பாபிலவு ஆகிய இடங்களிலும் இறுதியாக ஆனந்தபுரத்திலும் மீள்குடியேற்றங்கள் இடம்பெறவுள்ளன.

ஆனந்தபுரத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்தின் மீள்குடியேற்றம் பூர்த்தியடைந்துவிடும். இத்துடன் மெனிக்பாம் நலன்புரி நிலையத்தில் உள்ளவர்கள் அனைவரும் மீள்குடியேற்றப்பட்டுவிடுவர்.

அதன் பின்னர் மெனிக்பாம் நலன்புரி நிலையத்தை மூடிவிட முடியும் எஞ்சிய பகுதிகளில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்

# பிச்சைக்காரர்களின் தொல்லை வவுனியா நகரில் அதிகரிப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் அண்மைக்காலமாக பிச்சைக்காரர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாகவும் இதனால் பொதுமக்கள் உட்பட வர்த்தகர்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதாகவும் வவுனியா மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ். சீனிவாசன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைக்காலமாக வேறு பிரதேசங்களில் இருந்து வவுனியா மாவட்டத்திற்கு வரும் பிச்சைக்காரர்கள் வர்த்தக நிலையங்கள் மற்றும் பேருந்துகள் உட்பட அனைத்து இடங்களிலும் பொது மக்களிடம் பிச்சை கேட்டு பின்தொடர் வதனால் நகர்ப்புறத்திற்கு வரும் பொதுமக்களும் வர்த்தகர்களும் சிரமத்திற்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

அத்துடன் சிறுவர்களை பிச்சை எடுப்பதற்கு பயன்படுத்துவதுடன் அவர்களது கல்வி உரிமை முதற்கொண்டு அனைத்து உரிமைகளும் மீறப்பட்டு வருகின்றன. இவ்விடயம் தொடர்பில் பல்வேறு நடவடிக்கைகளை சமூக சேவைகள் திணைக்களம் மேற்கொண்டபோதிலும் மக்களின் ஒத்துழைப்பின்மை காரணமாக இவ்வாறானவர்களை கட்டுப்படுத்த முடியாதுள்ளது.

இதேவேளை பிச்சை எடுக்க வருபவர்கள் பேருந்துகளில் ஏறி பயணிகளிடம் பணம் கேட்பதற்கு பேருந்து உரிமையாளர்கள் அனுமதி மறுக்க வேண்டுமென்பதுடன் வர்த்தக நிலையங்களில் இவர்களுக்கு பணம் வழங்குவதை தவிர்ப்பதனாலும் இவ்வாறானவர்களை கட்டுப்படுத்த முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்ததுடன் அண்மையில் பிச்சைக்காரர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கென நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் அது பயனளிக்கவில்லை எனவும் தெரிவித்தார்

## ஆலயத்தில் திருட்டு

புலோலி மந்திகை கண்ணகை அம்மன் ஆலயத்தில் நேற்று முன்தினம் ஆலய உண்டியல் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டுள்ளது.

அத்துடன் களஞ்சியப்பகுதி அறையும் உடைக்கப்பட்டுள்ளது என ஆலய நிர்வாகத்தினரால் அப்பகுதி கிராம சேவையாளரிடம் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. (109)

## கட்டாக்காலி கால்நடைகளால் மன்னார் நகரில் அசௌகரியம்

(மன்னார்)

மன்னார் நகரில் கட்டாக்காலி மாடு, நாய் மற்றும் கழுதைகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்ற போதும் அவற்றின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காததன் காரணமாக விபத்துக்களும் நகர சீர்கேடுகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக மக்களும்,சமூக ஆர்வலர்களும் தெரிவித்துள்ளனர்.


மன்னார் நகரில் கட்டாக்காலி மாடுகள்,நாய் மற்றும் கழுதைகளும் பல்கிப்பெருகிய நிலையில் காணப்படுகின்றன. தற்போது மன்னாரில் வீதி அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் கட்டாக்காலி கழுதைகள் வீதிகளில் கண்டபடி ஓடித்திரிகின்றன. இதன் காரணமாக மன்னாரில் விபத்துக்கள் ஏற்படுவதோடு பல வாகனங்களும் கழுதையின் தாக்குதல்களினால் சேதமடைந்துள்ளன.

இதேவேளை கட்டாக்காலி தெரு நாய்களின் தொகை மன்னார் நகரில் அதிகரித்து வருகின்றன.

இவைகள் மக்களைக் கடிப்பதோடு பொது இடங்கள், வீதிகள் என்பவற்றை நாசப்படுத்துகின்றன.


தற்போது கடும் வறட்சி மற்றும் வெய்யில் நிலவி வருகின்றமையினால் கட்டாக்காலி நாய்களுக்கு விசர் நோய் ஏற்படுவதற்கான காரணங்களும் உள்ளது.

எனவே உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி உடன் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.



யாழ். அருணோதயக்கல்லூரி மாணவியான தேவதாசன் உமையாழினி குருநாடகப் பிரதியாக்கம் பிரிவு IV இல் தேசியமட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார். இவர் கடந்த ஆண்டு நடைபெற்ற தமிழ்த்தினக் கட்டுரையாக்கப் போட்டியில் பிரிவு III இல் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றிருந்தார் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

# மடு அன்னைக்கு இன்று பெருவிழா




உலகின் முக்கிய மரியன்னைத் திருத்தலங்களுள் ஒன்றான மடு அன்னைத் திருத்தலத்தின் வருடாந்த திருவிழாக்களில் முக்கிய திருவிழாவான ஆவணி 15ஆம் திகதி திருவிழாவுக்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் தெரிவித்தார்.

மன்னார் மறைமாவட்ட ஊடகத்துறைப் பொறுப்பாளரான தமிழ் நேசன் அடிகளார் மடு ஆவணித் திருவிழா தொடர்பாக ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது.

மடுத்திருப்பதியின் ஆவணித் திருவிழா கடந்த 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தினமும் ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன. இன்று புதன்கிழமை மரியன்னை விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட திருவிழா ஆகும். இன்றைய தினம் காலை 6.20 மணிக்கு இடம்பெறும் பெருவிழாத் திருப்பலியானது தமிழ், சிங்களம், ஆங்கிலம், இலத்தீன் ஆகிய மொழிகள் இணைந்ததாக ஒப்புக்கொடுக்கப்படும்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இரா.யோசேப்பு ஆண்டகை தலைமையில் இடம்பெறும் திருவிழாத் திருப்பலியில் கண்டி மறைமாட்ட ஆயர் வியானி பெனாண்டோ ஆண்டகை, காலி மறைமாவட்ட ஆயர் ரேமன் விக்கிரமசிங்க ஆண்டகை, அநுராதபுர மறைமாவட்ட ஆயர் நோபேட் அன்றாடி ஆண்டகை, கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மக்ஸ்வெல் சில்வா ஆண்டகை ஆகியோரும் பங்கெடுக்கின்றனர். திருவிழாத்திருப்பலியைத் தொடர்ந்து மடு அன்னையின் திருச்சுருவப் பவனியும் திருச்சுபருப ஆசீரும் இடம்பெறும்.

இன்றைய திருவிழாத் திருப்பலியானது இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் நேத்ரா தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பப்படும். அத்துடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவை தென்றல் அலைவரிசையிலும் சிங்கள சேவையிலும் நேரடியாக அஞ்சல் செய்யப்படும்.

இவ்வாண்டு மடுத்திருப்பதியின் ஆவணித் திருவிழாவுக்கான அனைத்து பூர்வாங்க ஏற்பாடுகளையும் மடுப்பரிபாலகர் அருட்திரு. எமிலியானுஸ்பிள்ளை மேற்கொண்டுள்ளார். மன்னார் மாவட்டச் செயலகத்தின் முழுமையான ஒத்துழைப்போடு மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு. விக்ரர் சோசை, மன்னார் மறைமாவட்டக் குருக்கள் மற்றும் ஏனைய மறைமாவட்டக் குருக்களின் அனுசரணையில் திருவிழா ஆயத்தங்கள் இடம்பெற்று வருகின்றன.

மடு யாத்திரிகர்களின் வசதிக்காக, போக்குவரத்து ஒழுங்குகள், தண்ணீர் வசதிகள், சுகாதார வைத்திய சேவைகள், பாதுகாப்பு ஒழுங்குகள் போன்றன செய்யப்பட்டுள்ளன. புதிதாக அமைக்கப்பட்ட குழாய்களில் குடிதண்ணீர் மற்றும் பாவனைக்கான தண்ணீர் வழங்கப்படுகின்றன. வறட்சி காரணமாக நீர் பற்றாக்குறை ஏற்படக்கூடிய சாத்தியக்கூறு இருப்பதனால் யாத்திரிகர்கள் நீரை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்தும்படி அறிவுறுத்தப்படுகின்றனர்.

மருதமடுத் திருத்தலம் ஒரு வியாபார ஸ்தலமோ அல்லது சுற்றுலாப் பகுதியோ அல்ல. பல நூற்றாண்டுகளாக ஆன்மிக மனமாற்றமும், அமைதியையும் அருளும் புனித மான திருத்தலமாகும். எனவே இத்திருத்தலத்திற்கு யாத்திரிகர்களாக வருவோர் இத்தலத்தின் புனிதத்தன்மைக்கு ஏற்ப நடந்துகொள்ளவேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர். திருத்தலத்தின் புனிதத்திற்குப் பொருந்தாத ஆடல், பாடல், சீட்டு விளையாடுதல், இசைக்கருவிகளைப் பயன்படுத்துதல் போன்ற கேளிக்கைகளும், மது அருந்துதலும், மது விற்றலும் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளன. இத்திருத்தலத்தில் கண்ணியமான நடத்தையைப் பேணும்படியாகவும், மரியாதையான ஆடைகளை அணியுமாறும் யாத்திரிகர்கள் வேண்டப்படுகின்றார்கள்.

மிதிவெடி அபாயங்கள் இன்னும் இருப்பதால் மிதிவெடி அகற்றப்படாத காட்டுப்பகுதிகளுக்குள் செல்வதும், மரங்களை வெட்டுவதும் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளன. மடு அன்னையின் பரிந்துரையையும் ஆசியையும் வேண்டி இத்திருத்தலத்திற்கு வரும் அனைத்துமக்களும் அன்போடு வரவேற்கப்படுகின்றார்கள்.

12) பின்வரும் பாடலைப் படித்து கேட்கப்படும் வினாவிற்கு விடை தருக

தம்பி தம்பி கடலைப் பார்

பரந்து கிடக்கும் அலையைப் பார்

தாவிக் குதிக்கும் அலையைப் பார்

தரையில் பொங்கும் நுரையைப் பார்

கடலில் துள்ளும் மீனைப்பார்

கப்பல் அசையும் அழகைப்பார்

மீனைப் பிடிக்கும் வலையைப்பார்

மூழ்கிக் கிடக்கும் முத்தைப்பார்

1) கடலில் பரந்து கிடப்பது எது? ..........................................

2) தாவிக் குதிப்பது எது? ..........................................

3) கடலில் துள்ளுவது எது? ..........................................

4) கடலில் மூழ்கிக் கிடப்பது எது? ..........................................

5) மீனைப் பிடிக்க உதவுவது எது? ..........................................

13) பின்வருவனவற்றுள் விரும்பிய ஒன்றைப்பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுக.

1) பாடசாலை 2) கிளி

..........................................

..........................................

..........................................

..........................................

..........................................





தரம் - 3 இற்கான அலகு பயிற்சிப் பரீட்சை - 2012

# கல்வி முரசு

வடமாகாணத்தின் முன்னணி ஆசிரியர்களால் தொகுக்கப்பட்டவை.

**1) சரியான சொல்லைத் தெரிந்து இடைவெளியில் எழுதுக.**

1) அம்மா என்னை .................... த்தார் (அலை, அழை, அளை)

2) வீட்டிற்கு .................... வைத்தோம் (வளை, வலை, வழை)

3) அம்மா கறிக்கு .................... விட்டார் (புளி, புலி, புழி)

4) மாட்டின் .................... நீளமானது ( வாழ், வாள், வால்)

5) விழுது விட்டு வளர்வது .................... ( ஆல், ஆழ், ஆள்)

**2) சரியான சொல்லைத் தெரிந்து இடைவெளியில் எழுதுக.**



1) நீர் யார்? ....................

2) நீர் எவற்றை உண்பீர்? ....................

3) உமது நிறம் என்ன? ....................

4) நீர் எங்கு வசிக்கிறீர் ....................

**3. ஒழுங்குபடுத்தி எழுதுக.**

1) நமது / வைத்திருக்க / உடலை / வேண்டும் / சுத்தமாக

..........................................

2) வானொலி / கொடுத்துள்ளது / வேலை வாய்ப்புக்களை / பல / உருவாக்கிக்

..........................................

**4. ஒத்த சொல் தருக**

1) புத்தகம் : .................... 3) தருமம் : ....................

2) அரசன் : .................... 2) விலாசம் : ....................

5) புதிருக்கான விடையைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.

**மேலிருந்து கீழ்**

1) நான்கு தரம் பத்து

2) இனிக்கும் தடி.

3) கடிதம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்

**இடமிருந்து வலம்**

1) மேடையில் நடிப்பது

2) பாடம் என்பதன் குறுகி ஒலிக்கும் சொல்

| | | | |
|---|---|---|---|
| 1 நா | | 2 க | |
| | 4 ம | | |
| 3 ப | | | |
| | | | |

6) கீழேயுள்ள அட்டவணையில் சொற்கள் தரப்பட்டுள்ளன. இச் சொற்களைப் பயன்படுத்தி 4 சொற்களுக்கு குறையாமல் ஐந்து வசனம் எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 1 அழகாக | 2 அனைவரும் | 3 மலிவாக | 4 கலைவிழா |
| 5 பொருட்கள் | 6 தீவு | 7 எங்கள் | 8 உள்ளது |
| 9 இலங்கை | 10 பெற்றோரை | 11 சந்தையில் | 12 உடற்பயிற்சி |
| 13 கவர்ந்தது | 14 மாணவர்கள் | 15 உள்ளன | 16 ஓர் |
| 17 அழகிய | 18 செய்தனர் | 19 வகுப்பு | 20 மிகவும் |

7) பெயர்ச் சொற்களையும் வினைச்சொற்களையும் எழுதுக.

| | பெயர்ச்சொல் | வினைச்சொல் |
|---|---|---|
| மரம் விழுந்தன | | |
| சிங்கம் ஓடியது | | |
| குமார் பாடினான் | | |
| பூனை பதுங்கியது | | |
| புத்தகம் விழுந்தது. | | |



8) பிழைகளை திருத்தி எழுதுக

1) தொளில் : ..........................................................

2) உளவர் : ..........................................................

3) காத்து : ..........................................................

4) விலையாட்டு : ..........................................................

9) நீண்டு ஒலிக்கும் சொற்களை தருக.

1) வட்டம் : ..........................................................

2) சிலை : ..........................................................

3) தொட்டி : ..........................................................

4) மலை : ..........................................................

5) பட்டு : ..........................................................

10) உயிர்க்குறிகள் வரும் சொற்களை வட்டமிடுக


தனம்
கடல்
பாடம்
வரம்
சோதி
மைனா

11) சரியான சொற்களை புள்ளிக்கோட்டில் எழுதுக

| | | | |
|---|---|---|---|
| **1.** பா.......ம் | (ன, ண) | **4.** க......குவியல் | (ற், ட்) |
| **2.** குடி.......ர் | (நீ, னீ) | **5.** மகி......ச்சி | (ழ், ல்) |
| **3.** தண்......ர் | (ணீ, னீ) | **6.** கு......வி | (று, ரு) |

# தி.மு.க.வின் டெசோ மாநாடு காலம் கடந்த முடிவாகும்

## பா.ஜ.க. குற்றச்சாட்டு



இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக சென்னையில் தி.மு.க. நடத்திய டெசோ மாநாடு காலம் கடந்து தி.மு.க எடுத்த முடிவென பா.ஜ.க. தலைவர் வெங்கையா நாயுடு குற்றஞ்சாட்டியுள்ளார்.

டெசோ மாநாட்டில் தி.மு.க. நிறைவேற்றிய தீர்மானங்கள் குறித்து வெங்கையா நாயுடு கருத்துத் தெரிவிக்கையில்,


போரினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு ஆதரவுக் கரம் நீட்ட வேண்டும் என நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் பா.ஜ.க. குரல் கொடுத்தது. ஆனால் மத்திய அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மத்திய அரசில் தி.மு.க. அங்கம் வகித்தபோதும் அக்கோரிக்கைகளை நிர்ப்பந்திக்கவில்லை. இது துரதிஷ்டவசமானது.

இலங்கைப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியாகத் தீர்வு காண வேண்டும் என்று இலங்கைக்கு ராஜ்ய ரீதியாக மத்திய அரசு நெருக்கடி கொடுக்க வேண்டும் என்று கடந்த மூன்று ஆண்டுகளாக் திமுக எக்கோரிக்கையும் விடுக்கவில்லை.

ஆனால் இப்போது ஐ.நா. சபையின் மூலம் இலங்கைத் தமிழர் பிரச்சினைகளுக்கு அரசியல் ரீதியில் தீர்வு காண வேண்டும் என்று கூறுவது காலம் கடந்து எடுத்த நடவடிக்கையாகவே உள்ளது என தெரிவித்துள்ளார்

# ரமழான் சிந்தனை




லைலதுல் கத்ர் இரவு மிகவும் பிரகாசமானதாகவும், தெளிவானதாகவும், அமைதியானதாகவும் இருக்கும். அது அதிக உஷ்ணமானதாகவோ, அதிக குளிரானதாகவோ இருக்காது அதில் சந்திரன் தெளிவாயிருக்கும். அவ்விரவின் ஸுப்ஹ் வரை வானிலுள்ள நட்சத்திரங்கள் ஷைத்தானின் மீது எறியப்பட மாட்டா. மறுநாள் காலையில் சூரியன் சுடரின்றி உதயமாகும். வட்டமானதாக பௌர்ணமி நிலாவைப் போன்றிருக்கும்

நூல் : அஹமத்

(105)

# அவுஸ்ரேலியா செல்ல முயற்சி 3 இலங்கை அகதிகள் கைது!



காரைக்காலில் இருந்து அவுஸ்ரேலியா செல்ல திட்டமிட்டிருந்த இலங்கை அகதிகள் மூன்று பேர் கைது செய்யப்பட்டனர்.

காரைக்கால் துறைமுகத்தில் சந்தேகத்திற்கிடமாக நின்றிருந்த படகை காரைக்கால் பொலிஸார் சோதனை செய்தனர்.

அதில், நான்கு மூடை தண்ணீர் பைக்கற் 1,500 லிட்டர் டீசல் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதுதொடர்பாக, படகின் உரிமையாளரான காரைக்கால் மேட்டைச் சேர்ந்த ஜமுனா, அவரது கணவர் செல்வமணியிடம் பொலிஸார் விசாரணை நடத்தினர்.

ஜமுனாவின் உறவினர்களான சென்னை புழல் காவாங்கரை இலங்கை அகதிகள் முகாமில் உள்ள மோகன்குமார் என்கிற நிர்மல்குமார்(43), ரகுபதி என்கிற குட்டிகண்ணன்(43), ஜெயபால்(60), ஆகியோருக்காக, செல்வமணி 26 இலட்சம் ரூபாயில் படகு வாங்கிக் கொடுத்ததும், அந்தப் படகில் ஜமுனாவின் உறவினர்கள் அவுஸ்ரேலியாவுக்கு தப்பிச் செல்ல திட்டமிட்டுள்ளதும் தெரிய வந்தது. மூன்று இலங்கை அகதிகளையும் போலீசார் கைது செய்தனர்

இந்தியச் செய்திகள்

# சுதந்திர தினத்தையொட்டி உச்சநிலைப் பாதுகாப்பு



இந்தியாவின் 66ஆவது சுதந்திர தினம் இன்று நாடு முழுவதும் கொண்டாடப்பட உள்ள நிலையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

ஆகஸ்ட் 15, 1947ஆம் வருடம் இந்தியா பிரித்தானிய ஆட்சியர்களிடமிருந்து சுதந்திரம் பெற்றது. எனவே ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் 15ஆம் திகதி சுதந்திர தினம் இந்தியாவில் கொண்டாடப்படுகிறது

இந்நிலையில் இன்று சுதந்திர தினம் கொண்டாடப்படவுள்ள நிலையில், தலைநகர் புதுடில்லி மற்றும் மும்பை, கொல்கத்தா, பெங்களூர், சென்னை உள்ளிட்ட முக்கிய நகரங்களில் பொலிஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக மக்கள் கூடும் இடங்களான இரயில் நிலையம், பேருந்து நிலையம் போன்ற இடங்களில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஏற்கனவே இந்தியாவின் முக்கிய நகரங்களில் வான் தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் சதித்திட்டம் தீட்டியுள்ளதாக உளவுத்துறை அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :

முகவரி :


பிறந்த ஆண்டு :

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.


# விரைவில் அறிமுகமாகிறது விலை குறைந்த "லப்டொப்"



மேம்படுத்தப்பட்ட அம்சங்கள் மற்றும் வேகமாக செயல்படக் கூடிய உலகின் மிக விலை குறைந்த லப்ரொப் ஆகாஷ் கணினி விரைவில் அறிமுகப்படுத்த உள்ளதாக மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் கபில் சிபல் கூறியுள்ளார்.

உலகின் மிக விலை குறைந்த லப்ரொப் என்கிற ஆகாஷ் என்ற திட்டதின் கீழ் இந்திய மாணவர்களுக்கு அறிமுகபடுத்த உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஆகாஷ் திட்டம் அடுத்த ஆண்டு ஜுன் மாதம் மும்பையில் உள்ள ஐ.ஐ.டி மாணவர்கள் முன்னிலையில் அமைச்சர் கபில் சிபலால் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

இது குறித்து அவர் கூறுகையில், இந்த குறைந்த விலை கணினி பற்றிய யோசனை உலகம் முழுவதும் நிராகரிக்கப்பட்டது. ஆனால் இந்தியாவால் அதை செய்ய முடியாது எனவும் கூறப்பட்டது. ஆனால் இது மனிதவள அமைச்சகத்தில் நான் இருக்கும் போதே செய்ய வேண்டிய கனவு திட்டமாக இதை நினைக்கிறேன்.

இந்தியாவின் அனைத்து மாணவர்களும் இத்திட்டத்தின் மூலம் மேம்பட்ட தொழில்நுட்பத்தை மிக குறைந்த விலையில் உபயோகிக்க முடியும் என்று கருதுகிறேன்.

முதற்கட்டமாக ரூபா 2,276 மதிப்பிலான 1,00,000 கணினிகளை அடுத்த ஆண்டு ஜுலை மாத தொடக்கத்தில் பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு விநியோகிக்க உள்ளோம் என்று கபில் சிபல் கூறினார்

# கின்னஸ் சாதனை முயற்சி 1500 மாணவிகள் பல்துலக்கல்



(திருநெல்வேலி)

இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையில் கின்னஸ் சாதனை முயற்சிக்காக, நெல்லையில் ஒரே நேரத்தில் ஆயிரத்து 500 மாணவிகள், பல்துலக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டுள்ளது இச்சங்கத்தின் சார்பில் பாளையங்கோட்டையில் உள்ள பள்ளிகளில் மாணவிகள் பற்கள் மற்றும் ஈறுகளை சுத்தமாக வைத்துக் கொள்வதின் அவசியம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது. இதன் ஒரு முயற்சியாக, பாளையங்கோட்டை மேரி சார்ஜென்ட் பள்ளியில், ஒரே நேரத்தில் ஆயிரத்து 500 மாணவிகள் பல் துலக்கும் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இது குறித்துப் பல் டாக்டர் சார்லஸ் பிரேம்குமார் கூறுகையில், பற்களை முறையாக சுத்தம் செய்யாததால், பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன. பெண்களுக்கு மாதவிடாய் உள்ளிட்ட பல்வேறு வயிற்று உபாதைகளுக்கு, பற்களை முறையாக துலக்காதது ஒரு காரணமாக உள்ளது. எனவே, பல்சுத்தம் செய்வதை சிறுவயதில் மாணவர்களுக்கு சொல்லித்தருவது அவசியமாகிறது. தற்போது கின்னஸ் முயற்சிக்காக, ஆயிரத்து 500 பேர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ளனர். விரைவில், நெல்லையில் ஒரே நேரத்தில் 25 ஆயிரம் பேரை நிறுத்தி, பல் துலக்கும் கின்னஸ் சாதனையை மேற்கொள்ளப்போகிறோம், என்றார்.

# சுட்டு வீழ்த்தப்பட்டது சிரிய போர் விமானம்

(டமஸ்கஸ்)

சிரிய விமானப்படைக்குச் சொந்தமான குண்டுவீச்சு விமானமொன்றை தாம் சுட்டு வீழ்த்தியதுடன், அதிலிருந்த விமானமோட்டியையும் கைப்பற்றியுள்ளதாக சிரிய விடுதலை இராணுவம் தெரிவித்துள்ளதனை சிரிய அரசாங்கம் மறுத்துள்ளது.

தாம் சுட்டு வீழ்த்தியவிமானம் ஈராக்கின் எல்லைப்பகுதியில் வீழ்ந்ததாகவும் இரண்டு விமான ஓட்டிகளில் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றவரை தாம் கைது செய்துள்ளதாகவும் சிரிய விடுதலை இராணுவம் தெரிவித்தது.

எனினும் தமது விமானமொன்று விழுந்ததை ஒப்புக் கொண்டுள்ள சிரிய அரசாங்கம் அது தொழில்நுட்ப கோளாறு காரணமாகவே விழுந்ததாகத் தெரிவித்துள்ளது.

இதேவேளை சிரிய விடுதலை இராணுவ கிளர்ச்சியாளர்களால், சிரிய விமானப்படைக்கு சொந்தமான மிக். 23 ரக விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது உறுதிப்படுத்தப்படுமானால், இது அவர்கள் சிரிய அரசாங்கத்திற்கு எதிராக மேற்கொண்டு வரும் தாக்குதலின், முக்கிய கட்டத்தை நோக்கி நகர்ந்துள்ளதாக கருதலாமென பி.பி.சி தெரிவித்துள்ளது.

இதனிடையே அலெப்போ மாகாணத்தைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ள அரச படையினர், அப்பகுதியில் முன்னேறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இப்பகுதியில் நடந்த மோதல்களில் பெருமளவு பயங்கரவாதிகளை தாம் கொன்றொழித்ததாக படையினர் கூறிய போதிலும், உள்ளூர் வாசிகளின் தகவல்களின் படி படையினரின் தாக்குதல்களில் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உலகச் செய்திகள்

# உகண்டா இராணுவத்தின் ஹெலிகள் மாயமாகின

உகண்டா இராணுவத்தினரின் ஹெலிகொப்டர்கள் சில காணாமற் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சோமாலியாவிற்கு பயணித்துக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் கென்ய விமான பரப்பில் வைத்து குறித்த ஹெலிகொப்டர்கள் காணாமற் போயுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது..

சோமாலியாவில் அல் சபாப் ஆயுததாரிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள ஆபிரிக்க ஒன்றிய அமைதி காக்கும் படையிருக்கு ஒத்துழைப்பு வழங்கும் பொருட்டு இந்த ஹெலிகொப்டர்கள் சென்றதாக கூறப்படுகின்றது.

எனினும் காணாமற் போன ஹெலிகொப்டர்களின் எண்ணிக்கை மற்றும் அதிலிருந்தவர்கள் தொடர்பான தகவல்களை உகண்டா இராணுவம் வெளியிடவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை மேற்கொள்ளப்படுவதுடன், தேடுதல் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக உகண்டாவின் மக்கள் பாதுகாப்பு படை கூறியுள்ளது

# ஈரானுக்கு உதவிகள் வழங்க முன்வந்தது அமெரிக்கா



நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட ஈரானுக்கு உதவிகளை வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது.

நெருக்கடியான நிலைமைகளில் உதவுவதற்கு அமெரிக்கா எப்போதும் தயாராகவுள்ளது என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அமெரிக்க மக்கள் சார்பில் அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதாக வெள்ளை மாளிகையின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

அணுத்திட்ட சர்ச்சைகள் தொடரபில் அமெரிக்காவும் ஈரானும் கருத்து முரண்பாடுகளை கொணடுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஈரானில் ஏற்பட்ட இரண்டு பாரிய நிலநடுக்கங்கள் காரணமாக 300 இற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளதை அந்த நாட்டு சுகாதார அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

ஆயிரக்கணக்கானவர்கள் காயமடைந்து தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்

இதேவேளை் நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்புக்களை அடுத்து மீட்புப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நிலநடுக்கத்தினால் வீடுகளை இழந்த 16,000 பேருக்கான உதவிகளை ஈரான் செம்பிறைச்சங்கம் வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அனைவரும் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மீட்புப்பணிகள் நிறுத்தப்பட்டுள்ளதாக அந்த நாட்டுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

எனினும் நிலநடுக்கத்தினால் காணாமற் போன சிலர் இது வரை கண்டுபிடிக்கப்படவில்லை

# மனித வெடிகுண்டுகளாக சோமாலிய குழந்தைகள்

சோமாலியாவில் குழந்தைகளைக் கடத்தி, அவர்களை கட்டிப் போட்டு கொடுமைப்படுத்தி தற்கொலைப் படைக்கு தயார்படுத்தி வருவது தற்போது தெரியவந்துள்ளது.

வன்முறை மற்றும் வறுமை தலைவிரித்தாடும் சோமாலியாவில் இஸ்லாம் உண்டு, உறைவிடப் பள்ளி என்ற பெயரில், இந்தச் சிறுவர்களுக்கு அல்கொய்தா அமைப்பு தீவிரவாத பயிற்சியை அளித்து வருகிறது.

அதுவும் 10 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை கடத்தி வந்து சங்கிலியால் படுக்கையில் கட்டி வைத்து கொடுமைப்படுத்துகின்றனர்.

மேலும் தற்கொலைப் படையாக மாறி உயிர்விடுவதன் மூலம், சொர்க்கத்திற்குப்போக முடியும் என்று கூறி தங்களுக்கு ஏற்றவாறு குழந்தைகளை தயார்படுத்துகின்றனர்.

இதுபற்றி தகவல் அறிந்த அந்நாட்டு அரசு, மதப்பள்ளிகளை சோதனையிட உத்தரவிட்டது. இதையடுத்து நடந்த சோதனையில், சர்ச்சைக்குரிய மதப்பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் உள்ளிட்ட 200 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.



இதுபற்றி தீவிரவாத துப்பறிவாளர் நெயில் டோயில் என்பவர் புகைப்பட ஆதாரங்களை வெளியிட்டுள்ளார்.

ஆனால் தீவிரவாத பயிற்சி என்பதை ஆசிரியர்கள் மறுத்ததுடன், வகுப்புக்கு ஒழுங்காக வராததால் அவர்கள் கட்டி வைக்கப்பட்டதாகத் தெரிவித்தனர்.

# தலிபான் தலைவர்களை விடுதலை செய்யப்பேச்சு




தலிபான் ஆதரவில்லாமல் ஆட்சி நடத்துவது இயலாத காரியம் என்பதை புரிந்து கொண்ட ஆப்கானிஸ்தான் அரசு தாலிபான்களுடன் அமைதிப்பேச்சுவார்த்தை நடத்துவதற்காக பல வழிகளில் முயன்று வருகின்றன.

இதில் ஒரு கட்டமாக பாகிஸ்தான் சிறையில் அடைக்கப்பட்டுள்ள தலிபான் முன்னணித் தலைவர்களை ஆப்கானிஸ்தான் அரச பிரதிநிதிகள் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். தலிபான் தலைவர் முல்லா முஹம்மத் ஒமரின் முக்கியமான உதவியாளர் எனக் கருதப்படும் முல்லா அப்துல் கனி பரத்தை ஆப்கானிஸ்தான பிரதிநிதிகள் சந்தித்துள்ளனர்.

அப்துல் கனி கடந்த 2010 ஆம் ஆண்டு பாகிஸ்தான் படையினரால் கைது செய்யப்பட்டு அங்குள்ள சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்த பேச்சுவார்த்தையின் போது நிபந்தனைகளின் அடிப்படையில் அவர் பேச்சுவார்த்தைக்கு ஒத்துக் கொண்டிருப்பதாக ஆப்கான் அரச பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

முல்லா அப்துல் கனியை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ள அந்தப் பிரதிநிதிகள், அவருடன் சிறையில் உள்ள மற்ற தலிபான் தலைவர்களையும் விடுவிக்க ஆப்கானிஸ்தான் அரசு வலியுறுத்தும் எனத்தெரிவித்துள்ளனர். இவர்களின் விடுதலை சம்பந்தமாக இரு நாட்டு அரசுகளும் பேசி விரைவில் முடிவெடுக்கத் தீர்மானித்துள்ளனர்

# பரமர் சங்கமம்



"நடக்கும் என்பார் நடக்காது. நடக்காதென்பார் நடந்துவிடும்" தேர்தலையோ யுத்தத்தையோ சொல்லேல்ல நாம ஒன்றை நினைச்சுக் கொண்டு ஒண்டைப் பற்றிச் சொல்லப் போக அதின்ர விளைவு வேறொன்றாக வருவதைத்தான் சொன்னன்.

இதைத்தான் "அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிச்சேண்டும்" சொல்லுறவையெல்லேஇண்டைக்கு இருபத்தாறு வருடங்களுக்கு முன்பாக மறைந்த மக்கள் எழுத்தாளர் கே.டானியல் கூட்டங்களில் உரையபற்றும் போது பல குட்டிக் கதைகளை எடுத்து விடுவார்.

ஒருமுறை சொன்ன குட்டிக்கதை இவ்வாறு அமைந்தது. மது ஒழிப்புப் பிரசாரத்தை மேற்கொண்டு வந்த பிரசாரகர் அதைப் பற்றி விலா வாரியாக எடுத்துக் கூறிவிட்டு செயல் முறையிலும் அதனைச் செய்து காட்டினார்.

அதற்காக அவர் தேவைய்யான பொருட்களையும் கையோடு எடுத்து வந்திருந்தார். அத்தியாவசியமான இரண்டு கிளாஸ்களையும் தண்ணீரையும் அங்கே பெற்றுக் கொண்டார்.

மேடையில் சகலரும் பார்க்கக்கூடியதாக மேசையில் இரண்டு கிளாஸ்களையும் வைத்தார். ஒன்றில் தண்ணீரை நிரப்பினார். மற்றொன்றில் சிறு போத்தலில் எடுத்து வந்த சாராயத்தை ஊத்தினார்.

அதனையும் சபையோருக்கு விளக்கமாகக் கூறிய பிராசாரகர் காகித உறையில் எடுத்து வந்திருந்த 'நாக்கிளிப்' புழுக்கள் இரண்டை ஒவ்வொன்றாக அந்த கிளாஸ்களில் போட்டார்.

சாராயத்தில் போட்ட புழு கொஞ்ச நேரம் துடிதுடித்து விட்டு அடங்கி விட்டது. தண்ணீரிலே போட்ட புழு நீண்ட நேரமாக உயிரோடு இருந்தது. பிரசாரகர் அதனைச் சுட்டிக்காட்டி தன்னுடைய இலக்கை வென்றதாக நினைத்துக் கொண்டு நிம்மதி பெரு மூச்சை விட்டார்.

அப்போது விரைந்து வந்த ஒருவர் அவரது செய்கை மூலமாக தானொன்றைக் கற்றுக் கொண்டதாகவும், தன்னுடைய வயிற்றில் புழுக்கள் அதிகம் இருந்து தொல்லை தருவதாகவும் இனிமேல் சாராயத்தை குடிக்கப்போவதாகவும் கூறினாரே பார்க்கலாம்.

இவ்விதம் மாறுபட்ட கருத்துக்களை சில உபதேசங்களும், விளம்பரங்களும் செய்து வருவதைப் பாரகக் காணலாம். அவ்வாறு நம்நாட்டு ஒலிபரப்பு கூடகமொண்டு பண்பலை, FM அலைவரிசையில் சமீபத்தில் அடிக்கடி செய்து வருகிறது.

அதனது பதின்நான்காவது ஆண்டு நிறைவை ஒட்டி சூரியன்னாக் காசுதான். என்னும் பரிசு வழங்கும் நிகழ்ச்சியைப் புதிதாகச் சேர்த்துள்ளது. அதனூடாக ஆயிரக்கணக்கான ரொக்கப்பரிசுகளை வழங்குவதாகவும் பறைசாற்றுகிறது.

அடிக்கடிசூரியன்னா சும்மாவா "சூரியன்னாக் காசுதான்" எண்டு ஒலிபரப்பிக் கொண்டிருப் பதைக் கேட்டு வானொலிப் பிரியர்கள் அவ் அலைவரிசையை நிறுத்தி வருகின்றனர். எண்டால் பொய்யே பின்னை... எல்லாத்துக்கும் காசெண்டால் சனம் மூடாதே சொல்லுங்க பாப்பம்....

# நெடுந்தீவில் சமூக விழிப்புணர்வுக்கு வழிசமைத்த கலந்துரையாடல்


(நெடுந்தீவு)

நெடுந்தீவில் பிரதேச சமூக விழிப்புணர்வு கலந்துரையாடல் நேற்றுக் காலை 10.00 மணிக்கு நெடுந்தீவு மேற்கில் அமைந்துள்ள மங்கையற்கரசி வித்தியாலயத்தில் வித்தியாலய அதிபர் திருமதி கலைவாணி நடராசலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நெடுந்தீவுப் பிரதேச சபை தவிசாளர் தானியேல் றெக்சியன், நெடுந்தீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏக்கநாயக்க மற்றும் பொலிஸ் அதிகாரிகள், பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் எ.டபிள்யூ. அரியநாயகம், சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் ஏகாம்பரம் சச்சிதானந்தம், பிரதேச சபை உறுப்பினர் சின்னப்பு எட்வேட்ராசா மற்றும் பாடசாலை ஆசிரியர்கள், செஞ்சிலுவச் சங்க உபதலைவர் நல்லதம்பி தர்மகுமார், கிராம அலுவலர் பசுபதி கதிரேசு, நன்னிதம்பி நடராசா, கோபாலு சண்முகலிங்கம், ஏனைய பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இக்கூட்ட அமர்வில் நெடுந்தீவுப் பகுதியில் மாணவர்களது ஒழுக்கங்களும் அவர்களது கல்வி நடவடிக்கைகளும் பெற்றோரின் பாதுகாவலரின் பங்களிப்புக்கள் பற்றியும் கல்வி வளர்சியில் ஆசிரியர்களின் அர்ப்பணிப்புக்கள் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டதோடு கல்வி வளர்சிக்காக அயராது உழைக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் நன்றியைக் கூறிக் கொண்டார்கள்.

நெடுந்தீவு மங்கையற்கரசி வித்தியாலய ஆசிரியர்களும் மாணவர்களும் இணைக்கப்பட்டு கலந்துரையாடல் நடைபெற்றது.



# வியாபாரத்தை அதிகரிக்க கவனயீர்ப்புப் பேரணி

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதம தபாலக ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் இணைந்து தமது வியாபார நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் வியாபாரம் சார் கவனயீர்ப்பு ஊர்வலமொன்றை நேற்றுக்காலை யாழ். நகரில் நடத்தினர்.

தபால் திணைக்களம் அதன் வியாபார நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் நேற்று முதல் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை வியாபார அபிவிருத்தி வாரம் ஒன்றை பிரகடனப்படுத்தியிருந்தது.

இந்நிகழ்வில் அஞ்சல் மா அதிபர் டி.எல்.பி.ஆர்.அபேரத்ன, வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் என்.ரட்ணசிங்கம் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

முன்னதாக யாழ். பிரதம தபாலகத்திலிருந்து ஆரம்பமாகிய ஊர்வலத்தில் 4 மணி நேர விரைவு கூரியர் சேவை மோட்டார் சைக்கிள் வண்டிகள், தபால் விநியோக வாகனங்கள், விளம்பரக் காட்சிப்படுத்தல்களுடன் ஊர்வலம் நகர்ந்து காங்கேசன் துறை வீதி, வைத்தியசாலை வீதி வழியாக நகரைச் சுற்றி வலம்வந்தது.

இந்த ஆரம்பநாள் நிகழ்வில் பெருமளவு வடமாகாணத் தபால் திணைக்கள ஊழியர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு ஆரம்ப வைபவத்தில் உரையாற்றிய அஞ்சல் மா அதிபர் நாயகம் தெரிவிக்கையில்,

வடபகுதி அஞ்சல் திணைக்களத்தின் அபிவிருத்திக்கு தம்மாலான சகல நடவடிக்கைகளையும் வழங்குவதாக உறுதியளித்துள்ளதுடன், இந்தப் பிரதேசத்தின் அஞ்சல் சேவையை அபிவிருத்தி செய்வதில் உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் திறமையாகச் செயற்பட்டுவருவதனை அவதானிக்க முடிந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## பணிப்பகிஷ்கரிப்பு...

பல்கலைக்கழக வீதியால் நகர்ந்து சென்று யாழ். பரமேஸ்வரா சந்தியில் நின்றவாறு தமது கவன ஈர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். இவ் ஒருமணி நேர போராட்டத்தையடுத்து பி.ப. 1.00 மணியளவில் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரியர்களின் இத்தகைய போராட்டத்திற்கு உயர் கல்வி அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்பன தீர்வு காணுவதில் இழுத்தடிப்புச் செய்து வருவதாக அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (பா)

# வர்த்தகப் பரிவர்த்தனை பற்றிய ஆய்வு யாழில்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் வர்த்தக பரிவர்த்தனை முறைமையில் பெருந்தொகையான பொருட்கள் பயன்பாட்டை இழந்து வருகின்றன. இதனை ஆய்வுசெய்யும் நோக்கில் ஜெய்க்கா நிறுவனம் நாடு முழுவதும் ஆய்வு ஒன்றை மேற்கொண்டு வருகிறது.

இதன் ஒருகட்டமாக தற்போது யாழ்ப்பாணத்து சந்தைகளில் விவசாய உற்பத்திப் பண்டங்களின் வர்த்தகப் பரிவர்த்தனை பற்றி ஆய்வு செய்து வருகிறார்கள். கடந்த 13 ஆம் திகதி யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்கு நேரடியாக விஜயம் செய்து பாற்பொருள் உற்பத்தி விற்பனை நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்தனர்.

நமது நாட்டில் 40 வீதமான பொருட்கள் சந்தைப்படுத்தல் நடைமுறைகளின் போது சேதமாக்கப்பட்டும் காலாவதியாக்கப்பட்டும் பயன்பாடு இழந்து போவதாக இதன்போது அவர்கள் தெரிவித்தனர். (120)

# பிரச்சினைக்குத் தீர்வுகாண ஐ.நா. சபையால் முடியாது

(சென்னை)

ஐக்கிய நாடுகள் சபையால் இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்று இலங்கையில் உள்ள புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்ரமபாகு கருணரத்ன சென்னையில் தெரிவித்துள்ளார். டெசோ மாநாட்டில் பங்கேற்க இந்தியா சென்ற அவர் செய்தியாளர்களிடம் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண ஐ.நா.வை கேட்டுக் கொள்ளும் தீர்மானங்கள் டெசோ மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஐ.நா. சபையால் இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. அதனால் எந்தப் பலனும் ஏற்படாது. வெறும் விளம்பரம் மட்டுமே கிடைக்கும்.

உலகெங்கும் உள்ள தமிழர்களைக் குறிப்பாக தமிழகத்தில் உள்ளவர்களைத் திரட்டி எழுச்சி ஏற்படுத்துவதன் மூலம் மட்டுமே ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். சென்னையில் நடந்த டெசோ மாநாடு மக்களைத் திரட்டும் முயற்சி என்பதால் அதில் கலந்து கொண்டேன். இதுபோன்ற முயற்சிகள் தொடர வேண்டும்.

தமிழர் மறுவாழ்வுக்காக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இலங்கைப் பிரச்சினையில் இந்திய மத்திய காங்கிரஸ் அரசின் நிலைப்பாடு தவறானதாகும். அதனால் காங்கிரஸ் கூட்டணியில் இருந்து தி.மு.க. வெளியேற வேண்டும். அதற்காகவே நான் இப்போது டெசோ மாநாட்டுக்கு வந்துள்ளேன் என கருணரத்ன தெரிவித்துள்ளார்.

## இந்தியா...

பட்டுள்ள மனித உரிமைகள் தொடர்பான அறிக்கை ஐ.நா.வுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவும் அரசசார்பற்ற நிறுவனங்களும் தனித் தனியான அறிக்கைகளை ஏற்கனவே சமர்ப்பித்துள்ளன.

## வர்த்தக...

இம்டிட்டி பகுட்ஸ் ஆகியோர் கைச்சாத்திட்டனர். இரு நாட்டின் தலைவர்கள் முன்னிலையில் இவ்வொப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

## டில்லி....

வடக்கு, கிழக்கு பிரச்சினை, அரசியல் தீர்வு, சம்பூர் அனல் மின்திட்டம், மீனவர்கள் பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்திய இந்தியா இம்முறை சீனா பற்றிய விவகாரத்திலேயே அதிக கவனம் செலுத்துவதால் அரசின் முன்னைய அறிக்கை காலாவதியாகி விட்டதாக இந்தியத் தரப்பு கருதுகிறது. இதனால் புதிய கோணத்தில் விடயங்கள் ஆராயப்படுகிறது.

## யாழ்ப்பாணத்தில்...

இந்நிகழ்வில் இந்திய துணைத் தூதரக அதிகாரிகள், இந்திய விசா அனுமதி அலுவலக அதிகாரிகள் மற்றும் யாழ். இந்தியன் வங்கிக் கிளை அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (பா)

## தெரிவுக்குழு...

இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார். நாடாளுமன்றத் தெரிவுக்குழு பற்றி அரசு கூறிவரும் இந்நிலையில் நாம் மாகாண சபைத் தேர்தலுக்கு முகம் கொடுத்துள்ளோம். இத்தேர்தலில் நான்கு கட்சிகளுக்குத்தான் ஆசனங்கள் பங்கிடப்படவுள்ளன.

எமது வாக்குகள் பிரிக்கப்பட்டால், அது எமது பிரதிநிதித்துவத்தை குறைத்துவிடும். ஒரு வாக்குக்கூட ஒரு பிரதிநிதியை இழக்கச் செய்யலாம். நாங்கள் இம் மாகாண சபையை அறுதிப் பெரும்பான்மையுடன் கைப்பற்ற வேண்டும். அதன்மூலம் சர்வதேசம் எமது கோரிக்கையின் உறுதித் தன்மையைப் புரிந்துகொண்டு அவர்களின் முயற்சியைத் தொடர்ந்து மேற்கொண்டு நிலையான தீர்வுக்கு உதவுவார்கள். நாங்கள் மௌனித்து உற்சாகமிழந்து விட்டால் எமது தீர்வு முயற்சியிலும் அவர்கள் அக்கறைகொள்ள மாட்டார்கள்.

ஆகவே, இத்தேர்தல் மிகவும் முக்கியமான கட்டத்தில் வந்துள்ளதை தமிழ் மக்கள் உணர வேண்டும். எங்களுக்கு எங்கள் பிரச்சினையில் அக்கறை இல்லை என்றால் அவர்களுக்கும் அக்கறை இருக்கப் போவதில்லை. எனவே, அரசின் முயற்சிக்கு உதவாமல் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு அதிகப்படியாக வாக்களித்து எமது உறுதிப்பாட்டைக் காட்ட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அரசின் அபிவிருத்தி....

பிரச்சினையை ஏற்படுத்தியும் மக்களை அவல நிலைக்கு தள்ளுவதற்கு வழி அமைக்கப்படுகின்றது. அபிவிருத்தியின் விளைவாக எத்தனையோ மக்கள் தமது வாழ்விடங்களை விட்டும் தண்ணீர் இன்றியும் அல்லல்பட்டுக்கொண்டிருக்கின்றனர். 20 அடி ஆழமான முத்தையன்கட்டுக் குளத்திலிருந்து 60 அடி ஆழம்வரை கல் அகழ்ந்து எடுக்கப்படுகின்றது. இதனால் தண்ணீர் இல்லாது விவசாயத்தை மேற்கொள்ளமுடியாமல் அந்தப் பகுதி மக்கள் பெரும் அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

முத்தையன்கட்டுப் பகுதியில் "நியார்ப்" திட்டத்தில் அமைத்துக் கொடுக்கப்பட்ட 200 வீடுகளிலும் வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. கல்லுகள் உடைக்கப்படுவதனால் வீதிகள், குளக்கட்டுகள், வீடுகளில் தண்ணீர் வற்றிப்போகின்றன. இவ்வாறு அவலமான நிலையில் மக்கள் வாழ்கின்றனர்.

இரணைமடுக்குளத்திற்கு அருகில் விமான நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இரணைமடுக்குளத்தில் 34 அடி ஆழம்வரை தண்ணீர் தேக்கிவைக்கப்பட்டுள்ளது. இதனால் அந்தப் பகுதியில் உள்ள வயல்களுக்கு தண்ணீர் இல்லாததால் பயிர்கள் கருகிப்போயுள்ளன.

பிரச்சினைகள் அதிகரித்துக் கொண்டுசெல்கின்றதே தவிர தீர்வுகள் எட்டப்படவில்லை. அபிவிருத்தி சரியான பாதைக்கு சென்றால் இன்ப்பிரச்சினை தீர்ந்துவிடும் என அரசாங்கம் தெரிவிப்பது தமிழ் மக்களை ஏமாற்றும் செயலாகவே இருக்கின்றது.

அத்துடன், காடுகள் அழிக்கப்படுகின்றது. இவ்வாறு ஒரு பகுதி காடு அழிக்கப்பட்டுவருகின்றன. இன்னொரு பகுதியில் மக்கள் அவலப்பட்டுபோகின்றார்கள். இதற்கான பதிலை ஊடகங்கள் மூலமாகவே பெற்றுக்கொள்ள விரும்புகின்றோம் என்றார்.

## கணினி மயமாகிறது...

தற்காலிக படுக்கைகளை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் பிரேத அறையில் உரிமை கோரப்படாத நிலையில் உள்ள சடலங்களை அடக்கம் செய்வதற்கு புதிய இடமொன்றை தெரிவு செய்யும் வரையில் கோம்பையன் மணல் மயானத்தின் ஒரு பகுதியை தற்காலிகமாக பாவிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் வைத்தியசாலையிலுள்ள கட்டில்கள் நீர்க்குழாய்களை உடனடியாகத் திருத்தம் செய்யுமாறும் விக்ரோரியா வீதிப் பகுதியில் மருத்துவர்களின் மோட்டார் சைக்கிள் தரிப்பிடமொன்றை அமைப்பதற்கேற்ற வகையில் அப்பகுதியை உடனடியாக யாழ். மாநகர சபை மூலம் துப்பரவு செய்து கொடுக்குமாறும் துறைசார்ந்தோரிடம் பணிப்புரை வழங்கிய அமைச்சர், எதிர்காலங்களில் வைத்தியசாலை நிர்வாகத்தினரால் முன்னெடுக்கப்படும் செயற்திட்டங்கள் அனைத்தும் அபிவிருத்திக் குழுவின் சிபார்சுக்கமைய முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

வெளிநோயாளர் பிரிவில் காணப்படும் இடர்பாடுகளுக்கு உரிய முறையில் தீர்வு காணப்படும் வகையில் அதன் செயற்பாடுகளை கணினி மயப்படுத்த வேண்டுமெனவும், வைத்தியர் விடுதியில் காணப்படும் குறைபாடுகளுக்கு உடனடியாகத் தீர்வு காணுமாறும் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலை தொடர்பில் கவனம் செலுத்தி அதன் புனரமைப்புக்கு உதவிய அமைச்சருக்கு வைத்தியசாலை நிர்வாகமும், அபிவிருத்திக் குழுவும் தமது நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளன.

இக்கலந்துரையாடலில் மேலும் பல்வேறு விடயங்கள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. இதன்போது பிரதிப்பணிப்பாளர் டாக்டர் ஸ்ரீபவானந்தராஜா உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் உடனிருந்தனர்.

# கிராமிய வாழ்வு சுபீட்சமானது



(யாழ்ப்பாணம்)

கிராமங்களை பின்தங்கிய பிரதேசங்கள் எனக்குறிப்பிடப்படும் கருத்தியல் நிலையை மாற்றம் அடையச் செய்யவேண்டுமென ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவிததுள்ளார்.

தெல்லிப்பளை கிழக்கு கலைச்செல்வி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நிகழ்வு கடந்த ஞாயிறு கலைச்செல்வி சனசமூக நிலையத் தலைவர் சிறிஸ்கந்தராஜா தலைமையில் நடைபெற்ற போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், கிராமங்கள் எனக் குறிப்பிடப்படும் பிரதேசங்கள் யாவும் பின்தங்கிய பிரதேசங்கள் என கூறப்படும் கருத்தியல் நிலை மக்கள் மத்தியில் மேலோங்கியுள்ளது ஆனால் ஏனைய பிரதேசங்களை விட கிராமங்களிலேயே சுதந்திரமாகக் கல்வியைத் தொடரக்கூடிய சூழல், அமைதியான வாழ்க்கைமுறை என ஒரு சுபீட்சமான வாழ்வு கிடைக்கின்றது. எனவே பின்தங்கிய கிராமங்களின் அபிவிருத்திகளை மேம்படுத்த பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை கௌரவ அமைச்சர் அவர்களும் நாமும் செயற்படுத்தி வருகின்றோம் என்றும் தெரிவித்தார்.

முன்பள்ளி சிறார்களுக்கான கல்வியை ஊட்டுகின்ற செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள முன்பள்ளி ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பில் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம் என அவர் மேலும தெரிவித்தார்.

மாணவர்களின் பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளுடன் இடைவேளை நிகழ்வாக இசையும் அசைவும் இடம்பெற்றது. தொடர்ந்து போட்டி நிகழ்வுகளில் வெற்றியீட்டிய சிறார்களுக்கான பரிசில்களை நாடாளுமன்ற உறுப்பினர் உதயன், மற்றும் நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகள் வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் வட்டுக்கோட்டைப் பிரதேச அமைப்பாளர் வள்ளுவன், கட்டுவன்புலம் மகா வித்தியாலய அதிபர் பத்மநாதன், தெல்லிப்பளை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் சிவஞானம், வலி வடக்கு பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் செல்வரஞ்சனா மற்றும் பெற்றோர் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# எஸ்.எம்.எஸ்.இல் முறையிடலாம்

(கொழும்பு)

குறுந்தகவல் (எஸ்.எம்.எஸ்.) மூலம் பொலிஸாரை பொதுமக்கள் தொடர்புகொள்வற்கான திட்டமொன்றை பொலிஸ் திணைக்களம் அறிமுகப்படுத்தவுள்ளது. டெல்ஐ.ஜி.பி. எனும் மின்னஞ்சல் சேவையொன்றை ஒரு வருடத்திற்கு முன் அறிமுகப்படுத்திய பின் மற்றொரு நடவடிக்கையாக எஸ்.எம்.எஸ். திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

பொலிஸ் தினத்தை முன்னிட்டு செப்டெம்பர் 3 ஆம் திகதி இத்திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. எந்த செல்லிட தொலைபேசி வலையமைப்பு ஊடகாவும் பொலிஸாரை தொடர்புகொள்ள முடியும் எனத் தெரியவருகின்றது.

# மேல்மாகாண மாணவர்களுக்காக 100 பஸ்கள் புதிதாக சேவையில்

(கொழும்பு)

மூன்றாம் தவணைக்காக பாடசாலை ஆரம்பிக்கப்படும் போது விசேட மாணவர் பஸ்கள் 100 இனை சேவையில் ஈடுபடுத்துவதற்கு மேல்மாகாண போக்குவரத்துச் சபை தீர்மானித்துள்ளது.

தேசிய போக்குவரத்து அதிகார சபை மற்றும் மேல் மாகாண போக்குவரத்து அதிகார சபை இணைந்து இந்நடைமுறையை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்கள் நன்மை பெறும் பொருட்டு தொடர்ச்சியாக இந்த சேவையினை குறைந்த கட்டணங்களில் வழங்குவது இத்திட்டத்தின் நோக்கம் என போக்குவரத்துச் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை களுத்தறை மற்றும் கம்பஹா மாவட்டங்களிலும் இச்சேவையினை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


# மன்னாரில் புதிய மேல் நீதிமன்றம்



அரசியல் கைதிகளின் வழக்குகளை துரிதப்படுத்துவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தரவிற்கமைவாக ஸ்தாபிக்கப்பட்ட மன்னார் மேல் நீதிமன்றம் நேற்று திறந்துவைக்கப்பட்டது.

யாழ்ப்பாண மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதனினால் குறித்த நீதிமன்றம் திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில், வவுனியா மாவட்ட மேல் நீதிமன்ற ஆணையாளர் ஏ.எம்.மக்கி, மன்னார் மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி எஸ்.தியாகராஜா, மன்னார் நீதவான் ஏ.யூட்சன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் மாணிக்கம் சபாநாதன்.

**தலைவர் கிளி. மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் இணையம்**

பூநகரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் வளர்ச்சிக்கு கிளி. மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் இணையத்தின் தலைவராக இருந்து அரும்பாடுபட்டு உழைத்த அமரர் மாணிக்கம் சபாநாதன் அவர்களின் கூட்டுறவுச் சேவையினால் கிளிநொச்சி மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் இணையத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று கூட்டுறவு அமைப்புக்களுக்கும் அதன் அங்கத்தவர்களுக்கும், பணியாளர்களுக்கும் அளப்பரிய சேவையாற்றிய அன்னார் எமை விட்டுப் பிரிந்தாலும் அவரது சேவைகளை கூட்டுறவாளர் நாம் என்றும் மறந்துவிட முடியாது. அன்னாரின் பிரிவுத் துயரால் கண்ணீர் சிந்தும் அவரது குடும்பத்தாருக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் கூட்டுறவாளர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பணிப்பாளர், தலைவர், பொதுமுகாமையாளர், பணியாளர்கள், அங்கத்தவர்கள், பூநகரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கிளிநொச்சி.**

(C/1770)

# மாதகலில் ஒரே ஒரு கடற்றொழில் கிராமிய அமைப்பு

## ஏனையவை சட்டபூர்வமானது அல்ல கடற்றொழில் உதவிப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

மாதகல் கடற்றொழிலாளர் கிராமிய அமைப்பு ஒன்று கடந்த யூன் மாதம் 19 ஆம் திகதி மாதகல் பொதுமண்டபத்தில் கிராம சேவையாளர், பங்குகத் தந்தை, கடற்றொழில் பரிசோதகர் முன்னிலையில் ஆரம்பிக்கப்பட்டது. மாதகல் பிரதேசத்தில் மேற்படி சங்கம் மட்டுமே சட்டபூர்வமானது என கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மாதகல் மேற்குப் பிரதேசத்தில் ஒரு குழுவினரால் தனியாக ஸ்தாபிக்கப்பட்ட சங்கம் சட்டபூர்வமானது அல்ல எனத் தெரிவித்து உதவிப் பணிப்பாளர் அனுப்பி வைத்துள்ள செய்தியில்,

கடற்றொழில் உதவிப் பணிப்பாளரோ அல்லது கடற்றொழில் பரிசோதகரோ கலந்துகொள்ளாமல் தன்னிச்சையாக மாதகல் மேற்கில் புதிய கிராமிய அமைப்பு அமைக்கப்பட்டு நிர்வாகத் தெரிவு செய்யப்பட்ட செய்தி பத்திரிகைகளில் வெளியாகியுள்ளது. ஆகவே இக்கூட்டத்தில் திணைக்களத்தின் சார்பில் எவரும் கலந்துகொள்ளவில்லை என்பதால் இத்தெரிவு செல்லுபடியாகாது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் சில பத்திரிகைகளில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கலந்துகொண்டதாகவும் ஜனநாயகம் மீறப்பட்டுள்ளதாகவும் முன்னாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சம்மேளனத் தலைவர் தவரட்ணம் குறிப்பிட்டுள்ளார். இச் செய்தி தவறானது. எனவே மாதகல் மேற்கு கடற்றொழில் கிராமிய அமைப்பு என்ற பெயரில் ஒரு அமைப்பு உருவாக்க முடியாது என்றும் மாதகல் கிராமிய அமைப்பு மட்டுமே இயங்க முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

# 46பேருக்குத் தாதியர் பயிற்சி

(திருநெல்வேலி)

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ்சினால் வீடடுத் தாதியர் பயிற்சிக்கான பட்டறை கைதடி முதியோர் இல்லத்தில் நடைபெற்றது. 46 பேர் இதில் கலந்துகொண்டு பயன்பெற்றனர். சென்.ஜோன்ஸ் அம்புலன்சின் யாழ். மாவட்ட ஆணையாளர் எஸ்.செல்வரஞ்சன், உதவி ஆணையாளர் எஸ்.ஈழநேசன், திருமதி கண்மணி சிவலிங்கம், ஜேர்மன் நாட்டின் ஜொனிட்டர் நிறுவன இலங்கைப் பிரதிநிதி அண்டேர்சன், திருமதி ரட்ணநாயகி சுந்தரமூர்த்தி, திருமதி விக்னேஸ்வரி முத்துவேல், திருமதி யுவபதி கனகரத்தினம் ஆகியோர் இப் பயிற்சிப் பட்டறையை நடாத்தினர். (137)

# 300 ஏக்கர் பயிர்கள் அழியும் தருவாயில்

பல்லவராயன் கட்டு குளத்து நீரை நம்பி 350 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோகச் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகள் வரட்சியால் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளனர். 50 ஏக்கர் பரப்பளவில் உள்ள பயிர்களை கடும் பிரயத்தனத்தின் மத்தியில் காப்பாற்றியபோதும் மிகுதி 300 ஏக்கர் பரப்பளவான பயிர்களை அழிக்க வேண்டியுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (149)

# சிற்பனை முருகனுக்கு கொடியேற்றம்

வேலணை மேற்கு அருள் மிகு சிற்பணை ஆலயத்தின் வருடாந்த மகா உற்சவ விஞ்ஞா பனம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், 25 ஆம் திகதி தீர்த்த உற்சவம் நடைபெற இருக்கின்றது. (85)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஆகஸ்ட் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.